# திருக்குர்ஆன் தீர்ப்பு

## பாகம் -3

(சுவனம் செல்லும்)
சுன்னத்வல் ஜமாஅத்தினரை
(நாம்)
அறிந்துகொள்வது எப்படி?



ஷெய்ஹுல் முப்லிஹீன்
M.S.M. அப்துல்லாஹ் (றஹ்)



# திருக்குர்ஆன் தீர்ப்பு

## மூன்றாம் பாகம்

## பாடம் ஒன்று

(சுவனம் செல்லும்)

சுன்னத்வல் ஜமாஅத்தினரை

(நாம்)

அறிந்துகொள்வது எப்படி?

ஷெய்ஹுல் முப்லிஹீன்
எம். எஸ். எம். அப்துல்லாஹ்(ரஹ்)

வெளியீடு

*அகில இலங்கை தரீக்கத்துல் முப்லிஹீன்*
*கொழும்புக் கிளை*
*இணையதளம்:* www. mufliheen.org
*தொலைபேசி: 011 - 2713565/ 4980227*

| | | |
|---|---|---|
| Title of the Book | : | Thirukkuran Theerpu - Part - 3<br>Suwanam Sellum Sunnathwal Jamaaththinarai<br>Naam Arindukolvathu Eppadi?<br>(How do we recognize the Sunnathwal<br>Jamaath destined to enter the Heaven?) |
| Author | : | Sheihul Mufliheen M. S. M. Abdullah (Rah) |
| First Edition | : | 1991 |
| Second Edition | : | 1996 |
| Third Edition | : | 2002 |
| Fourth Edition | : | 2003 |
| Fifth Edition | : | 2006 |
| Sixth Edition | : | 2011 |
| Copyright | : | All Ceylon Thareekathul Mufliheen |
| Publisher: | : | All Ceylon Thareekathul Mufliheen, Sri Lanka |
| Print By | : | Kumaran Press Pvt Ltd<br>39, 36th Lane , Colombo - 6.<br>T.P. No. 011 2364550, E.mail: kumbhlk@gmail.com |

# பொருளடக்கம்


1. சுவனம் செல்லும் சுன்னத்வல் ஜமாஅத்தினர் என்றால் யார்? 1

2. சுன்னா என்றால் என்ன? 4

3. பித்அத் என்றால் என்ன? 12

4. நரகம் செல்பவர்கள் யார்? 17

5. ஒற்றுமை வேற்றுமை 18

   (1) றசூல்(ஸல்) அவர்களின் கொள்கை 18

   (2) அபூஜஹ்லின் கொள்கை 18

   (3) றசூல்(ஸல்) அவர்களின் கொள்கைக்கு ஆதாரங்கள் 20

   (4) றசூல்(ஸல்) அவர்களின் வணக்கம் 20

   (5) அபூஜஹ்லின் வணக்கம் 21

   (6) றசூல்(ஸல்) அவர்களின் விசுவாசத்தின் சில விபரங்கள் 24

6. ஓர் சந்தேகம் 47

7. இன்னுமோர் ஓர் சந்தேகம்........ 57

8. கவனத்தில் கொள்ளவேண்டிய முக்கியமான விஷயம் 60

بسم الله الرحمن الرحيم

ஆதாரமின்றியே சர்வவல்லமையுமுள்ள காருண்யக்கடலான அல்லாஹ்வுக்கே சர்வ புகழும் உரித்தாகட்டும். மள்ஹருல் அதம்மியான மகான் றசூலே கரீம் முஹம்மது முஸ்தபா றசூல்(ஸல்) அவர்கள் பேரிலும் அவர்களின் ஸஹாபாப் பெருமக்களான, சுன்னத்வல்ஜமா அத்தைச் சேர்ந்த நல்லடியார்கள் பேரிலும், அவர்களைப் பின்தொடர்ந்த மூமீன்கள் பேரிலும் சாந்தியும், சமாதானமும் நிலைப்பதாக. ஆமீன்.

1

# *சுவனம் செல்லும் சுன்னத்வல் ஜமாஅத்தினர் என்றால் யார்?*

**அன்புப்பெருமக்களே!**

**ஹதீஸ்**

இஸ்ரவேலர்கள் 72 கூட்டமாய்ப் பிரிந்தார்கள், என்னுடைய உம்மத்துக்கள் 73 கூட்டமாய்ப் பிரிவார்கள். (இவர்களில்) ஒரு கூட்டத்தினரைத் தவிர மற்றெல்லாக் கூட்டத்தினரும் நரகவாதிகளாவார்கள் என்று கூற யாறசூலுல்லாஹ் (சுவனம் செல்லும்) அக்கூட்டத்தினர் எவர்? என்று தோழர்கள்(ஸஹாபாக்கள்) கேட்ட போது 'நானும் என்னுடைய தோழர்களும் எந்த சுன்னாவில் (வழியில்) அல்லது (வழமையில்) இருக்கிறோமோ அந்த சுன்னாவை எடுத்துக் கொண்டவர்கள்' என்று றசூல் (ஸல்) அவர்கள் கூறினர்.

அறிவிப்பவர் : இப்னு உமர் (றலி)
ஆதாரம் : அபூதாவூத், இப்னுமாஜா

இதைப்போன்ற இன்னும் சில ஹதீஸ்கள் இருக்கின்றன. அவற்றைப் படிப்படியாய் ஆராய்வோம். மேலே காட்டிய ஹதீஸில் சுவனம் செல்லும் கூட்டத்தினரான சுன் னத்வல் ஜமாஅத்தினரின் பொது அடையாளம் தரப்பட்டிருக்கின்றது. றசூல்(ஸல்) அவர்களுடைய காலத்திலிருந்து உலக முடிவு நாள்வரையிலும் வாழ்ந்த, வாழப் போகிற அத்தனை மக்களும் றசூல்(ஸல்) அவர்களுடைய உம்மத்துக்களே என்பதை நாம் ஏற்றிருக்கின்றோம். சிலர் அப்படி ஏற்காவிட்டாலும்கூட முஸ்லீம்களைமட்டு மாவது சிந்தனைக்கெடுத்துப்பார்த்தால், அவர்கள் எத்தனை கோடானகோடி மக்கள்

என்பதை கண்டறிய முடியாது. 72 கூட்டம் நரகம் செல்பவர்களாயும் ஒரே ஒரு கூட்டம் மட்டும் சுவனம் செல்பவர்களாயுமிருப்பதால், மொத்தச் சனத்தொகையில் 1/73 தான் சுவனம் செல்லுமென்றுகொண்டால் நாம் தப்புக்கணக்குப் போட்ட வர்களாவோம். ஏனென்றால், நரகம் செல்லும் 72 கூட்டத்திலுமுள்ள ஒவ்வோர் கூட்டமும் சுவனம் செல்லும் அந்த ஒரு கூட்டத்தைவிட அதிகமானவர்களாயும் இருக்கலாமல்லவா? ஆதலால் சுவனம் செல்லும் மூமீன்கள் மிகமிகச் சொற் பமானவர்களாயும் நரகம் செல்வோர் மிகப் பெரும்பான்மையினராகவும் தான் இருப்பார்கள்.

**குர்ஆன்: 2:88**

(ஈமான்) விசுவாசங்கொள்வோர் சிறுபான்மையினரே.

**குர்ஆன்: 11:17**

பெரும்பான்மையான மனிதர்கள்(ஈமான்) விசுவாசம் கொள்ளமாட்டார்கள்.

(மேலும் 5 : 49, 12 : 103, 6: 116 போன்ற ஆயத்துக்களையும் எடுத்துக் கொள்க.)

**ஹதீஸ்:**

ஒருவன் நரக நெருப்பை நோக்கிச் செல்வதை அல்லாஹ் தடுத்திராவிட்டால் (சுவன வாசியென்று தீர்ப்புக்கட்டப்படாதிருந்தால்) அல்லாஹ் தவிர இலாஹு இல்லை என்றும் முஹம்மது(ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் திருத்தூதர் என்றும் இருதய பரிசுத்தத்துடன் சாட்சி கூறக்கூடியவன் ஒருவனுமில்லையென்று நபி(ஸல்) அவர் களின் ஆதாரத்தைக் கொண்டு இந்த ஹதீஸை அனஸ்(றலி) அவர்கள் அறி விக்கிறார்கள்.

ஆதாரம் : புஹாரி

**குர்ஆன்: 7:40**

நிச்சயமாக எவர்கள் நம்முடைய வசனங்களைப் புறக்கணிப்பதைப் பெருமை யாக்கிக் கொண்டார்களோ அவர்களுக்கு வானத்தின் வாயில்கள் திறக்கப்பட மாட்டாது. ஊசியின் காதில் ஒட்டகம் நுழையும் வரையில் அவர்கள் சுவனபதியை அடையவே மாட்டார்கள். குற்றவாளிகளுக்கு இவ்வாறே நாம் கூலி கொடுப்போம்.

இவ்வித ஆயத்துக்கள் ஹதீஸுகளைச் சிந்தனைக்கெடுத்தால், சுவனம் செல்வது மிகக்கடினமான ஓர் விஷயம் என்பது தென்படுகிறது. இவர்கள் மிகக் குறைந்த தொகையினர் என்பதும் தென்படுகிறது. சுவனம் செல்வோர்தான் சுன்னத்வல்

ஜமாஅத்தினர் என்றால் இவர்களைக் கண்டறிவதும் இவர்களைப் பின்பற்றுவதும் எம்மால் இக்காலத்தில் முடியாமலும் இருக்கிறது. முஸ்லீம்களை மட்டும் தனியாக எடுத்துக்கொண்டால், இன்றைய உலகிலுள்ள 73 கூட்டங்களையும் சேர்ந்த எல் லோருமே தங்களைச் சுன்னத்வல் ஜமாஅத்தினர் என்றே கூறுகிறார்கள். அப்படி யானால் இவர்களில் உண்மையான சுன்னத்வல்ஜமா அத்தினரை நாம் கண்டறிவது எப்படி? நாம் காட்டிய 7:40ம் ஆயத்தின்படி குர்ஆனைப் புறக்கணிப்பதைப் பெருமையாய்க் கொள்ளாமல் குர்ஆனையும் அதன் விளக்கமான ஹதீஸையும் மனப்பூர்வமாய் ஒப்புக்கொண்டு மற்றும் இஜ்மாஉ, கியாஸ், அனுமான அறிவு முதலாம் பிரமாணங்களுடன் ஒப்பிட்டு நோக்கித்தான் உண்மையை நாம் கண்டறிய வேண்டியவர்களாயிருக்கின்றோம்.

சுன்னத்வல்ஜமாஅத்தினர் யார்? என்ற கேள்விக்கு விடைதரப்பட்டுள்ள பலவிதமான நூற்களையும் நான் ஆராய்ந்தபோது அவை பெரும்பாலும் ஒருவரை யொருவர் கண்மூடித்தனமாய்ப் பின்பற்றல் முறையில் ஊறிய மக்களால் எழுதப் பட்டவையாயும், தர்க்கரீதியான ஆதாரங்களுடன் அறிவு ஏற்றுக்கொள்ளும் வகையில் நிரூபணம் செய்யப்படாதவையாயும் இருப்பதை நான் கண்டேன். இவ்விஷயத்தை ஆதாரங்களோடு விளக்கித் தெளிவுபடுத்தக் கூடிய அறிஞர்களும் பெரும்பாலும் இன்று மிகமிக அபூர்வமாகவே தென்படுகிறார்கள். ஆதலால் எமது இமாமான குர்ஆனைக்கொண்டும் ஹதீஸ், இஜ்மாஉ, கியாஸ், அறிவு முதலாம் பிரமாணங் களைக் கொண்டும் பகுத்தறிவு ஏற்றுக்கொள்ளக்கூடியவகையில் விளக்கவேண்டியது இக்காலத்தில் எனது கடமையெனக் கண்டேன். எனது கடமையை முறைப்படி செய்துமுடிப்பான் வேண்டி இந்த நூலை எழுதியுள்ளேன். ஏற்பதும் ஏற்காமல் விடுவதும் உங்கள் சொந்த விருப்பைப் பொறுத்ததாகும். எனவே நான் முன்புகாட்டிய ஹதீஸில் குறிப்பிடப்பட்ட, றசூல்(ஸல்) அவர்களுடைய சுன்னா எது? என்பதை நாம் முதலில் கண்டறிவோம்.



# சுன்னா என்றால் என்ன?

சுவனம் செல்லும் றசூல்(ஸல்) அவர்களுடையவும் தோழர்களுடையவும் சுன்னா என்பது எது? என்பதை நாம் இங்கே கண்டறிவோம். றசூல் (ஸல்) அவர்களுடைய சுன்னா என்பதில் 4 விதமான விளக்கங்கள் கிதாபுகள் (புஸ்தகங்கள்)மூலம் எமக்குக் கிடைத்துள்ளன. அவற்றை இங்கே மிகச்சுருக்கமாகத் தருகின்றேன்.

1 வது :

றசூல்(ஸல்) அவர்களால் கையாளப்பட்ட தொழுகை முதலாம் பர்ழான அமல் களையும் மற்றும் சுன்னத்தான (தாடி,மிஸ்வாக்குச்சி போன்ற) அமல்களையும் எடுத்துக்கொண்டவர்கள் எவர்களோ அவர்களே சுன்னத்வல்ஜமா அத்தினர் என்பது ஒரு சாராரின் அபிப்பிராயமாகும்.

2 வது :

லாஇலாஹ இல்லல்லாஹ் முகம்மதுர்ரசூலுல்லாஹ் என்ற கலிமாவை நாவினால் கூறுவதுடன் பர்ழான சுன்னத்தான வணக்கங்களை எடுத்துக்கொள்பவர்களே சுன்னத் துவல் ஜமாஅத்தினர் என்பது இன்னும் ஒரு சாராரின் அபிப்பிராயமாகும்.

3 வது :

முன்கூறியதுபோல கலிமாவைக் கூறுவதுடன் றசூல்(ஸல்) அவர்களால் கையாளப் பட்ட பர்லு, நபில், சுன்னத், கலை, கலாச்சாரம் போன்றவற்றையும் (றசூலின் எல்லா முன்மாதிரிகளையும்) எடுத்துக் கொண்டவர்களே சுன்னத்வல்ஜமா அத்தினர் என்பது இன்னும் ஓர் சாராரின் அபிப்பிராயமாகும்.

4 வது

றசூல்(ஸல்) அவர்களால் விளக்கித் தரப்பட்ட தௌஹீதென்ற ஏகத்துவக் கொள்கையை விளங்கி உள்ளத்தில் உறுதிகொண்டவர் பர்லான, சுன்னத்தான அமல்களில் குறை வுடையவராக இருப்பினும் அவர் சுன்னத்வல் ஜமாஅத்தைச் சேர்ந்தவர்தான் என்பது இன்னோர் சாராரின் அபிப்பிராயமாகும்.

இவ்விதமாய் இன்னும் சிற்சில வேறுபாடுகளுடன் பல அபிப்பிராயங்கள் எமது வழிகாட்டிகளால் விளக்கப்பட்டிருப்பதால் இவற்றில் எது சரியான உண்மை

யென்பதைக் கண்டறிவது மிகக்கடினமாகவே தென்படுகிறது. ஆதலால் சுன்னா என்பது எது? என்பதை எமது இமாமான குர்ஆனிடமே நாம் கேட்டறிவோம்.

**குர்ஆன்: 33:62**

அல்லாஹ் ஏற்படுத்திய சுன்னா (வழி அல்லது வழமை) இதற்கு முன் சென்ற வர்களுக்கும் இதுதான். ஆகவே நீர் அல்லாஹ்வுடைய சுன்னாவில் யாதோர் மாறுதலையும் காணமாட்டீர். (இவ்வாயத்தில் சுன்னா என்ற சொல் வழமை, வழி, திட்டம், நியதி, இயல்பு என்ற பொருள்களில் பாவிக்கப்பட்டிருக்கிறது.)

**குர்ஆன்: 40:85**

ஆயினும் நம்முடைய வேதனையைக் கண்டபின்னர் அவர்கள் கொண்ட விசுவாசம் அவர்களுக்குப் பயனளிக்கவில்லை. இதுவே அல்லாஹ்வுடைய சுன்னா ............

(இவ்வாயத்திலும் சுன்னா என்ற சொல் வழமை, வழி, திட்டம், நியதி, இயல்பு என்ற பொருளிலேயே பாவிக்கப்பட்டிருக்கிறது.)

**குர்ஆன்: 48:23**

அல்லாஹ்வுடைய சுன்னா இதற்கு முன்னரும் இவ்வாறே நடந்திருக்கிறது. ஆகவே அல்லாஹ்வுடைய சுன்னாவில் நீர் எவ்வித மாறுதலையும் காண மாட்டீர்.

(இந்த ஆயத்திலும் சுன்னா என்ற சொல் வழமை, வழி, திட்டம், நியதி, இயல்பு (இயற்கை) என்ற பொருள்களிலேயே பாவிக்கப்பட்டிருக்கிறது.)

குர்ஆனை ஏற்றுக்கொண்ட எவரும் இவ்வுண்மையை மறுக்கமுடியாது. அவசியமானால் குர்ஆனில் சுன்னா என்ற சொல் உள்ள அத்தனை ஆயத்துக் களையும் எடுத்துப் பாருங்கள். குர்ஆனில் பாவிக்கப்பட்டுள்ள சுன்னா என்ற அதேசொல்தான் நாம் முன்பு கூறிய ஹதீஸிலும் பாவிக்கப்பட்டிருக்கிறது. எனவே சுன்னா என்ற சொல்லைக் கொண்டு குர்ஆனில் வழி, வழமை என்ற பொருளிலேயே பாவிக்கப்பட்டுள்ளது என்பதை அறிந்து கொண்டோம். அப்படியானால் றசூலின் சுன்னா (வழமை, வழி, திட்டம், நியதி, இயல்பு) எது? என்பதை நாம் இப்போது கண்டறிய வேண்டியதாகிறது.

மேலே நாம் காட்டிய ஆயத்துக்களை மீண்டும் ஓர் முறை வாசித்துப் பாருங்கள். முன் சென்றவர்களுக்கும் இதுதான் சுன்னா (வழி) என்று இறைவன் கூறுகிறான். முன் சென்றவர்கள் யார்? ஒவ்வோர் நபிமாரும் அவரவர் சமூகமக்களும் தானே! அப்படியானால் நபிமார்கள் யாவரும் ஏதோ ஓர் சுன்னாவில் (வழமையில்) ஒன்றுபட்டிருக்கிறார்களென்பது தென்படுகிறது. நபிமார்கள் யாவரும் ஒன்றுபட்ட சுன்னா (வழமை, வழி) எது? நபிமார்களுக்கு அல்லாஹ் அருளிய சுன்னா எது?

**குர்ஆன் : 17:77**

உமக்கு முன்னர் நாம் அனுப்பிய தூதர்களுக்கும் இதுவே சுன்னா (வழமை) ஆக இருந்தது. நம்முடைய சுன்னாவில் (வழமையில்) நீர் யாதொரு மாறுதலையும் காணமாட்டீர்.

இவ்வாயத்தின்படி அல்லாஹ்வுக்கும் நபிமாருக்கும் உள்ள வழமை (சுன்னா) ஒன்றுண்டென்பது தெளிவாகத் தென்படுகிறதல்லவா? மக்கள் ஸிர்க்கென்ற இருளில் (அறியாமையில்) மூழ்கும்போது 'லாஇலாஹ இல்லல்லாஹ்'என்ற கலிமாவை நபிமார்களுக்குக் கொடுத்து மக்களை இபாதத் செய்யும்படி ஏவுவது அல்லாஹ்வின் சுன்னா (வழமை) ஆக இருக்கிறது. இதை நாம் மறுக்க முடியாது.

**குர்ஆன்: 2:38**

நாம் கூறினோம் நீங்கள் யாவரும் இதிலிருந்து இறங்கிவிடுங்கள். என்னிடமிருந்து உங்களுக்கு (என்னுடைய தூதர்கள் மூலம்) நிச்சயமாக நேர்வழி வரும். (உங்களில்) எவர்கள் என்னுடைய நேர்வழியைப் பின்பற்றுகிறார்களோ அவர்களுக்கு யாதொரு பயமுமில்லை, அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்.

இவ்வித ஆயத்துக்களின்படி மனிதகுலம் ஸிர்க்கில் மூழ்கும்போது நேர் வழியை அருளுவது, கலிமாவைக் கொண்டு நபிமாரை அனுப்புவது அல்லாஹ்வின் வழமை (சுன்னா) ஆகவும், அல்லாஹ்விடமிருந்து பெற்றுக்கொண்ட கலிமாவை மக்களிடம் கூறி அதன் உண்மையில் ஒன்றுவதற்காக இபாதத்தை (ஏகமாக்கலை) ஏவுவது நபிமாரின் வழமை (சுன்னா) ஆகவும், நபிமாரின் கொள்கை மந்திரத்தை (கலிமாவை) மக்களில் பெரும்பாலார் எதிர்ப்பது மக்களின் வழமை (சுன்னா) ஆகவும் இருந்திருக்கிறது. நேர்வழியென்பது கலிமாவினால் உணர்த்தப்படும் தௌஹீதென்ற ஏகத்துவக் கொள்கையை உதாசீனம் செய்த எத்தனையோ சமூகங்கள் மண்ணோடு மண்ணாகிவிட்டன என்பதும் நாமறிந்த விஷயம்தான். கொள்கையை ஏற்ற மக்களுக்கு (ஹிதாயத்) வழிகாட்டுவதும் மறுத்த மக்களுக்கு (லழாலத்) வழிகேட்டை ஏற்படுத்துவதும் அல்லாஹ்வின் (சுன்னா) வழமையில் உள்ளது தான். உலகநாடுகளையும் அவற்றிலுள்ள தீய விளைவுகளையும் நோக்கினால் அல்லாஹ்வுடைய சுன்னா எது? என்பதை எம்மால் உணரமுடியும்.

**ஹதீஸ்:**

ஒருமுறை மூன்று காபீர்கள் றசூல்(ஸல்) அவர்கள் சமூகத்திற்கு வந்து முஹம்மது (ஸல்) அவர்களே! நீங்கள் அல்லாஹ்வுடன் வேறு எந்த இலாஹுவையும் (ஏற்றுக் கொள்ள) அறியமாட்டீர்களா என்று கேட்டார்கள். அப்போது நபி(ஸல்) அவர்கள் 'லா இலாஹ இல்லல்லாஹ்' அல்லாஹ் தவிர இலாஹு இல்லை என்ற கலிமாவைக் கொண்டே நான் நபியாக அனுப்பப்பட்டேன். இந்தக் கலிமாவின் பக்கமே நான்

அழைக்கிறேன் என்று கூறினார்கள். இது சம்பந்தமாகவே 'குல் அய்யுஷையின் அக்பரு ஷஹாததன்' என்ற ஆயத்து அருளப்பட்டது.

அறிவிப்பவர்: அப்பாஸ்(ரலி)
ஆதாரம் : துர்ருல் மன்தூர்

எனவே நபிமாரின் சுன்னா, வழமை என்பது கலிமாவைக் கொண்டு தௌஹீதை எத்திவைப்பதேயென்பதை நாம் ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும். நேர்வழியென்பதும் கலிமாவினால் உணர்த்தப்படும் தௌஹீதென்ற ஏகத்துவக் கொள்கையைத்தான் என்பதையும் நாம் மறுக்கமுடியாது.

**குர்ஆன்: 12:108**

நீர் கூறும் இதுவே எனது (நேர்) வழி நான் (உங்களை) அல்லாஹ்வின் பக்கம் அழைக்கிறேன். தெளிவான ஆதாரத்தின் மீதே நானும் என்னைப் பின்பற்றியவர்களும் இருக்கிறோம். (இணை, துணைகளைவிட்டு) அல்லாஹ் மிகப் பரிசுத்தமானவன். ஆகவே (அவனுக்கு) இணைவைப்போரில் நானும் ஒருவனல்ல.

(41:43, 21:25 போன்ற ஆயத்துக்களையும் எடுத்துக்கொள்க.)

எல்லா நபிமார்களும் கலிமாவைக் கொண்டுதான் நபியாக்கப்பட்டிருக்கிறார்கள். அவரவர் சமூக மக்களிடையே கலிமாவைக்கூறி ஸிர்க்கிலிருந்தும் மக்களை விடுவிக்கவே 124000 நபிமார்களும் முயற்சித்திருக்கிறார்கள். ஆதலால் நபிமார்களின் சுன்னா(வழமை) தௌஹீதை (ஏகத்துவக் கொள்கையை) உறுதிப்படுத்துவதேயென்பதில் எவ்வித சந்தேகமும் கிடையாது. நபிமார்மூலம் அவ்வக் காலத்திற்கு ஏற்ப வெவ்வேறு அமல்கள் தரப்பட்டதெல்லாம் லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற நேர்வழியில் (ஸிறாத்தில்) இலகுவாகச் செல்வதற்காகத்தான். எனவே நபிமாரின் அழைப்பிற்கு முக்கிய காரணம் கலிமாவின் கருத்தில் (ஈமானில்) மக்களை உறுதி பெறச் செய்வதே. ஸிறாத் என்பதும் நேர்வழி என்பதும் கொள்கையை நோக்கியதேயன்றி அமல்களை நோக்கியதல்ல என்பதை நாம் மறுக்கமுடியாது.

இப்போது எமது றசூல்(ஸல்) அவர்களும் தோழர்களும் கொண்டிருந்த (சுன்னா) வழமை, வழி எது? என்ற கேள்விக்குக் கலிமாவை உபதேசிப்பதும் இபாதத் செய்ய ஏவுவதுமே என்று நாம் விடை கூறலாம். ஆயினும் இபாதத் என்னும் போது தொழுகையென்றே நம்முன்னோரில் மிகப்பெரும்பாலார் நம்பினார்கள். எம்மையும் நம்பச் செய்தார்கள். அவர்களுடைய தவறான நம்பிக்கையைத்தான் எமக்குக் கற்பித்தார்கள். வணக்கம் என்ற வகையில் தொழுகை முதலாம் சகல அமல்களும் அதிலடங்கும். ஆனால் இபாதத் என்ற சொல்லிற்கு வணக்கம் என்று நாம் மேலோட்டமாய்ப் பொருள் கொண்டாலும் அச் சொல்லின் உண்மையான அர்த்தம் தொழுகையென்பதல்ல. இபாதத் என்ற சொல்லிற்கு (ஒருமைப்படுத்தல்) ஏகமாக்கல் என்பதே உண்மையான அர்த்தமாகும். இதை எமது திருக்குர்ஆனின் தீர்ப்பு என்ற

நூலில் 1ம், 2ம் பாகங்களில் தெளிவாக விளக்கியுள்ளேன். இபாதத் என்ற சொல் குர்ஆனில் எங்கெங்கு இடம்பெற்றாலும் அது ஏகமாக்கல், தௌஹீது செய்தல் என்ற பொருளையே கொடுக்கும் என்று அப்பாஸ்(றலி) அவர்கள் விளக்கியுள்ளார்கள். இவ்விபரம் எமது முதல் நூற்களில் தரப்பட்டுள்ளது (விரும்பியோர் அங்கு காண்க).

கலிமாவை உள்ளத்தால் பூரணமாய் ஏற்றுக்கொள்வதும் ஏகமாக்குவதும் (இபாதத் செய்வதும்) 124000 நபிமாரும் ஒருங்கே ஒப்புக்கொண்ட சுன்னா (வழமை) என்பதை நாம் மறுக்கமுடியாது. குர்ஆனிலுள்ள 7:59, 7':65, 7:73, 7:85, 41:43, 21:25 போன்ற ஆயத்துக்கள் இதற்கு ஆதாரங்களாய் இருக்கின்றன, இபாதத் என்ற சொல்லைக்கொண்டு ஸரீயத்தில் விதிக்கப்பட்ட தொழுகை முதலாம் அமல்களே றசூலின் வழமை என்று கூறமுடியாது. ஏனென்றால் வேதம் கொடுக்கப்பட்ட றசூல்மார்கள் மற்றும் நபிமார்கள் கையாண்ட ஸரீயத்தும் அதன் அமல்களும் வெவ்வேறாய் இருந்திருக்கின்றன. அதாவது ஒரு றசூலின் ஸரீயத்திற்கும், அமல்களுக்கும், இன்னோர் நபியின் ஸரீயத்தும், அமல்களும், வேறாக இருந்திருக்கிறது.

**குர்ஆன்: 22:67**

(நபியே!) ஒவ்வோர் வகுப்பாருக்கும் (அவ்வக் காலத்துக்கு ஏற்றவாறு) அவர்கள் தங்களிறைவனை நெருங்குவதற்குரிய (வணங்குவதற்குரிய) வழியை நாம் ஏற்படுத்தியிருந்தோம். (உம்முடைய காலத்தில் உமக்கேற்படுத்தியிருக்கும்) வழியைப்பற்றி அவர்கள் உம்மிடம் தர்க்கம் செய்யவேண்டாம். அன்றி நீர் அவர்களை இறைவன்பால் அழையும். நிச்சயமாக நீர்தான் நேரான வழியில் இருக்கிறீர்.

இவ்வித ஆயத்துக்களின்படி ஒவ்வோர் வகையான ஸரீயத்தையும் அமலையும், பிக்ஹுவையும்தான் நபிமார்கள் கொண்டுவந்திருக்கிறார்கள் என்பது தென்படுகிறது. இவ்வகையில் நபிமார்களும் அவர்களுடைய அமல்களும் அவர்களுடைய ஸரீயத்தும் ஒன்றுக்கொன்று முரண்பட்டிருக்கின்றனவென்றால்; இதை சுன்னா(வழமை) என்று எப்படி ஒப்புக்கொள்வது? ஆதலால் சுன்னா என்ற சொல்லால் குறிப்பிடப்படும் வழமையென்பது அமலை நோக்கியதல்ல என்று தென்படுகிறது. மேலும் சுன்னா என்ற சொல்லால் குறிப்பிடப்படுவது கலிமாவினால் உணர்த்தப்படும் கொள்கை விளக்கம்தான் என்பதும் உறுதியாகிறது. நான் ஆரம்பத்தில் கூறிய ஹதீஸின்படி றசூல்(ஸல்) அவர்களையும் தோழர்களையும் நாம் பின்பற்றுவதானால் அவர்களினால் எமக்குத் தரப்பட்ட கொள்கை, அமல், மற்றும் உலக விவகாரங்களில் எதையெதை எந்தெந்த அளவு நாம் பின்பற்றவேண்டும் என்பதை அறியவேண்டியது அவசியமாகிறது. ஏனென்றால் அவர்களின் சொல், செயல், கொள்கை ஆகிய மூன்றையுமே நாம் பின்பற்றவேண்டும் என்று கூறுவது அறிவுக்குப் பொருந்தாததும் செயல்படுத்த முடியாததுமாயிருக்கிறது. றசூல்(ஸல்)

அவர்களுடைய கொள்கையை உறுதிப்படுத்தக் கையாளப்படும் அணுகுமுறைப் பயிற்சிகளான தொழுகை முதலாம் அமல்களில் எம்மாலியன்றளவு பின்பற்றமுடியும். மற்றும் கலை கலாச்சாரங்களில் நடையுடை 'பாஷை' உணவுமுதலாம் காரியங்களில் அபூஜஹ்லீல்கூட றசூலைப் பின்பற்றித்தான் இருந்திருக்கிறான். எனவே பின்பற்றப்பட வேண்டியது கொள்கையைத்தான் என்பது உறுதியாகிறது.

ஏனென்றால் தொழுகைமுதலாம் அமல்கள் பர்லே அன்றி சுன்னாவல்ல. இந்தப் பர்லான அமல்கள் காலாகாலம் மாறுபட்டிருப்பதால் இதை வழமையென்று கூறமுடியாது. சுன்னாவென்றும் கூறுமுடியாது. ஆதலால் தாடி தலைப்பாகை போன்ற சுன்னா வேறு என்பதும், பர்லான அமல்கள் வேறு என்பதும், றசூலையும் ஸஹாபாக்களையும் பின்பற்றவேண்டிய சுன்னா (வழமை, வழி) வேறு என்பதும் உறுதியாகிறது. எனவே ஹதீஸில் குறிப்பிடப்பட்ட சுன்னா(வழமை) என்பது கொள்கையை மட்டும் குறிப்பிடுமேயன்றி அமல்களைக் குறிப்பிடாது என்பது வெளிப்படை.

றசூல்(ஸல்) அவர்களுடைய தாடி, தலைப்பாகை, மிஸ்வாக்குக்குச்சி போன்ற வற்றைச் சுன்னா என்று கூறுவது 'அதாலத்' என்ற உலக நீதி நிர்வாகத்தைச் சேர்ந்ததாய் இருக்கிறது. இதிலும் அப்ஹாலு சுன்னா, அலங்கார சுன்னா என்று இரு பகுதிகள் இருக்கின்றன. நானும் எனது ஸஹாபாக்களும் எந்த சுன்னாவில் இருக்கிறோமோ அந்தச் சுன்னாவை எடுத்துக்கொண்டவர் சுவனம் செல்வாரென்ற ஹதீஸில் சுட்டப்பட்ட சுன்னா என்பது அப்ஹாலு சுன்னாவையோ அலங்காரச் சுன்னாவையோ குறிப்பிட்டுக் கூறப்பட்டதல்ல. றசூல்(ஸல்) அவர்களும் ஸஹாபாக்களும் தாடிவைத்திருந்தவர்கள். மீசையற்ற ஓர் ஆணும் பெண்ணும் இவர்களுடைய தாடிவைக்கும் சுன்னாவைப் பின்பற்றவேண்டும் என்று எப்படிக் கூறமுடியும்? சுன்னாவைப் பின்பற்றாதவர் சுவனம் போகமுடியாதே! அப்படியானால் தாடியில்லாத மூமினான ஆண் அல்லது பெண் சுவனம் போக முடியாதென்றல்லவா கூறநேரிடும்?

இதிலிருந்து நாம் அறிவது என்னவென்றால் ஹதீஸில் கூறப்பட்ட சுன்னா என்பது பர்லான வணக்கங்களையோ, அப்ஹாலு சுன்னா, அலங்காரச் சுன்னாக்களையோ குறிப்பிட்டதல்ல என்பதே. ஹதீஸில் தரப்பட்ட சுன்னா என்றசொல் கொள்கையை (ஈமானை) நோக்கிக் கூறப்பட்டதாகும். அதாலத்தென்ற நீதி நிர்வாக விபரங்களில் பாவிக்கப்படும் சுன்னா என்றசொல், செய்தால் நன்மையுண்டு செய்யாவிட்டாலும் பாதகமில்லை என்ற பொருளுடையது. இவைதான் அப்ஹாலு சுன்னா, அலங்காரச் சுன்னா என்பவை. றசூல்(ஸல்) அவர்களுடைய நடையுடை பழக்கவழக்கங்களி லுள்ள சுன்னாக்களை நூறு வீதமும் பின்பற்றுபவரே சுன்னத்வல்ஜமாஅத்தினரென்று நம்முன்னோரில் மிகப்பலர் கூறியது உண்மைக்கு முரணாய் இருக்கிறது. இது எவ ராலும் நூறு வீதமும் கடைப்பிடிக்கமுடியாத ஒன்று. உலக விவகாரங்களில் றசூல்(ஸல்) அவர்களுடைய முன்மாதிரியை (கியாஸை) ஆதாரமாய்க்கொண்டு எமது சந்தர்ப்ப

சூழ்நிலைக்கேற்ப சிற்சில மாற்றங்களுடன் நாம் கையாளமுடியும். இவ்வித நல்ல மாற்றங்கள் தாபியீன்கள், தபுஅத்தாபியீன்களால் கையாளப்பட்டிருக்கின்றன.

மேலும் முன்பு தரப்பட்ட ஹதீஸில் குறிப்பிடப்பட்ட தோழர்கள் யார்? என்பதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டியது அவசியமாகும். ஏனென்றால் றசூலின் காலத்தில் கலிமாக்கூறி முஸ்லிம்களான எல்லோரும் தோழர்கள்தானென்று நாம் தீர்ப்புக்கட்ட முடியாது. குர்ஆனின் கூற்றுப்படி, றசூலிடம் கலிமாவைக் கூறி இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட சிலர் முனாபிக்கீன்களாய் இருந்திருக்கிறார்கள். ஒரு சிலர் றசூலுக்கு முற்றும் முரணாயும் செயல்பட்டிருக்கிறார்கள். இவ்வகையினரை நாம் எப்படிப் பின்பற்றுவது? ஆதலால் ஹதீஸில் கூறப்பட்ட தோழர்கள் எவரெவர் என்பதை நாம் அறியவேண்டும்.

நாம் ஓர் விஷயத்தில் உண்மையைக் கண்டறிவதானால் அதற்கு நேர் முரணான விஷயத்தையும் தெரிந்திருக்கவேண்டியது அவசியமாகும். இது வெண்மை நிறம் என்பதை உறுதிப்படுத்துவதானால் கருமை நிறம் எது என்பதை அறிந்திருக்க வேண்டியது அவசியம்தானே! சுவனம் செல்லும் சுன்னத்வல்ஜமாஅத்தினர் இவர்கள் தானென்று நாம் முடிவுகட்டுவதானால், அவர்களுக்கு முரணாய் நரகம் செல்லும் கூட்டத்தினர் எவர்கள் என்பதை அறிந்திருக்கவேண்டியது அவசியமல்லவா? றசூல்(ஸல்) அவர்களையும் தோழர்களையும் எப்படி? எவ்விஷயத்தில்? எந்த அளவு? பின்பற்றுவதென்பதையும், எவரைப்பின்பற்றக்கூடாது என்பதையும் நாம் அறிந்துகொண்டால்தான் நாம் ஓர் உண்மையான முடிவைப் பெறமுடியும். அப்படியில்லாமல் றசூல்(ஸல்) அவர்களில் எமக்கு வேண்டிய முன்மாதிரி உண்டாயிருப்பதால் றசூல்(ஸல்) அவர்களை நூறு வீதமும் பின்பற்றத்தான் வேண்டு மென்பது தவறு. இது எவரால்தான் முடியும்?

றசூல்(ஸல்) அவர்களின் எல்லா விஷயங்களையும் எடுத்துக் கொள்வதே பின்பற்றல் என்றும், சிற்சில விஷயங்களில் காலத்துக்கு ஏற்றபடி மாற்றம் செய்வது ‘பித்அத்’ தவிர்க்கப்படவேண்டியது என்றும் சிலர் கூறியிருப்பது அறியாமையாகும். றசூலுடைய எல்லா விஷயங்களையும் முழுமையாய்ப் பின்பற்றத்தான் வேண்டும் என்றால், நானும் ஓர் நபியென்று கூறவேண்டி ஏற்படும். றசூல்(ஸல்) அவர்கள் எமக்குக் கொண்டுதந்த குர்ஆனைப்போல் நாமும் ஓர் குர்ஆனை உண்டாக்க வேண்டியேற்படும். றசூலைப்போல் நாமும் பல யுத்தங்களைச் செய்யவும் அவற்றின் போது அம்பு, வில், வாள் போன்ற ஆயுதங்களையே உபயோகிக்கவும், பலதாரமணம் செய்யவும், பசிக்கொடுமை தாங்கமுடியாமல் வயிற்றில் கல்லைக் கட்டிக்கொள்ளவும், கழுதை, குதிரை, ஒட்டகம் போன்றவற்றில் பிரயாணம் செய்யவும், றசூலின் பாஷை, உணவு, உடை முதலான விஷயங்களை எடுத்துக்கொள்ளவும் வேண்டி ஏற்படும். அப்படியில்லாத எல்லாமனிதர்களும் பித்அத் வாதிகளென்றல்லவா தீர்ப்புக்கட்ட நேரிடும். இது எவரால்தான் முடியும்? இது செயல்படுத்தக்கூடிய ஓர் விஷய

மல்ல. பாத்திமா(றலி) என்ற ஓர் மகளையும் அலி(றலி) என்ற ஓர் மருமகனையும் நாம் எங்கே எப்படிப் பெறுவது? றசூலுடைய தோழர்களான தாபியீன்கள், தபுஅத் தாபியீன்கள் கூட உலக விஷயங்களில் றசூல்(ஸல்) அவர்களுடைய எல்லாச் செயல்களையும் நூறுவீதமும் பின்பற்றினார்கள் என்று எம்மால் கூற முடியாது.

உதாரணமாக : றசூல்(ஸல்) அவர்களுடைய காலத்தில் ஆண்களும் பெண் களும் ஒரே இடத்தில் ஒன்றாய் நின்றுதான் தொழுகையை நடாத்தியிருக்கிறார்கள். இந்த முறையை (வழமையை) உமரேபாறூக்(றலி) அவர்கள் மாற்றியமைக்க அதன்பின் வந்த உதுமான்(றலி), அலி(றலி) போன்றோர் அவ்வமைப்பிலும் சிற்சில மாறுபாடுகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இவ்வித வழமையில்தான் இன்றும் எமது சமூகம் இருந்துகொண்டிருக்கிறது. இவ்வித சீர்திருத்தங்களெல்லாம் 'பித்அத்' என்று நாம் கூறமுடியாது. தீனில் பித்அத் செய்வதற்கும் அமல்களில் பித்அத் செய்வதற்கும் இடையிலுள்ள வேறுபாடு என்ன என்பதை நாம் அறியவேண்டும். ஏனென்றால் தாபியீன்கள், தபுஅத்தாபியீன்கள் சிற்சில விஷயங்களில் சில சீர் திருத்தங்களைக் கையாண்டிருக்கிறார்கள். இந்தச் சீர்திருத்த நடவடிக்கைகள் செயல் களிலுள்ளவை. தாபியீன்களோ, தபுஅத்தாபியீன்களோ தீனில் எந்தவோர் மாற்றமும் சீர்திருத்தமும் செய்ததேயில்லை. அவர்கள் செய்த சீர்திருத்தங்களெல்லாம்; தீனை நிலைப்படுத்துவதற்குதவியான உலக விவகாரங்களில் மட்டும்தான்.

றசூல்(ஸல்) அவர்களுடைய காலத்திலோ தாபியீன்கள், தபுஅத்தாபியீன்கள் காலத்திலோ குர்ஆன் ஹதீஸ்கள் (கிதாபுக்கள், புஸ்தகங்கள்) அச்சிடப்படவில்லை. கி. பி. 17ம் நூற்றாண்டில் (1694ம் ஆண்டு) தான் முதல் முதலில் குர்ஆன் அச்சிடப் பட்டிருக்கிறது. றசூலினால் செய்யப்படாத ஒன்றை நாம் செய்திருப்பதால் இதை மார்க்கத்தில் ஏற்படுத்தப்பட்ட பித்அத் என்று கூறமுடியாது. இவ்வித செயல்கள் தீனைத் தரிப்படுத்த உதவியான உலக விவகாரங்களைப் பொறுத்தவையாய் இருப்பதால் இவற்றை நாம் 'பித்அத்ஹஸனா' அழகிய புதுமையென்று கூறு கின்றோம். இவ்வித செயல்கள் இல்லையானால் இன்று இஸ்லாத்தைக் கண்டறியவே முடியாது. றசூல்(ஸல்) அவர்களோ தோழர்களோ தமிழ்ப்பாஷையில் குத்பா(பிர சங்கம்) ஓதியதுண்டா? நாம் தமிழில் ஓதுகிறோமே! இது பித்அத் ஆகுமா? ஆகு மென்றால் அதை பித்அத்ஹஸனா என்று கூறுவதில் என்ன தவறு?

# *பித்அத் என்றால் என்ன?*

**ஹதீஸ்**

எவரும் நம்மார்க்கத்தில் இல்லாததைப்(புதிதாய்ப்) புகுத்தினால் அது மறுக்கப்பட வேண்டிய 'பித்அத்' என்று றசூல்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: ஆயிஷா(றலி)

ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்

இன்றுள்ள வஹ்ஹாபிகள், தப்லீக்வாதிகள் போன்ற சிந்தனைக்கு இடம்கொடுக்காத பல கூட்டங்கள், இந்த ஹதீஸின் படியும் பித்அத்துக்கள் யாவும் தவிர்க்கப்பட வேண்டியவை என்ற ஹதீஸின்படியும் 'பித்அத்' புதுமைகள் யாவும் மறுக்கப்பட வேண்டியவைதானென்று வாதிடுகிறார்கள். இது அறியாமையாகும். தீன் என்றால் என்ன? என்பதை அறிந்து கொள்ளாமைதான் இப்பிடிவாதத்திற்கு மூலமாய் அமைந்திருக்கிறது. இந்த ஹதீஸை ஆழமாய் அவதானித்தால், மறுக்கப்படவேண்டிய பித்அத்தும், மறுக்கப்பட வேண்டாத பித்அத்தும் உண்டென்பதற்கு இந்த ஹதீஸே ஆதாரமாயிருக்கிறது. மார்க்கம் அல்லது தீன் என்பது எது? என்பதைப் புரிந்து கொண்டால்தான்பித்அத் (மறுக்கப்படவேண்டிய புதுமை) எதுவென்பதை எம்மால் கண்டறிய முடியும். இவ்விஷயத்தை தெளிவுபடுத்துவதற்காகவே மார்க்க விளக்கம் பெற்ற ஆரிபீன்கள் பித்அத்தை, ஹஸனா (நல்லது அல்லது அழகிய புதுமை) என்றும் ஸையியா (கெட்ட புதுமை) என்றும் இருபிரிவுகளாய் விளக்கியுள்ளார்கள். இந்த 'ஹஸனா' என்ற வகையிலுள்ள பல செயல்களைத்தான் தாபியீன்கள், தபு அத்தாபியீன்கள் கையாண்டிருக்கிறார்கள் (உதாரணம் ஒன்று முன்பு தரப் பட்டுள்ளது.)

தீனுல் இஸ்லாம் என்பதுதானே மார்க்கம் என்பது! இந்த தீனுல் இஸ்லாத்தில் இல்லாதது எது? இஸ்லாத்தில் இல்லாதது 'ஸிர்க்கு' மட்டும்தான். எனவே ஹதீஸில் குறிப்பிடப்பட்டபடி மார்க்கத்தில் இல்லாததைப் புதிதாய்ப் புகுத்துவதென்றால் ஸிர்க்கில்லாத இஸ்லாத்தில் ஸிர்க்கை நுழைப்பது என்பதே அதன் உண்மையான அர்த்தமாகும். றசூல்(ஸல்) அவர்களுடைய மறைவிற்குப் பின் முதன்முதலில் இஸ்லாத்தில் நுழைக்கப்பட்ட முதலாவது 'பித்அத்' கலிமத்துத்தையிபாவென்ற நறுமணமுள்ள கலிமாவின் கருத்தைப்புரட்டி, கலிமத்துல் கபீஸாவென்ற துர்நாற்றக் கலிமாவை உருவாக்கியதாகும். அல்லாஹ்வுடன் அவன் அல்லாத எதுவும் இணை துணையாய் இல்லையென்று தௌஹீதை உறுதிப்படுத்தும் கலிமாவின் கருத்தை (தௌஹீதை)ப் புரட்டி அல்லாஹ்வுடன் அவனல்லாத சிருட்டியும் இணையாய்

உண்டென்று பொருள் தருகிற, இணையை ஏற்படுத்துகிற, கலிமாவை மனிதன் உருவாக்கிக் கொண்டதே உண்மையான பித்அத்தாய் இருக்கிறது. றசூல்(ஸல்) அவர்களின் மறைவின்பின் சுமார் 30 வருடங்களில் ஆரம்பமாகி சுமார் 200 வருடங்களுக்கிடையில்தான் இந்தப் புரட்டல் வியாதி உலகெல்லாம் பின்பற்றல் முறையில் பரவியிருக்கிறது.

**ஹதீஸ்**

காலங்களில் சிறந்தது என் காலமும் பிறகு என்காலத்தை அடுத்தவர்களின் காலமும் பிறகு அதை அடுத்தவர்களின் காலமும் ஆகும். அதன்பின் பொய் பரவிவிடும் என்று றசூல்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : இப்னு உமர்(றலி)
ஆதாரம் : திர்மிதி

இந்த ஹதீஸில் குறிப்பிடப்பட்ட காலம் சுமார் 30 வருடங்கள்தான் இருந்திருக்கிறது. பொய் என்பது எது? ஸிர்க்குத்தான் பொய்யென்று கூறப்படுகிறது. இன்னும் பல ஹதீஸுகளை ஆதாரம் தரலாம். நாம் இது ஒன்றையே போதுமாக்குவோம். ஆண்டவனே! இமாம்களுக்கு வழிகாட்டி அவர்களுடைய பாபங்களுக்கு மன்னிப்பளிப்பாயாகவென்று றசூல்(ஸல்) அவர்கள் பிரார்த்தனை செய்திருக்கிறார்கள். இமாம்களென்றால் மக்களை மார்க்கவழியில் நடாத்தும் தலைவர்கள் என்பதை நாமறிவோம்.

(கலிமத்துத்தையிபாவுக்கும் கலிமத்துல் கபீஸாவிற்குமுள்ள வேறுபாட்டைக் கண்டறிவதானால் குர்ஆன் 14:24, 25, 26 போன்ற வசனங்களை ஆராய்க.)

பித்அத் என்பதற்கு தவறான பொருள் கொள்வது உண்மையை மூடி மறைப்பதாகும்.

**ஹதீஸ்**

(கருத்தை விட்டுவிட்டு) சொல்லழகில் மூழ்குபவர் நாசமாகட்டும் என்று மூன்று முறை றசூல்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : இப்னு மஸ்வூத்(றலி)
ஆதாரம் : முஸ்லீம், அபூதாவூத்

நாம் முன்புகூறிய ஆயிஷா(ஸித்) அவர்களால் கூறப்பட்ட ஹதீஸை மீண்டும் ஒரு முறை நோக்கிப் பாருங்கள். நம்மார்க்கத்தில் இல்லாதது என்றும் தவிர்க்கப்பட வேண்டியதென்றும் பித்அத்தை ஒருமையில்தான் கூறப்பட்டிருக்கிறது. எனவே உண்மையான பித்அத் என்பதும், மறுக்கப்பட வேண்டியதும் (ஸிர்க்) இணை கற்பித்தல் என்ற பித்அத்தேயாகும். அமல்களில் ஏற்படும் ஏதாவதொரு விஷயம் (சொல், செயல், கருத்துக்களில்) ஸிர்க்கை உருவாக்குமென்றிருந்தால் அது தவிர்க்

கப்படவேண்டியது அவசியம்தான். பித்அத்தை சில ஹதீஸ்கள் பன்மையில் கூறு கின்றன. இவ்வித ஹதீஸ்கள். சொல், செயல்களில் ஏற்படும் பித்அத்துக்களைத் தனித்தனியாய் விளக்குபவையாகும். கொள்கையில் ஏற்படும் பித்அத்தை ஒரு மையிலும் சொல், செயல்களில் ஏற்படும் பித்அத்துக்களைப் பன்மையிலும் கூறப் பட்டுள்ளது.

**ஹதீஸ்**

வார்த்தையில் சிறந்தது அல்லாஹ்வின் வேதம், நடைமுறையில் சிறந்தது முகம்மது(ஸல்) அவர்களின் நடைமுறை, காரியங்களில் கெட்டது பித்அத், பித் அத்துக்கள் அனைத்தும் வழிகேடுகள், வழிகேடுகள் அனைத்தும் நரகில் சேர்க்கும்.

அறிவிப்பவர் : இப்னுமஸ்ஊத் (றலி)
ஆதாரம் : புஹாரி, முஸ்லிம்

இதே ஹதீஸை ஜாபிர்(றலி) அவர்களும் கூறியுள்ளனர். நஸாயியில் இது இடம் பெறுகிறது. இந்த ஹதீஸில் பித்அத்தை ஒருமையிலும் பன்மையிலும் கூறியிருப்பதை அவதானிக்கவும்.

எனவே ஓர் சொல் அல்லது செயல், ஈமானை வளர்த்து உறுதிபெறச் செய்யு மென்றிருந்தால் அது வரவேற்கப்பட வேண்டியதுதான். இவ்வகையைச் சேர்ந்ததுதான் பித்அத்ஹஸனா என்பது. ஆகையால்தான் தீன் என்ற தௌஹீதை முறிக்கும் (இணை ஏற்படுத்துதலை உண்டாக்கும்) சொல், செயல், கருத்துக்களை ‘பித்அத்ஸையியா’ கெட்ட அல்லது தீயபுதுமை (நூதனம்) என்றும் தௌஹீதை (ஈமானை) உறுதிபெறச் செய்யும் சொல்-செயல் கருத்துக்களை பித்அத்ஹஸனா (நல்ல புதுமை) என்றும் கொள்கிறோம்.

பித்அத் ஒன்றேயொன்றுதான். அதுதான் ஷிர்க் (இணை கற்பித்தல்) என்பது. இந்த ஷிர்க், சொல், செயல், கருத்துக்களில் எவற்றில் எப்படி ஏற்பட்டாலும் தவிர்க் கப்படவேண்டிய பித்அத்துத்தான். பித்அத் என்பது ஷிர்க்கை நோக்கியதென்பதை நிரூபிக்க அனேக ஆதாரங்களிருக்கின்றன. குர்ஆனின் 4:116ம் ஆயத்தும், எவருடைய இறுதிமொழி லாஇலாஹஇல்லல்லாஹ் என்றமைகிறதோ அவர் சுவனம் செல்வார் என்ற ஹதீஸுமே இதற்குப் போதுமான ஆதாரங்களாகும்.

**ஹதீஸ்**

சுவனத்தின் தலைவாசலில், ‘இன்னனி அனல்லாஹுலா இலாஹ இல்லா அனாலா உஹத்திபுமன்காலஹா’ நிச்சயமாக நான் தான் அல்லாஹ். என்னைத் தவிர (வேறு)

இலாஹுஇல்லை. எவர் இக்கலிமாவைக் கூறுகிறாரோ அவரை நான் வேதனை செய்யமாட்டேன் என்று எழுதியிருப்பதாக றசூல்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அப்பாஸ் (றலி)

ஆதாரம் : துர்ருல் மன்தூர்

**ஹதீஸ்**

நிச்சயமாக நானே அல்லாஹ் என்பவன். என்னைத்தவிர (வேறு) இலாஹு இல்லை. ஆகவே எனக்கே இபாதத் செய்வாயாக. உங்களில் இருந்து எவரேனும் மனத் தூய்மையுடன் லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற சாட்சியத்தைக் கொண்டு என்னிடம் வந்தால் அவர் என்கோட்டையில் நுழைந்துவிட்டார். எவர் என் கோட்டையில் நுழைந்துவிடுகிறாரோ அவர் என் வேதனையை விட்டும் பாதுகாப்புப் பெற்று விட்டார் என்று அல்லாஹ் கூறியதாக றசூல்(ஸல்) அவர்கள் எங்களுக்குக் கூறி னார்கள்.

அறிவிப்பவர் : அலி (றலி)

ஆதாரம் : துர்ருல் மன்தூர்

இறைவனுடைய கிருபை கடாட்சம் எவ்வித சட்டங்களுக்கும் உட்பட்டதல்ல. ஸிர்க்கைத் தவிர மற்றெல்லாப் பாவங்களையும் அவன் நாடியவர்களுக்கு மன்னிக் கக்கூடும் என்பது குர்ஆனின் கூற்றாகும். இன்னும் ஓர் ஹதீஸ்; லாஇலாஹ இல்லல் லாஹ் என்ற கலிமாவை ஏற்கமறுக்கும் வம்பர்களையே இறைவன் வேதனை செய்வானென்று அறிவிக்கிறது.

தாபியீன்கள், தபுஅத்தாபியீன்கள், பின்தோன்றிய சில நல்லடியார்கள் கையாண்ட சிற்சில புதுமைகளை ஆராய்வுக் கெடுத்தால், நான் கூறியுள்ள உண்மையை உங்களால் ஒப்புக்கொள்ள முடியும். நவீனகாலச் சீர்திருத்தவாதிகளில் மிக அனேகர் வணக்கத்துக்குரிய நாயன் ஒருவனேயென்னும் ஓரிறைக் கொள்கையை உறுதி கொண்டவர்கள். இவர்களுடைய அடிப்படைக் கொள்கையே அல்லாஹ்வேறு சிருட்டிவேறு என்ற சுத்தமான (பித் அத்ஸையியா என்ற) ஸிர்க்காய் இருக்கும் போதும்; தொழுகையில் தக்பீர்கட்டுதல், துஆஓதுதல், தல்கீன் ஓதுதல் போன்ற விஷயங்களில்தான் ஸிர்க்கையும் பித்அத்தையும் காணுகிறார்கள். இது எவ்வளவு பெரிய அறியாமை. இவ்வகையினரின் கூற்றைத் தெளிவான சிந்தனையோடு நோக்கினால் தீன், சுன்னா, பித்அத், ஸிர்க் போன்ற சொற்களை தவறான முறையில் விளங்கிக் குழம்பிக் கொண்டும், பிறரைக் குழப்பிக்கொண்டுமிருக்கிறார்கள் என்பது தென்படுகிறது. எனவே றசூல்(ஸல்) அவர்களுடைய ஸஹாபாப் பெருமக்களும் அவர்களைப் பின் தொடர்ந்த ஒருசில நல்லடியார்களும் கையாண்ட சிற்சில செயல்களை மார்க்க விரோதமென்றோ பித்அத் என்றோ கணிப்பது தவறாகும்.

ஏவல் விலக்கல்களுக்கு உட்படாத சிற்சில விஷயங்கள் இருக்கின்றன. இவ்வகை விஷயங்கள் தீனை உறுதிப்படுத்த உதவும் என்றிருந்தால் காலத்துக்கேற்ற முறைப்படி கையாள எமக்கு உரிமையுண்டு. உதாரணமாக கத்தம், துஆ, கந்தூரி போன்ற விஷயங்கள் விலக்கப்பட்டவையுமல்ல ஏவப்பட்டவையுமல்ல. இவ்வித செயல்களைக் கொண்டு மக்களுடைய ஈமானை உறுதிபெறச் செய்வதற்காக ஒருசில அறிஞர்கள் இவற்றை உருவாக்கியிருக்கிறார்கள். ஆனால் பின்வந்த சிற்சில போலிகள் இவற்றைத் தவறான முறையில் பயன்படுத்துகிறார்கள் என்பது உண்மை. ஏழைகளுக்கு உணவழிப்பது, கந்தூரி நடாத்துவது நல்லதும் வரவேற்கப்பட வேண்டியதும்தான். ஆனால் எம் சமூக மக்கள் ஏழைகளை உதாசீனம் செய்வதும் பணக்காரப் புள்ளிகளுக்கு முதலிடமளிப்பதும் தவறேயாகும். (பிறவிஷயங்களையும் சிந்தனைக்கெடுத்துக் கொள்க.) இவற்றை விளங்கித் தெளிவுபெறாமல் தாம் கற்றுக் கொண்டவை மட்டுமே உண்மையென்ற பிடிவாதத்தோடு ஹறாம், ஹலால், பித்அத், ஸிர்க், குபீர், என்ற சொற்களைப் பாவிப்பது தவறாகும்.

மார்க்கம் தீன் என்பதெல்லாம் கலிமத்துத்தையிபாவினால் உணர்த்தப்படும் தெளஹீதைக் குறிப்பிட்ட சொற்களாகும். ஏகத்துவக் கொள்கையென்ற தெளஹீது தான் ஸிறாத் என்ற நேர்பாதையென்பதையும் அந்த நேர்பாதையில் சறுக்காமல் செல்ல உதவியளிக்கும் பயிற்சிகளே அமல்கள் என்பதையும் நாம் உணர வேண்டும். அமல்கள் என்பதில் பர்லான சுன்னத்தானவையும் மற்றும் மல சலம் கழித்தல், உண்ணல், உறங்கல் எல்லாமே அடங்கும். ஆதலால் றசூல்(ஸல்) அவர்களுடையவும் அவர்களை மறுப்பவர்களுடையவும் விபரங்களை நாம் இன்னும் சிறிது ஆராயாமல் முடிவுக்குவர முடியாமலிருக்கிறோம். சுமார் 1410 வருடங்களின் முன்பே புதையுண்டு போன ஓர் விஷயத்தை திடீரென தெளிவுபடுத்தமுடியாது. எனவே சடைவுகொள்ளாமல் இன்னும் சிறிது பொறுமையடையுங்கள்.



# நரகம் செல்பவர்கள் யார்?

**ஹதீஸ்**

எனது சமூகத்தவரில் மறுப்பவரைத் தவிர ஏனையோர் சுவனம் செல்வர் என்று றசூல்(ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது தோழர்கள் மறுத்தவர்கள் என்றால் யார்? என்று வினவினார்கள்? எவர் என்னைப் பின்பற்றி ஒழுகுகிறாரோ அவர் சுவனபதி செல்வார். அன்றி எவர் எனக்கு மாறுசெய்தாரோ அவர் என்னை மறுத்தவராவார் என்று றசூல்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஹுறைறா(றலி)

ஆதாரம் : புஹாரி

இந்த ஹதீஸில் குறிப்பிடப்பட்ட நரகம் செல்பவர்கள்; றசூலை மறுத்தவர்கள் யார்? என்பதை நாம் உறுதியாய் அறிந்துகொள்ள முடியும். வேதம் கொடுக்கப் பட்ட ஒவ்வோர் றசூலுக்கும் ஒவ்வோர் எதிரிடைமனிதன், மறுத்தமனிதன், மாறு செய்த மனிதன் இருந்திருக்கிறான்.

**குர்ஆன்: 6:112**

இவ்வாறே ஒவ்வோர் நபிக்கும் மனிதரிலும் ஜின்களிலுமுள்ள ஸைத்தான்களை விரோதிகளாய் (மாறுசெய்பவர்களாய்) ஆக்கியிருந்தோம்.

எமது றசூல்(ஸல்) அவர்களை மறுத்தவன், எதிர்த்தவன், மாறுசெய்தவன் அபூஜஹ்ல் (அபுல்ஹிகம்) தான் என்பதை நாம் மறுக்க முடியாது. இவன் தலைவனாயும் ஏனைய முஸ்ரீக்குகள், காபீர்கள் இவனைப் பின் தொடர்ந்தவர்களாயும் இருந்திருக்கிறார்கள். மூஸா(அலை) அவர்களின் எதிரியான பிர்அவுனைவிட என்னுடைய பிர்அவுன்(அபூஜஹ்ல்) மிகக் கடினமானவன் என்று றசூல்(ஸல்) அவர்கள் கூறியுள்ளதாகச் சில ஹதீஸ்கள் அறிவிக்கின்றன. எனவே நரகம் செல்லும் கூட்டத்தின் தலைவன் அபூஜஹ்லும், சுவர்க்கம் செல்லும் கூட்டத்தின் தலைவர் முகம்மது(ஸல்) அவர்களும் எவ்வெவ் விஷயங்களில் இவ்விருவரும் ஒன்றுபடுகிறார்கள், எவ்விஷயத்தில் வேறுபடுகிறார்கள் என்பதைக் கண்டறிவதற்காக எமது பகுத்தறிவை இங்கே பயன்படுத்துவோம்.

# ஒற்றுமை வேற்றுமை

#### 1. றசூல்(ஸல்) அவர்களின் கொள்கை

'லாஇலாஹஇல்லல்லாஹ்' அல்லாஹ் தவிர இலாஹு இல்லை இருந்து கொண்டிருக்கும் (மவுஜூதுன்) இலாஹு அல்லாஹ்வின் வேறல்ல. அல்லாஹ்வுடன் அவனல்லாத எதுவும் கிடையாது. உண்டென்று கொள்வது ஸிர்க் (இணை ஏற்படுத்துதலாகும்) நானும் எம்முன்னோரான நபிமாரும் இணை ஏற்படுத்துபவர்களல்ல. இணை ஏற்படுத்துதல் மன்னிக்கப்படமுடியாத பெரும் குற்றமாகும். இதுதான் றசூல்(ஸல்) அவர்களுடைய கொள்கையின் உயிர். தௌஹீது என்பதும் ஏகத்துவம் என்பதும் இதுதான். இவ்விஷயத்தை கலிமாவும், அதன் தலீல் (ஆதாரம்)களான குர்ஆன் ஆயத்துக்களும் அவற்றின் விரிவுரைகளான ஹதீஸ்களும் சக்குச் சந்தேகமில்லாமல் நிரூபணம் செய்துகொண்டிருக்கின்றன. இன்றும் குர்ஆன் ஓர் சவால் விட்டுக் கொண்டிருக்கிறது.

குர்ஆன்: 27:64

அல்லாஹ்வுடன் வேறு இலாஹு இருக்கிறதா? (இல்லை) நீங்கள்(உண்டென்று) உண்மை சொல்பவர்களாய் இருந்தால் உங்களுடைய ஆதாரங்களைக் கொண்டு வாருங்கள்.

(இதுதான் குர்ஆனின் சவால்).

இதுவரை எவரும் ஆதாரம் தரவேயில்லை. இனிமேலும் தரவே முடியாது, ஆதாரம் கிடைக்கவே கிடையாது என்று குர்ஆன் அழுத்தம் திருத்தமாய்க் கூறிக்கொண்டிருக்கிறது. (இங்கே இறைவனின் வாஜிபான ஸிபத்துக்கள் ஜாயிஸான ஸிபத்துக் களையும் கவனத்தில் கொள்க.) சுருங்கக் கூறினால் றசூலின் கொள்கையின் விபரம் என்னவென்றால் அல்லாஹ்வுடன் வேறு இல்லை என்பதுதான்.

#### 2. அபூஜஹ்லின் கொள்கை

அல்லாஹ் ஒருவனுண்டு. நாங்கள் வணங்கும் சிருட்டிகளான இலாஹுகள் (ஆலிஹத்) அல்லாஹ்வை விட்டும் வேறானவை. அல்லாஹ் அல்லாதவை. முஹம்மது கூறுகிற கலிமாவும் வேத வசனங்களும் பொய்யானவை. முஹம்மது எல்லா இலாஹும் அல்லாஹ்தான் என்று கூறுகிறார்கள். இது நம்மூதாதையர்களும் கூறாத கேள்விப்படாத ஓர் ஆச்சரியமான விஷயம்.

(இதுதான் முஸ்ரீக்கான அபூஜஹ்லின் கொள்கை).

**குர்ஆன்: 38:5, 6, 7**

என்னே! இவர் எல்லா இலாஹுவையும் ஒரே இலாஹுதான் என்று ஆக்கி விட்டாரா? மெய்யாகவே இது ஓர் ஆச்சரியமான விஷயம்தான் (என்று கூறி) அவர்களிலுள்ள தலைவர்கள் நீங்கள் சென்றுவிடுங்கள். உங்கள் இலாஹுகளில் உறுதியாய் இருங்கள். இக்காரியம் நிச்சயமாக (உங்களுக்கு விரோதமாக) கருதப்பட்டதாகும் என்று கூறிச்சென்றுவிட்டனர். முன்னுள்ள சமுதாயத்தாரிலும் இதனை நாம் கேள்விப் பட்டதில்லை. (இது இலாஹு) சிருட்டியேயன்றி வேறில்லை.

இது குர்ஆன் எமக்குத் தரும் சாட்சியாகும். இதைப்போல் 37:36, 37 போன்ற வசனங்களையும் ஒப்பிட்டு நோக்கிப் பாருங்கள்.

**ஹதீஸ்**

(முஹம்மதே!) நிச்சயமாக நாம் உம்மைப் பொய்யராக்கவில்லை. எனினும் நீர் எதனைக் கொண்டுவந்தீரோ அதனையே நாம் பொய்யாகக் காண்கின்றோம் என்று அபூஜஹீல் கூறினான். அப்போது நபியே! அவர்கள் கூறுவது உமக்குக் கவலை யளிக்கிறது என்பதைத் திட்டமாக நாம் அறிவோம். அவர்கள் உம்மைப் பொய்யராக்க வில்லை. ஆனால் இவ்வக்கிரமக்காரர்கள் அல்லாஹ்வுடைய வசனங்களையே பொய்யாக்கிப் புறக்கணிக்கிறார்களென்ற 6:33ம் ஆயத்தை அருளினான்.

அறிவிப்பவர் : அலி (றலி)

ஆதாரம் : திர்மிதி

இந்த ஹதீஸின்படி றசூல்(ஸல்) அவர்களால் உபதேசிக்கப்பட்ட கலிமாவையும் அதன் ஆதாரங்களான (தலீல்) வேத வசனங்களையும்தான் அபூஜஹீல் மறுத்தான், எதிர்த்தான், புறக்கணித்தான் என்பது நிரூபணமாகிறது.

**குர்ஆன்: 23:44**

பின்னரும் நம்முடைய தூதர்களை ஒருவர்பின் ஒருவராக அனுப்பிக் கொண்டே யிருந்தோம். (நம்முடைய) தூதர் எவ்வகுப்பாரிடம் வந்தபோதும் அவர்கள் அவரைப் பொய்யாக்கிக் கொண்டேயிருந்தார்கள். ஆகவே நாமும் ஒருவருக்குப் பின் ஒருவராக அழித்துக்கொண்டே வந்தோம். அவர்கள் அனைவரையும் வெறும் சரித்திரமாக்கிவிட்டோம்.

இவ்வாயத்தின்படி அபூஜஹீல் மட்டுமல்லாமல் இதற்கு முந்திய நபிமார்களின் எதிரிடை மனிதர்களும் கொள்கையைத்தான் பொய்யாகக் கண்டிருந்திருக்கிறார்கள் என்பது உறுதியாகிறது.

சுருக்கமாய்க் கூறினால், அல்லாஹ் மட்டுமே ஏகனாய் இருக்கிறான் என்பது றசூலின் கொள்கையாயும், இறைவன் ஒருவன் இருக்கிறான் எனினும் அவனுடன் அவனல்லாத இலாஹும் (சிருட்டியும்) உண்டென்பது அபூஜஹீலின் கொள்கை

யாயும் இருந்திருக்கிறது. இறைவனை ஏகனாய்க் காணும் றசூலின் கொள்கை தௌஹீதாயும் இறைவன் ஒருவனேயென்றும் அவனுடன் அவனல்லாததுமுண்டு என்றும் காணும் அபூஜஹ்லின் கொள்கை ஸிர்க் (இணை) ஆகவும் இருக்கிறது. குர்ஆன் ஹதீஸுகளை ஒப்புக்கொண்ட எவரும் இதை மறுக்க முடியாது:

**3. றசூல்(ஸல்) அவர்கள் தங்கள் கொள்கைக்கு ஆதாரமாய்**

57:3, 16:22, 16:51, 7:85, 21:22, 43:84, 23:91, 17:42, 21:99, 2:115, 4:126, 4:171, 42:11, 9, 40, 50:16, 2:86, போன்ற இன்னும் பல ஆயத்துக்களை விளக்கினார்கள். இவற்றில் ஒன்றை மட்டும் நோக்குவோம்.

**குர்ஆன் : 57:3**

ஆதியும் அவனே, அந்தமும் அவனே, தோற்றுவதும் அவனே, மறைந்திருப் பவனும் அவனே, அவன் சகலத்தையும் அறிந்தவன்.

இவ்வாயத்தில் கூறப்பட்டபடி சிருட்டிக்கு ஆதியாயும், அந்தமாயும், தோற்று பவனாயும், தோற்றாதவனாயும், அறிந்தவனாயும் இருக்கிறான் என்ற கூற்றில் நான்கு விஷயங்களை அபூஜஹ்ல் ஏற்றிருந்து ஒன்றைமட்டும்தான் மறுத்திருக்கிறான். ஆதி, அந்தம், மறைவு, அறிவு ஆகிய நான்கும் அல்லாஹ்வுக்குரியதென்று ஏற்றுக் கொண்ட அபூஜஹ்ல், இறைவன் தோற்றுபவன் (மறையாமல் வெளிப்படையாய் இருப்பவன்) என்பதை மட்டும்தான் மறுத்திருக்கிறான். இலாஹு அல்லாஹ்வின் தோற்றமே என்பதை அவன் ஏற்கவே இல்லை. இவ்விஷயத்தில்தான் அவன் ஆச்சரியமடைந்தான். அவன் வணங்கிய இலாஹுவை அல்லாஹ்வின் வேறான தென்றே (ஈமான்) விசுவாசம் கொண்டிருந்த அவனுக்கு, இலாஹுவான சிருட்டி அல்லாஹ்வின் வேறல்ல என்று கூறும் கலிமா பொய்யாய்த் தென்பட்டிருக்கிறது. ஆதாரம்;

**குர்ஆன்: 38:7**

முன்னுள்ள சமுதாயத்தாரிலும் இதனை நாம் கேள்விப்பட்டதில்லை. இது சிருட்டி யேயன்றி வேறில்லை.

சுருங்கக் கூறினால் அல்லாஹ்வுடன் அவனல்லாத சிருட்டியும் உண்டென்பதே அபூஜஹ்லின் கொள்கையாகும்.

**4. றசூல்(ஸல்) அவர்களுடைய வணக்கம்**

றசூல்(ஸல்)அவர்கள் அல்லாஹ்வை நெருங்கிச்சேர (ஸலாத்) தொழுகை, திக்ரு போன்ற அமல்களைக் கையாண்டார்கள். அதாவது றசூல்(ஸல்) அவர்கள் தொழு கையை வஸீலாவாய்க் கொண்டிருந்திருக்கிறார்கள். இறைவனைப் (பாதின்) அரூப நிலையில் கொண்டே வணங்கினார்கள். உருவ நிலையில் வணங்குதல் ‘குப்ரு’

என்றும் கூறினார்கள். அரூப நிலையில் இறைவனைக் கற்பித்து வணங்குவது ஆகுமானதுதான். ஏனென்றால் அரூபம் என்னும்போது, எல்கை கணிக்க முடியா திருப்பதால் இறைவன் ஏகன், வியாபகன் என்று பெறப்படுகிறது. இது தௌஹீ துக்கு முரணாகாது. ஆனால் கண்டப்படுத்தி உருவத்தில் மட்டுப்படுத்தி வணங்குவது 'குப்ரு' ஆக அமைகிறது. எப்படியென்றால்; ஒரு கண்டப்பொருளை அல்லாஹ் என்று நம்பி வணங்கினால் மற்றும் கண்டப்பொருட்களை அல்லாஹ் அல்ல என்று கொள்ள நேரிடும். எல்லாக் கண்டப்பொருட்களும் அல்லாஹ்தான் என்றெடுத்துக் கொண்டால் எல்லாவற்றையுமே வணங்கவேண்டியேற்படும். இது செயல்படுத்த முடியாத ஒன்றாகும். வணங்கப்படும் பொருள் அல்லாஹ் அல்ல என்று கொண்டால் அது ஸிர்க்காகும். (இதுதான் அபூஜஹீலின் வணக்கம்) ஆகவே றசூலின் தொழுகை தான் அறிவுக்குப் பொருத்தமானதென்பது தென்படுகிறது. இந்த தொழுகையின் நோக்கம் அல்லாஹ்வின் அன்பை அல்லது ஜன்னத்தைப் பெறுவதுதான்.

#### 5. அபூஜஹ்லின் வணக்கம்

இவன்:அரூபியாய் இருப்பவனே இறைவன் என்றுதான் நம்பியிருந்தவன். அரூபி யாய் இருக்கும் இறைவனை நெருங்கிச் சேரவே விக்கிரகத்தை வசீலாவாக எடுத்துக் கொண்டிருக்கிறான். இவனுடைய நோக்கமும் றசூலுடைய நோக்கமும் (நிய்யத்) அல்லாஹ்வின் அன்பை ஜன்னத்தைப் பெறவேண்டும் என்பதுதான். நிய்யத் ஒன்றாக இருந்தாலும் றசூலின் வணக்கம் தௌஹீதை (ஈமானை) உறுதிப்படுத்தும் பயிற்சி யாயும், அபூஜஹீலின் வணக்கம் ஸிர்க்கை (இணையை) உறுதிப்படுத்தும் பயிற்சி யாயும் இருக்கின்றன. ஆனால் நபிமாரையும் கலிமாவையும் ஒப்புக்கொண்ட அஹ்லுல் கிதாபிகள், உஸைர்(அலை), ஈஸா(அலை) போன்றோரை இறைவனின் குமாரர்கள் என்று கூறியது மட்டுமல்லாமல் சிருட்டி வணக்கமும் செய்திருக்கிறார்கள். இவர்களைக் குர்ஆனில் காபிர்கள் என்று இறைவன் கூறுகிறானேயன்றி முஸ்ரிக் கீன்கள் என்று கூறவில்லை. எனினும் அபூஜஹீல் போன்றோரை இறைவன் காபீ ரென்று கூறாமல் முஸ்ரீக் என்றே கூறுகிறான். முஸ்ரீக், காபீர் ஆகிய இவ்விரு கூட்டத்தினருக்குமிடையிலுள்ள வேறுபாட்டை விளக்கும் நோக்கமாகப் பல ஆயத் துக்களை அல்லாஹ் எமக்கருளியுள்ளான்.

#### குர்ஆன்: 5:5

இன்று முதல் (புசிக்க) பரிசுத்தமானவைகளையே உங்களுக்கு ஆகுமாக்கப் பட்டுள்ளன. வேதத்தையுடைய (அஹ்லுல் கிதாபிகளான) மக்களின் ஆகாரமும் அவர்களுக்கு ஆகுமானதே. விசுவாசங்கொண்ட கற்புடைய பெண்களையும் உங்களுக்குமுன் வேதம் கொடுக்கப்பட்ட கற்புடைய பெண்களையும் விபச்சாரி களாகவோ, வைப்பாட்டிகளாகவோ கொள்ளாமல் அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய மஹர்களையும் கொடுத்து (மணம்செய்து) கொள்வது (உங்களுக்கு

ஆகும்) அன்றி எவன் விசுவாசம் கொண்டதின் பின்னர் (இவற்றை) நிராகரிக்கிறானோ அவனுடைய (நற்)செயல் நிச்சயமாக அழிந்துவிடும், மறுமையிலோ அவன் நஸ்டமடைந்தவனாகவே இருப்பான்.

இவ்வித ஆயத்துக்கள் மூலம் கலிமாவை ஒப்புக்கொண்டிருந்தும் இறைவனைக் கண்டப்படுத்தி வணங்கிய அஹ்லுல்கிதாபிகளின் உணவையும் பெண்களையும் எமக்கு ஹலாலாக்கிய இறைவன் முஸ்ரீக்குகளின் பெண்களையும் உணவையும் எமக்கு ஹறாம் என்று விலக்கியிருப்பதைக் காணுகிறோம்.

**குர்ஆன்: 2:221**

இணை ஏற்படுத்தும் பெண்களை விசுவாசம் கொள்ளும் வரையில் நீங்கள் மணந்து கொள்ளாதீர்கள். விசுவாசியான ஓர் அடிமைப்பெண் இணை ஏற்படுத்தும் ஒரு பெண் உங்களைக் கவரக்கூடியவளாக இருப்பினும் நிச்சயமாக (அவ்வடிமைப் பெண்) மேலானவள். இணை ஏற்படுத்தும் ஆண் விசுவாசம் கொள்ளும்வரையில் நீங்கள் (விசுவாசியான பெண்ணை) மணமுடித்துக் கொடுக்காதீர்கள், விசுவாசியான ஓர் அடிமை இணை ஏற்படுத்தும் ஓர் ஆணைவிட, அவன் உங்களைக் கவரக் கூடியவனாக இருப்பினும் நிச்சயமாக (விசுவாசியான அடிமை) மேலானவன். இவர்களெல்லாம் நரகுக்கழைக்கிறார்கள். ஆனால் அல்லாஹ்வோ தன் கிருபையைக் கொண்டு சொர்க்கத்திற்கும் மன்னிப்பிற்கும் அழைக்கிறான். மனிதர்களுக்கு அவர்கள் நினைவில் இருத்தி நடந்துகொள்ளும் பொருட்டுத் தன்னுடைய வசனங்களை விபரிக்கின்றான்.

அபூஜஹ்லும் அஹ்லுல் கிதாபிகளும் சிருட்டி வணக்கம் செய்திருக்கும் போதும், அஹ்லுல் கிதாபிகளின் உணவு பெண்கள் போன்றவற்றை ஹலாலாயும் அபூஜஹ்லின் (முஸ்ரீக்குகளின்) உணவையும் பெண்களையும் இறைவன் எமக்கு ஏன் ஹறாமாகவும் ஆக்கவேண்டும்? இதில் ஓர் நுட்பம் இருக்கிறது. அஹ்லுல் கிதாபிகள் அல்லாஹ்வையன்றி அவனுடன் இணை எதுவுமே இல்லையென்று விசுவாசம் கொண்டவர்கள். சிருட்டியென்ற ஒவ்வோர் மழ்கரிலும் அவனே தரிபட்டிருக்கிறான் என்று நம்பியவர்கள். அதாவது இறைவன் தோற்றுபவனாயும் (லாஹிறாயும்) இருக்கிறான் என்ற வேதவசனத்தை ஒப்புக்கொண்டவர்கள் (சிருட்டி ஹுரூர் மாய்கை என்பதை ஒப்புக்கொண்டவர்கள்) இது சுத்தமான தௌஹீதுதான். ஆயினும் ஓர் குறிப்பிட்ட பொருளை மட்டும் அல்லாஹ் என்று கொள்ளும்போது அவர்களுடைய ஈமானை மூடிறைப்பதாய் இருக்கிறது. ஆகையால்தான் இன்னோரைக் காபிரீன்கள் (மூடுபவர்கள், மறைப்பவர்கள்) என்று இறைவன் கூறுகிறான். ஆதலால் இது மன்னிக்கப்படக்கூடிய பாவம்தான் என்பது தென்படுகிறது. ‘குப்ரு’ என்பதற்கு மறைத்தல், மூடல் என்பதே அர்த்தமாகும்.

**குர்ஆன்: 5:90**

மூமீன்களே! நிச்சயமாகச் சாராயமும், சூதாட்டமும், விக்கிரக ஆராதனையும், அப்பெறிந்து குறிகேட்பதும் ஸைத்தானுடைய அருவருக்கத்தக்க வேலைகளிலுள்ள வைகளாகும். ஆகவே இவற்றிலிருந்து விலகிக்கொள்ளுங்கள் நீங்கள் சித்தி பெறுவீர்கள்.

சிருட்டி அல்லாஹ்வின் வேறல்ல என்று நம்பிச் சிருட்டியை வணங்குதல்; சாராயக்குடி போன்ற பாவமேயன்றி மன்னிக்கப்பட முடியாத பாபமல்ல. விக்கிரக வணக்கம் வேறுபடுகிறது. அவன் வணங்கிய இலாஹுவை அல்லாஹ்வைப்போல், அவனல்லாத உஜூது என்று நம்பினான். அல்லாஹ் ஓர் பொருளென்றும் நம்பினான். ஆகவே அவனுடைய அறியாமையால் அல்லாஹ் என்ற உண்மையான உஜூதுடன் அல்லாஹ் அல்லாத தனித்தனி உஜூதுகளும் உண்டென்று நம்பினான். இவனுடைய உள்ளத்தில் பல உஜூதுகளைக் கற்பனையாய் உருவாக்கிக் கொண்டான். இந்தத் தவறான விசுவாசத்தின் பெயர்தான் ஷிர்க் இணை ஏற்படுத்தல் என்பது. செயல் ஏறக்குறைய ஒன்றுபோல் இருப்பினும் கொள்கையின் வேறுபாட்டினால்தான் முஸ்ரீக்கிலிருந்தும் காபீர் வேறுபடுகிறான். முமீனோ இவ்விரு வகையினரிலிருந்தும் வேறுபடுகிறார். இந்த வேறுபாடு கொள்கையினால்தான் ஏற்படுகிறது. வணக்கத்தி னாலல்ல.

விக்கிரக வணக்கம் செய்பவன் அந்த விக்கிரகம் அல்லாஹ் அல்லாததென்று நம்புவதே ஸிர்க்கின் ஆணிவேராய் இருக்கிறது.

**குர்ஆன்: 4:48**

நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணை ஏற்படுத்துவதை மன்னிக்கவே மாட்டான் இதைத்தவிர எதனையும் தான் நாடியோருக்கு மன்னிப்பான். எவர்கள் அல்லாஹ்வுக்கு இணை ஏற்படுத்துகிறார்களோ நிச்சயமாக மிகப்பெரும் பாபத்தையே கற்பனை செய்கிறார்கள்.

(4:116 போன்ற ஆயத்துக்களையும் இங்கே எடுத்துக்கொள்க.)

இவ்வாயத்துக்களின்படி அல்லாஹ் நாடினால், சாராயக்குடி, சூதாட்டம், விக்கிரக ஆராதனை போன்ற பாபச்செயல்களிலிருந்தும் மனிதனால் மீட்சிபெற முடியும். அல்லது பாபத்தினளவு நரகவேதனையை அனுபவித்த பின்பாவது ஓர் மீட்சி கிடைக்கலாம். ஆனால் அல்லாஹ்வுடன் அவனல்லாதவையு முண்டென்ற ஸிர்க்கில் மூழ்கியவன் இணையைக் கற்பனை செய்தவன் என்றென்றும் நரகில் தரிபட வேண்டியவனாய் இருக்கிறான்.

### 6. றசூல்(ஸல்) அவர்கள் கொண்டிருந்த விசுவாசத்தின் சில விபரங்கள்

அல்லாஹ் சர்வவல்லமையுடையவன். அவனையன்றி வேறுவல்லமை கிடையா தென்பது குர்ஆன் ஹதீஸுகளின் வாதம். றசூலின் நம்பிக்கை இதுதான்.

**குர்ஆன்: 2:165**

சர்வசக்தியும் அல்லாஹ்வுக்கே உரியது.

ஆனால் அபூஜஹீல் சர்வசக்தியும் அல்லாஹ்வுக்குண்டென்று நம்பியதோடு, அல்லாஹ்வின் வேறானதென்று நம்பிய இலாஹுவான சிருட்டிக்கும் சக்தியுண் டென்று நம்பினான். சிருட்டி அல்லாஹ் அல்லாததாய் இருப்பதால் அல்லாஹ்வின் சக்தியைப்போல் தனித்தனி வுஜூதான சிருட்டிக்கும் தனித்தனிச் சக்தி உண்டென்று அபூஜஹீல் நம்பினான். சக்தியில் இணையை ஏற்படுத்தினான். ஆகையால்தான் சிருட்டியான இலாஹுவிடத்தில் உதவிதேடினான். அவற்றை வசீலாவாய்க் கொண்டான். இவ்விபரங்களை குர்ஆன் விபரமாய் விளக்குகிறது.

**குர்ஆன்: 10:31**

(நபியே!) நீர் அவர்களை நோக்கி வானத்திலிருந்தும் பூமியிலிருந்தும் உங்களுக்கு ஆகாரமளிப்பவன் யார்? உங்களுடைய கேள்விக்கும் பார்வைக்கும் உரிமை யாளன் யார்? இறந்தவற்றிலிருந்து உயிருள்ளவற்றையும், உயிருள்ளவற்றிலிருந்து இறந்தவற்றையும் வெளிப்படுத்துபவன் யார்? என்று கேட்பீராக. அதற்கவர்கள் (முஸ்ரிக்கீன்கள்) அல்லாஹ்தானென்று கூறுவார்கள். அவ்வாறாயின் நீங்கள் பயப்படவேண்டாமா? என்று கேட்பீராக.

இதைப்போல் குர்ஆனில் இடம்பெறுகிற 23:86, 23:87, 29:61, 10:31, 43:9 போன்ற ஆயத்துக்களையும் கவனித்துப் பாருங்கள். அந்த (முஸ்ரீக்குகள்) அபூஜ ஹீலும் அவன் தோழர்களும் அல்லாஹ் ஒருவனேயென்றும், அவன் சர்வ வல்லமை யுமுடையவனென்றும்தான் நம்பியிருந்திருக்கிறார்கள்.

**குர்ஆன்: 39 : 3**

(இலாஹுகளான) இவை அல்லாஹ்விடத்தில் நெருங்கிச் சேர்க்கும் என்பதற்காக வேயன்றி நாங்கள் அவற்றை வணங்குவதில்லை.

இவ்விதமான ஆயத்துக்கள் இறைவன் எமக்குத்தரும் சாட்சியங்களாய் இருக் கின்றன. எனவே அல்லாஹ் ஒருவனே என்பதையும் அந்த ஒருவனே இறைவன் (றப்பு) என்பதையும், அவன் சர்வவல்லமையுமுள்ளவன் என்பதையும் அந்த முஸ்ரிக்கீன்களான மறுப்பவர்கள் திடமாக அறிந்திருந்தார்களென்பது வெளிப்படை. மேலும் அந்த ஒரே இறைவனை நெருங்கிச்சேர, அவனன்பைப் பெறவே சிருட்டி யான இலாஹுவை வணங்கினார்களென்பதை அறிந்து கொண்டோம். வணக்கம்

நன்நோக்குடையதுதான். ஆயினும் இது ஸிர்க்காக அமைவது ஏன்? அடிப்படைக் கொள்கை (ஈமான்) பிழையாய் இருப்பதனால் தான்.

7. றசூல்(ஸல்) அவர்களும் தோழர்களும் தங்கள் கொள்கையை நிலைப்படுத் தவும் தற்பாதுகாப்பை உருவாக்கவும் பல அரிய யுத்தங்களைச் செய்திருக் கிறார்கள். அதாவது தௌஹீதை உறுதிப்படுத்தவே யுத்தம் செய்தார்கள்.
8. அபூஜஹ்லும் அவன் தோழர்களும் தங்கள் கொள்கையை நிலைப்படுத்தவும் தற்பாதுகாப்பை உருவாக்கவும்தான் யுத்தம் செய்திருக்கிறார்கள். அதாவது: தௌஹீதுக்கு மாறான ஸிர்க்கை உறுதிப்படுத்தவே யுத்தம் செய்திருக்கிறார்கள். றசூலுக்கும் அபூஜஹ்லும் தத்தமது கொள்கையை நிலைப்படுத்தவே யுத்தம் செய்திருக்கிறார்கள்.
9. றசூல்(ஸல்) அவர்களும் தோழர்களும் பேசிய பாஷை, உடை, உணவு, இடம், கலை, கலாச்சாரம் போன்ற விஷயங்களில் அபூஜஹ்லும் அவன் தோழர்களும், நபியுடனும் தோழர்களுடனும் ஏறக்குறைய சமமாய்த்தான் இருந்திருக் கிறார்கள்.

**குர்ஆன்: 23:33, 34**

....இவர் உங்களைப் போன்ற மனிதரேயன்றி வேறில்லை. நீங்கள் புசிப்பதையே அவரும் புசிக்கிறார், நீங்கள் குடிப்பதையே அவரும் குடிக்கிறார். ஆகவே உங்களைப் போன்ற மனிதனை நீங்கள் பின்பற்றினால் நிச்சயமாக நீங்கள் நஸ்டமடைந்து விடுவீர்கள்.

(இது முஸ்ரீக்குகளின் கூற்றாகும்).

அபூஜஹ்ல் மட்டுமன்றி முன்சென்ற நபிமாரின் எதிரிடை (மறுத்த) மனிதர்களும் கூட கொள்கையை எதிர்த்தார்களென்பதும், ஊண், உடை, பாஷை போன்ற விஷயங்களில் நபிமார்களும் அவர்களின் சமூகமக்களும் ஏறக்குறைய ஒற்றுமை யுடையவர்களாய்த்தான் இருந்திருக்கிறார்கள் என்பதும் உறுதியாகிறது.

இதைப்போலவே மற்றும் வாகனம், பலதார மணம் போன்ற பிற விஷயங் களையும் ஒப்பிட்டு நோக்கினால், முஸ்லீம்கள் மூமீன்களாகிய எம்மைவிட 98% றசூலைப் பின்பற்றியிருந்தவன் அபூஜஹ்ல்தான் என்பது தென்படுகிறது. எனவே றசூல்(ஸல்) அவர்களுக்கும் அவர்களின் எதிரியான மாறுசெய்த அபூஜஹ்லுக்கு முள்ள வேறுபாடு இரு விஷயங்களில் மட்டும்தான் தென்படுகிறது. அவை யாவன:

1வது: கொள்கை விளக்கம்.

2வது: கொள்கையை உறுதிப்படுத்தும் தொழுகை போன்ற அணுகுமுறைப் பயிற்சி.

றசூல்(ஸல்) செய்த அதே செயல்களைக் கையாண்ட அபூஜஹ்லின் செயல்கள் ஸிர்க்காயும், றசூலின் செயல்கள் தௌஹீதாயும் அமைந்த காரணம்தான் என்ன? றசூலிற்கும் அபூஜஹ்லுக்கும் கொள்கையில் நேர்விரோதமும் மாறுபாடும் அமைந்திருந்ததே அதற்குரிய காரணமாகும்.

அபூஜஹ்லை மட்டும் நோக்காமல், நபிமாரை எதிர்த்த மறுத்த, நம்றூத், பிர்அவுன் போன்றவர்களையும் ஒப்பிட்டு நோக்கிப் பாருங்கள். இந்த மறுப் பாளர்கள் யாவரும் கொள்கையைத்தான் மறுத்திருக்கிறார்கள். மற்றும் கலை, கலாச்சாரம், பாஷை, உணவு, உடை, தாடி, தலைப்பாகை போன்ற விஷயங்களில் றசூல்மார்களும் அவர்களை மறுத்தவர்களும் ஏறக்குறைய ஒற்றுமையுடைய வர்கள்தான். அவர்களிடத்தில் உலக விஷயங்களில் பெரும்பாலும் வேற்றுமை கிடையாது. எனினும் அபூஜஹ்லின் செயல்கள் யாவும் ஸிர்க்காக, குப்ருவாக அமைந்ததும், றசூல்(ஸல்) அவர்களுடைய செயல்கள் யாவும் தௌஹீதாய் மாற்ற மடைந்ததும் கொள்கை (ஈமான்) யினாலேயன்றிச் செயல்களினாலல்ல. மனிதனு டைய அன்றாட வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும் மனிதன் 'ஸிர்க்' இல்லாமல் வாழ்வதானால் 'லாஇலாஹஇல்லல்லாஹ்' என்ற கலிமாவின் கருத்தை (கொள்கையை) விளங்கித் தெளிவுபெற்று அதற்காகவே வாழவேண்டியது அவசியத்திலும் அவசிய மாகும். இல்லையேல் மாபெரும் மேதை மாபெரும் ஆபிது என்று மக்களால் கணிக்கப்பட்டாலும்கூட ஷிர்க்கிலிருந்து தப்பவே முடியாதென்பதை நாம் நம்பித் தானாக வேண்டும்.

மேலே நான் மிகச்சுருக்கமாய்த் தந்த விபரங்களை இங்கே தொகுத்துத் தருகிறேன்.

1வது : நாம் காட்டிய ஆயத்துக்களின்படி சுன்னா என்ற சொல் வழமை, வழி, திட்டம், நியதி, இயல்பு என்ற பொருட்களிலேயே பாவிக்கப்பட்டிருக்கிறது என்பது நிரூபணமாகிறது.

2வது : சுன்னா என்ற சொல்லினால் உணர்த்தப்படும் உண்மை தௌஹீதென்ற ஏகத்துவக் கொள்கைதான் என்பது நிரூபணமாகிறது.

3வது : இஜ்மாஉ என்ற அடிப்படையில் நபிமார்களின் இஜ்மாஉ முதலாம் இடத்தையும் வலிமார்களின் இஜ்மாஉ இரண்டாவது இடத்தையும் கொண் டிருக்கின்றனவென்பதை நாமறிவோம், 7:59, 7:65, 7:73, 7:85, 41:43, 21:25 போன்ற குர்ஆன் ஆயத்துக்களின்படி, நபிமார் றசூல்மார்களின் இஜ்மாஉ என்பது 'லாஇலாஹஇல்லல்லாஹ்' என்ற கலிமாவினால் உணர்த் தப்படும் தௌஹீதென்ற ஏகத்துவ உண்மையை மக்களுக்கு எத்திவைப்பதே யாகும். இது நபிமார்களின் சுன்னா, வழமை, வழி, திட்டம், நியதி இயல்பு என்பது உறுதியாகிறது. (நபிமார்கள் யாவரும் கலிமாவை ஏகோபித்த அபிப்பிராயமாய் ஏற்றுக்கொண்டிருந்து மக்களுக்கு ஏவியதே அவர்

களுடைய இஜ்மாஉ ஆகும்.) வேறு இஜ்மாஉ எமக்கு அவசியமில்லை. குர்ஆனுடன் ஒத்த சொல்லை இஜ்மாஉ என்று கூறுவதில் தவறில்லை.

4வது : றசூல்மார்கள், நபிமார்கள் 'லாஇலாஹஇல்லல்லாஹ்' என்ற கலிமாவினால் உணர்த்தப்பட்ட ஏகத்துவ உண்மையையே அவரவர் சமூகமக்களிடம் கூறி அதை உறுதிப்படுத்தவே வெவ்வேறு வகையான ஸரீயத்தை (அமல்களை)க் கையாண்டிருப்பதால் தௌஹீதை ஏற்றுக்கொண்டவரே சுன்னாவை ஏற்றுக்கொண்டவர் என்பது 'கியாஸ்' என்ற பிரமாணப்படி நிரூபணமாகிறது. (பர்லான கடமைகளைப் பின்னால் நோக்குவோம்.)

மேலே கூறிய குர்ஆன், ஹதீஸ், இஜ்மாஉ, கியாஸ் ஆகிய இஸ்லாத்தின் மூலப் பிரமாணங்களின்படி 'லாஇலாஹஇல்லல்லாஹ்' என்ற கலிமாவினால் உணர்த்தப்படும் தௌஹீதை ஏற்றுக்கொண்டவர் எவரோ அவர்தான் றசூல்(ஸல்) அவர்களையும் அவர்களின் தோழர்களையும் பின்பற்றிய சுன்னத்வல்ஜமா அத்தைச் சேர்ந்தவர் என்பதைச் சந்தேகமில்லாமல் இப்போது அறிந்து கொண்டோம்.

ஆயினும் இஸ்லாத்தின் மூலப்பிரமாணங்களில் இன்னுமோர் பிரமாணம் மீதியாய் இருக்கிறது. அதுதான் அனுமானத்தோடுள்ள பகுத்தறிவு அல்லது யுக்தி என்பது. இதையும் இப்போது நோக்கிப் பார்ப்போம்.

**குர்ஆன்: 2:62**

விசுவாசிகளாயினும், யூதர்களாயினும், கிறிஸ்தவர்களாயினும் எவர்கள் அல்லாஹ்வையும் இறுதிநாளையும் உண்மையாகவே விசுவாசித்து நற்கருமத்தைச் செய்தார்களோ அவர்களுக்கு அவர்களுடைய கூலி இறைவனிடம் நிச்சயமாக உண்டு. மேலும் அவர்களுக்கு எவ்வித பயமும் இல்லை. அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்.

(2:112 ஆயத்தைப் போன்றவற்றையும் இங்கே எடுத்துக் கொள்க.)

இந்த ஆயத்தின்படி எஹுது நஸாறாக்களான அஹ்லுல் கிதாபிகளிலும் ஜன்னத்தில் நுழையும் சுன்னத்வல்ஜமாஅத்தினரான மூமீன்கள் உண்டென்பது தென்படுகிறது. இவ்விஷயத்தை றசூல்(ஸல்) அவர்களுடைய பல ஹதீஸ்கள் உறுதிப்படுத்துகின்றன. ஒரு ஹதீஸை மட்டும் இங்கே தருகிறேன். (இந்த ஹதீஸ் முன்பும் தரப்பட்டுள்ளது.)

**ஹதீஸ்**

இஸ்ரவேலர்கள் 72 கூட்டமாய்ப் பிரிந்தார்கள், என்னுடைய உம்மத்துக்கள் 73 கூட்டமாய்ப் பிரிவார்கள். (இவர்களில்) ஒரு கூட்டத்தினரைத் தவிர மற்றெல்லாக் கூட்டத்தினரும் நரகவாதிகளாவார்கள் என்று கூற் யாறசூலுல்லாஹ் (சுவனம் செல்லும்) அக்கூட்டத்தினர் எவர்? என்று தோழர்கள்(ஸஹாபாக்கள்) கேட்ட போது

'நானும் என்னுடைய தோழர்களும் எந்த சுன்னாவில் (வழியில்) அல்லது வழமையில்) இருக்கிறோமோ அந்த சுன்னாவை எடுத்துக் கொண்டவர்கள்' என்று றசூல் (ஸல்) அவர்கள் கூறினர்.

அறிவிப்பவர் : இப்னு உமர் (றலி)
ஆதாரம் : அபூதாவூத் : இப்னுமாஜா

இன்னும் ஓர் ஹதீஸில்; மூஸா(அலை) அவர்களுடைய கூட்டம் 71 என்றும் ஈஸா(அலை) அவர்களின் கூட்டம் 72 என்றும் றசூல்(ஸல்) அவர்களின் கூட்டம் 73 என்றும் இவர்களில் ஒவ்வோர் கூட்டமே ஜன்னத்தில் பிரவேசிக்குமென்றும் தென்படுகிறது. எப்படியிருப்பினும் 2:62ம் ஆயத்தின்படி அஹ்லுல் கிதாபிகளான நஸாறாக்களிலுள்ள சுவனம் செல்லும் கூட்டமும் றசூலுல்லாஹ்வுடைய சுவனம் செல்லும் கூட்டமும் சுன்னத்துவல்ஜமாஅத்தினரே என்பதை எம்மால் மறுக்க முடியாது.

சுவனம் செல்லும் கூட்டத்தினர்தான் சுன்னத்வல்ஜமாஅத்தினர் என்றால், சுவனம் செல்லும் அஹ்லுல்கிதாபிகளும் சுன்னத்துவல்ஜமாஅத்தினர்தான் என்பதை எப்படி மறுக்கமுடியும்? எனவே ஆதம் (அலை) அவர்களிலிருந்து இறுதி நாள் வரையிலும் வாழும் மனிதன் வரையிலுமுள்ள மக்களில் கலிமாவை உறுதிகொண்ட ஒவ்வோர் கூட்டமும் சுவனம் செல்லும் என்பது உறுதியாகிறது. சுவனம் செல்பவர் எவரோ அவர் சுன்னத்வல்ஜமாஅத்தைச் சேர்ந்தவர்தான். மனிதன் என்று தோன்றினானோ அன்றிலிருந்து இறுதிநாள் வரையிலும் சுன்னத் வல்ஜமாஅத்தினர் இருந்து கொண்டு தான் இருப்பார்கள். இவ்வகையினரில் ஒருவரேனும் உலகில் இருக்கும்வரை இறுதியுகமுடிவு ஏற்படாது. ஏனென்றால் இது அல்லாஹ்வுடைய சுன்னா(வழமை) ஆகும். இதில் எவ்வித மாறுதலையும் முரண்பாட்டையும் நாம் காணமுடியாது. அஹ்லுல் கிதாபிகளான எஹுது நாஸாறாக்களுக்கும், றசூலின் கூட்டத்துக்கு மிடையிலுள்ள ஒற்றுமை கொள்கையில்தான். அமல்களிலல்ல. 22:67ம் வசனம் இதை உறுதிப்படுத்துகிறது. அஹ்லுல் கிதாபிசளுடைய வணக்கமுறைகள், பிக்ஹு சட்டங்கள்வேறு, எம்முடைய வணக்கமுறைகளும் பிக்ஹு சட்டங்களும்வேறு. அப்படியானால் அவர்களையும் எம்மையும் ஜன்னத்தில் நுழைப்பது எது? வெளிப் படை அமல்கள்தானென்று கூறுமுடியாது. ஜன்னத்தில் நுழைப்பது கொள்கைதான். இது சரிதானென்றால் அமல்கள் எதற்காக? என்று ஓர் கேள்வி எழுகிறது. அதற்குரிய விடையை நான்முன்பே கூறியுள்ளேன்.

ஜன்னத்தில் பிரவேசிப்பது அமல்களினாலல்ல. இறைவனுடைய விஷேட கிருபையினால் தான். இந்த விஷேஷகிருபை பாபம் மன்னிக்கப்படுவதினாலேயே கிடைக்கிறது.பாபம் என்பது ஸிர்க் என்பதுதான். இந்த ஸிர்க்கிலிருந்து விடுபடுப வதற்காகவே 'லாஇலாஹ இல்லால்லாஹ்' என்ற கொள்கை மந்திரம் அருளப்பட் டிருக்கிறது. இந்தக் கொள்கை விளக்கத்தில் உறுதிபெறுவதற்காக அவ்வக்காலங் களுக்கேற்ற அமல்கள் தரப்பட்டுள்ளன.

நாம் ஆதாரங்களோடு கூறிய இவ்விஷயம் உண்மைதானென்றாலும், பழக்க வழக்கம் நூலறிவு முதலாம் திரைகளில் கட்டுண்ட எம்முடைய அறிவு திடீரென இதை ஏற்றுக்கொள்ள முடியாமல் இருக்கிறது. சுமார் 1410 வருடங்களாக நாம் நம்பியிருந்த நம்பிக்கைக்கு இது விரோதம்போல் தென்படுகின்றது. சில நூற்களில் மனிதனுக்குத் தொழுகையற்ற ஓர் நிலை கிடையாதென்றும், தொழுகையற்றவன் சுன்னத்வல்ஜமாஅத்தைச் சேர்ந்தவனல்ல என்றும் எழுதப்பட்டுள்ளதை வாசித்தும் கேள்விப்பட்டும் இருக்கிறோம். மேலும் அல்லாஹ் அடியானிடம் முதல் முதல் தொழுகையைத்தான் கேட்கிறான் என்று மிகமிக வற்புறுத்திக் கூறப்பட்ட பல சொற்கள் தென்படுகின்றன. முஸ்லிமையும் காபீரையும் பிரிப்பது தொழுகைதான் என்பவைபோன்ற ஹதீஸ்களையும் இங்கே எடுத்துக்கொள்க. மேலும் எமது முன்னோரில் நல்லடியார்களென்று மக்களால் கணிக்கப்பட்ட சிலர், இறக்கும்வரை தொழுகையைக் கடைப்பிடித்திருப்பதாய் தென்படுகின்றது. ஸஹாபாக்களும் இதிலடங்குவார். ஆதலால் நாம் உண்மை என்னவென்பதை அறிந்துகொண்டாலும் உறுதிபெற முடியாதவர்களாய்த் திணறுகிறோம்.

கலிமாவினால் உணர்த்தப்படும் உண்மை அல்லாஹ்வையன்றி இல்லையென்றும், அவன் ஏகன் என்றும் தென்படுகிறது. ஆனால் இன்றுள்ள பெரும்பாலான மௌலவிமார்களின் கருத்துப்படி தொழுகைமுதலாம் அமல்களை நோக்கினால் அல்லாஹ்வுடன் அல்லாஹ் அல்லாத நானுமுண்டு என்பது தென்படுகிறது. அதாவது அவர்களுடைய கொள்கைக்கும் அமலுக்குமிடையில் நேர் விரோதம் தென்படுகிறது. ஆதலால் இவ்விஷத்தை மிகப்பொறுமையுடனும் குர்ஆன் ஹதீஸ் முதலாம் ஆதாரங்களுடனும் அறிவு ஏற்கக்கூடிய வகையில் விளங்கவும் விளக்கவும் வேண்டியது அவசியமாகிறது. இன்ஸாஅல்லாஹ் இதை ஆதாரங்களோடு விளக்குவோம்.

**ஹதீஸ்**

றசூல் (ஸல்) அவர்களைச்சுற்றி நாங்கள் அமர்ந்திருந்தோம். சில நபர்களுடன் அபூபக்கரும் உமறும் இருந்தனர். எங்களிடமிருந்து றசூல் (ஸல்) அவர்கள் எழுந்து சென்றார்கள். அவர்கள் திரும்பிவரத்தாமதமானது. எங்கள் எதிரிகளினால் அவர்கள் கஸ்ரப்படுத்தப்படுவார்களோ என்று பயந்து திடுக்கமுற்று எழுந்தோம். அவ்வாறு திடுக்குற்றவர்களில் நான் முதன்மையானவனாக இருந்தேன். ஆகவே றசூல் (ஸல்) அவர்களைத்தேடிக்கொண்டு ‘பனின் நஜ்ஜார்’ கிளையிலுள்ள அன்சாரி ஒருவருக்குடைய தோட்டத்தை வந்தடைந்தேன். அதற்குரிய வாசலைத் தேடிப்பார்த்தேன் காணவில்லை. வெளியிலிருந்த கிணற்றிலிருந்து கால்வாயொன்று சுவற்றின் துவாரத்தின் வழியாய் நுழைவதைக் கண்டேன். அவ்வழி மூலம் குள்ளநரியைப் போன்று என்னை ஒடுக்கிக்கொண்டு றசூல்(ஸல்) அவர்களிடம் வந்தடைந்தேன்.

றசூல்(ஸல்) அவர்கள் அபூஹுறைறாவா? எனக் கேட்டார்கள். ‘ஆம்’ என்றேன். என்ன செய்தி எனக்கேட்டார்கள். தாங்கள் திரும்பிவர தாமதமானதால் உங்களுக்கு இணை வைப்பவர்களால் ஏதும் சங்கடம் ஏற்பட்டிருக்குமோ என்று நாங்கள் பயந்தோம். திடுக்கிட்டெழுந்தவர்களில் நான் முதன்மையானவன். ஆகவே இத்தோட்டத்திற்குவந்து குள்ளநரிபோல் ஒடுங்கி உள்ளே நுழைந்துவிட்டேன். ஜனங்களெல்லாம் எனக்கு (சுவருக்கு) அப்பால் உள்ளார்களென்றேன். அபூஹு றைராவே என அழைத்து, இவ்விரு காலணிகளையும் (தம்மைப்பார்த்ததற்கு அடையாளமாக) கொடுத்து கொண்டுசெல்வீராக, அல்லாஹ்தவிர இலாஹு இல்லை என்பதை மனதால் உறுதிகொண்டு சாட்சி கூறும் எவரையாவது நீர் இச்சுவருக்கு அப்பால் சந்தித்தால் அவருக்குச் சுவனத்தைக்கொண்டு நற்செய்தி சுறுவீராக என்றனர். அதற்கு பிறகு நான் முதலில்கண்டவர் உமராவார்(உமர் என்னைப் பார்த்தவுடன்) அபூஹு றைறாவே! இந்த இரு பாதணிகள் என்ன? என்று கேட்டார். இவை இரண்டும் அல்லாஹ்வின் தூதரின் காலணிகளாகும். இதைக் கொடுத்து அனுப்பினார்கள். ‘லாஇலாஹ இல்லால்லாஹ்’ என்று மனதால் உறுதி கொண்டு சாட்சி கூறுபவரை நான் சந்தித்தால் சுவனத்தைக்கொண்டு நற்செய்தி கூறுவேன் என்றேன். உமர் அவர்கள் எனது மார்பில் அடிக்க நான் பின்புறமாகக்கீழே விழுந்தேன். அபுஹுறைறாவே! நீர் திரும்பிச்செல்லும் என்றனர். நான் றசூல்(ஸல்) அர்களிடம் திரும்பிச்சென்று அழுதவாறு முகம்கோணி நின்றிருந்தேன். உமர் அவர்களும் என்னைத் தொடர்ந்து அங்கே வந்துசேர்ந்தனர். அப்போது றசூல்(ஸல்) அவர்கள் அபூஹுறைறாவே உமக்கு என்ன நேர்ந்தது என்று கேட்டனர். உமரைச் சந்தித்தபோது எதைக்கொண்டு சொல்லுமாறு கூறுனீர்களோ அதைத்தெரிவித்தேன். என் நடுமார்பில் ஓர் அடி அடித்தார். பின்புறமாய் நான் விழுந்துவிட்டேன். திரும்பிச் செல் என்று என்னிடம் கூறினார். உமர் அவர்களைப்பார்த்து உம்மை இவ்வாறு செய்யத்தூண்டியது எது? என்று றசூல்(ஸல்) அவர்கள் கேட்டபோது, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! என்னுடைய பெற்றோர் உங்களுக்கு அர்ப்பணமாகட்டும். லாஇலாஹ இல்லல்லாஹ் என்பதை மனதில் உறுதிகொண்டு சாட்சிகூறும் யாரைக் கண்டாலும் நன்மாராயம் கூறுவதற்கென்று அபூஹுறைறாவிடம் தாங்கள் காலணி களைக் கொடுத்து அனுப்பினீர்களா? என்று கேட்டனர். றசூல்(ஸல்) ஆம் என்றனர். (உமரவர்கள்) தாங்கள் அவ்வாறு செய்ய வேண்டாம். காரணம் சனங்கள் அதையே சார்ந்துநின்றுவிடுவார்கள். அவர்களை அமல்செய்யவிட்டுவிடுங்கள் (என்றனர்). அல்லாஹ்வின் தூதர்; அவர்களை விட்டு விடுவங்கள் என்று கூறினர்.

அறிவிப்பவர்: அபூஹுரைறா (றலி)

ஆதாரம் : முஸ்லீம்

இந்த ஹதீஸில் மிகப்பிரதானமான சில நுட்பங்கள் தென்படுகின்றன. அவசிய மான விஷயத்தைமட்டும் நோக்குவோம். றசூல்(ஸல்) அவர்களின் கட்டளையை உமர் (றலி) ஏற்க முடியாமல் இருந்ததற்கு (மீறப்பட்டதற்கு) பல காரணங்கள்

தென்படுகின்றன. அப்போதிருந்த பெரும்பாலான மக்கள், ஆரம்பகால மூமீன்கள், முஸ்லிம்கள். இவர்களுடைய ஈமான் பூரண வளர்ச்சியை பெறாமல் இருந்ததால் அம்மக்கள் பூரண ஈமானை (ஹக்குல் எகீனை)ப் பெறவேண்டுமென்பதற்காகவே றசூல்(ஸல்) அவர்கள் உமர்(றலி) அவர்களுடைய அபிப்பிராயத்தை ஏற்றுக் கொண்டிருந்திருக்கிறார்கள். ஈமான் வளரவும் தேயவும் கூடியதென்பதை றசூல்(ஸல்) அவர்களறிந்தவர்கள். 9:124, 33:22, 3:173 போன்ற ஆயத்துக்கள் இதை உறுதிப் படுத்துகின்றன. உமர் (றலி) அவர்களுடைய நோக்கமும் ஆரம்பகால மக்கள் ஈமானில் முழுமைபெறத் தொடர்ந்து பயிற்சிசெய்யவேண்டும் என்பதுதான். இந்த ஹதீஸ் கூறப்பட்ட கால, சந்தர்ப்ப, சூழ்நிலைகளை ஆராய்ந்தபோது தொழுகை தரப்பட்டு சுமார் ஒன்றிரண்டு வருடங்களுக்குள்தான் இந்த ஹதீஸ் கூறப்பட்டிருக் கிறது. றசூலின் சுமார் 52 வயதில் தொழுகை அமுலுக்கு வந்திருக்கிறது. சுமார் 52ம் வயதில்தான் றசூல்(ஸல்) அவர்கள் மதீனா சென்றிருக்கிறார்கள். இதன்பின் சுமார் ஒன்று அல்லது இரண்டு வருடங்களுக்குள்தான் மதீனாவில் இந்த ஹதீஸ் கூறப்பட்டிருக்கிறது. எனவே றசூல்(ஸல்) அவர்கள் கூறிய கூற்றுக்கும் உமரே பாரூக்(றலி) அவர்களுடைய வேண்டுகோளுக்கும், றசூல்(ஸல்) விட்டுக் கொடுத்ததற்குமிடையில் பேதமில்லை. றசூலின் ஏவல் கவாஸுகளான அறிஞர்களை நோக்கியதாயும், உமர்(றலி) அவர்களின் ஆலோசனையும் றசூலின் அனுமதியும் அவாம்களான பாமரமக்களை நோக்கியதாக இருக்கிறது. எனவே றசூலின் கட் டளையை உமர்(றலி) மீறினார்களென்றோ, மறுத்தார்களென்றோ நாம் தவறாக எடைபோடக்கூடாது.

இந்த ஹதீஸை மீண்டும் ஒருமுறை சிந்தனைக்கெடுத்துப்பாருங்கள். அபூஹுறறா(றலி) அவர்களுக்கு றசூல்(ஸல்) அவர்களால் கூறப்பட்ட வாக்குறுதியை மறைக்கவேண்டுமென்றோ, பாமரமக்களிடம் கூறவேண்டாமென்றோ உமர்(றலி) அவர்கள் வாதாடவில்லை. றசூல்(ஸல்) அவர்கள் தானும் அபூஹுறைறா(றலி) அவர்களை இனிமேல் அப்படிக் கூறவேண்டாமென்று தடைவிதிக்கவுமில்லை. உமரே பாரூக்(றலி) அவர்கள் ஓர் உண்மையான மூமீன். தம் சகோதரர்கள்களின் நலன்கருதி (ஈமானின் வளர்ச்சியை விரும்பி) தம் சகோதரர்களுக்காக வாதாடியிருக்கிறார்கள், றசூல்(ஸல்) அவர்கள் அனுமதியளித்திருக்கிறார்கள். அவர்களை அமல் செய்ய விட்டுவிடுங்கள் என்று உமரே பாரூக்(றலி) வேண்டிக்கொண்டதற்கு விடையாக அமல் செய்யவிட்டுவிடுங்கள் என்றுதான் றசூல்(ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஈமானில் மனிதர்கள் நிரப்பம் பெறவேண்டும் என்பதுதான் றசூல்(ஸல்) அவர் களுடையவும் உமர்(றலி) அவர்களுடையவும் நோக்கமாகும். அமல் என்றால் தொழுகை மட்டும்தான் என்று பொருள்கொள்வதே எமது மயக்கத்துக்கு காரண மாகும். அமல் செய்ய விட்டுவிடுங்கள் என்பதைக்கொண்டு உண்மையை மறைத்துத் தொழுகையைமட்டும் வற்புறுத்த வேண்டுமென்பது பொருளல்ல.

இந்த ஹதீஸ் கூறப்பட்டக்காலம் வேதம் நிரப்பம்பெறாத காலம். நிரம்பம் பெறுவதற்கு முன்மார்க்கத்தில் நிர்ப்பந்தம் இருந்திருக்கிறது. நீங்கள் கலிமாவைக் கூறி தொழுகையைக் கடைப்பிடித்திருக்கும்வரையில் உங்களுடன் ஜிஹாது செய்ய அல்லாஹ் என்னை ஏவினான் என்று றசூல்(ஸல்) அவர்களினால் கூறப்பட்ட ஹதீஸ் இஸ்லாத்தில் தொழுகைதரப்பட்ட ஆரம்பகாலத்தில் கூறப்பட்டதாகும். இந்த நிர்ப்பந்தச்செயலின் காரணம் தௌஹீதென்ற தீனுல் இஸ்லாத்தின் ஆதாரங்கள் அப்போது பூரணமாய்த் தரப்படாமல் இருந்தமையே.

அந்த ஹதீஸை இன்னும் ஓர்முறை நோக்கிப்பாருங்கள். அதில் அமல்கள் என்றுதான் கூறப்பட்டதேயன்றி, தொழுகை, நோன்பு, ஸக்காத், ஹஜ்ஜு என்ற பர்லான அமல்கள் என்று கூறப்படவில்லை. பர்லான நபிலான சுன்னத்தான சொல், செயல், கருத்து யாவற்றையும் ஒன்று சேர்த்துத்தான் அமல் என்ற சொல் பாவிக்கப் பட்டிருக்கிறது. இதை விளங்கிக்கொள்ளாமல் தொழாதவன் காபீர்தானென்ற முடிவுக்கு வருவது தவறாகும். தொழாதவன் வழிகெட்டவன், காபீர் என்பதற்கு எவ்வித ஆதாரமும்கிடையாது. இந்த ஹதீஸில் உமரே பாரூக்(றலி) அவர்கள் றசூல்(ஸல்) அவர்களிடம் அனுமதி கோரியதுபோல வேறு சிற்சில விஷயங்களிலும் அனுமதிகோரித் தோல்வியும் அடைந்துள்ளார்கள், வெற்றியும் அடைந்துள்ளார்கள். இந்த விஷயத்தைத் தெளிவாய் ஆராய்ந்தால் றசூல்(ஸல்) அவர்களும் அவர் களுடைய தோழர்களும் மனிதர்களின் ஈமானை நிறைவுபெற செய்வதற்காக அரும்முயற்சி செய்தார்களென்பதை நாம் மறுக்கமுடியாது. றசூல்(ஸல்) அவர்கள் தோழர்களின் சிற்சில ஆலோசனைகளை மறுத்தபோது அந்த மேன்மைதங்கிய ஸஹாபாக்களே றசூலைச் சந்தேகக்கண்கொண்டு நோக்கியுள்ளனரென்பதையும் எம்மால் மறுக்கமுடியாது. ஹுதைபியா உடன்படிக்கையொன்றே இதற்குப் போதிய ஆதாரமாகும்.

றசூல்(ஸல்) அவர்கள் மக்களுடைய ஈமானில் பேராவல் கொண்டிருந்தார்க ளென்பதை நாமறிவோம்.

**குர்ஆன்: 26:3**

அவர்கள் ஈமான் கொள்ளாததன் காரணமாக நீர் தற்கொலை செய்து கொள்வீர் போலும்.

**குர்ஆன்: 12:103**

அவர்களுடைய ஈமானில் நீர் போராவல் கொண்டிருந்தாலும் மனிதர்களில் பெரும் பாலார் ஈமான் கொள்வதில்லை. (என்று இறைவன் கூறுகிறான்).

நாம் முன்பு காட்டியதுபோன்ற பல ஹதீஸுகளை முறைப்படி விளங்கிக் கொள்ளாமல் பலாத்காரமாய்த் தொழுகைக்கழைப்பதும் இறக்கும்வரையும் தொழுதே ஆகவேண்டுமென்று குர்ஆனுக்கு வலிந்துரை கொள்வதும் தொழாதவன் காபீர்

என்பதும் அவனைச் சமூகத்திலிருந்து ஒதுக்குவதும் அறிவீனமாகும். தொழுகையை எடுத்துக் கொண்டவரே சுன்னத்வல் ஜமாஅத்தினர் என்று தீர்ப்புக்கட்டுவதும் தவறாகும். இவ்வித மருண்ட வாதங்களுக்குக் காரணம் முன்னோரால் எழுதப்பட்ட தப்புத்தவறான நூற்களைச் சிந்தித்துத் தெளிவு பெறாமல் கண்மூடித்தனமாய்ப் பின்பற்றுவதேயாகும். றசூல்(ஸல்) அவர்களுடையவும், தோழர்களுடையவும் வழமை சுன்னா எது? அவர்களுடைய அழைப்பின் குறிக்கோள் என்ன? என்பதையும் நாம் அனைவரும் விளங்கித் தெளிவுபெற வேண்டும்.

**குர்ஆன் : 2:256**

(இஸ்லாம்) மார்க்கத்தில் நிர்ப்பந்தமோ (பலாத்காரமோ) இல்லை. (ஏனென்றால்)வழிகேட்டிலிருந்து நேர்வழி தெளிவாகிவிட்டது. ஆகவே எவன் ஸைத்தானை நிராகரித்து விட்டு அல்லாஹ்வை விசுவாசிக்கின்றானோ அவன் நிச்சயமாக அறுபடாத பலமானதொரு கயிற்றைப் பிடித்துக்கொண்டான். அல்லாஹ் செவியுறுவோனாகவும் அறிவோனாகவும் இருக்கிறான்.

றசூல்(ஸல்) அவர்களுடைய கியாஸை மட்டும் ஆதாரமாய்க் கொண்டு சிற்சில விஷயங்களில் தீர்ப்புக்கட்டுவதும் தவறாகும். குர்ஆன், ஹதீஸ், நபி மாரின் இஜ்மாஉ முதலாம் பிரமாணங்களில் இடம்பெறாத அல்லது அவற்றைக் கொண்டு விளங்கிக் கொள்ள முடியாத விஷயங்களில் மட்டும்தான் நாம் கியாஸை ஆதாரமாய்க்கொள்ள முடியும். குர்ஆன் : 15:99 ஆயத்து எகீன்(உறுதி) ஏற்படும் வரையிலும் இபாதத் செய்யும்படி ஏவுகிறது என்பதை குர்ஆன் ஹதீஸ் மறுக்காது. எனவே குர்ஆனை ஒதுக்கிவிட்டு, ஹதீஸை எம் வஹ்முக்கேற்றபடி விளங்கிக் கொண்டு கியாஸை மட்டுமே ஆதாரமாய்க்கொள்வதும் தவறாகும் எகீன் உறுதிபெற்றால் அங்கு வெளியாவது அப்துவின்செயலல்ல.

மார்க்கம் உறுதியான ஆதாரங்களுடன் தெளிவுபடுத்தப்பட்டிருப்பதால் மார்க்கத்தில் பலாத்காரம் பிரயோகிக்க எவருக்குமே அதிகாரம் கிடையாது. (குர்ஆன் 10:99 போன்ற ஆயத்துக்களை நோட்டமிடுக.) இமாம்களென்று மக்களால் கூறப்படுகிற எல்லோருடைய அபிப்பிராயத்தையும் இஜ்மாஉ என்று கூறமுடியாது. கீழே தரப்படுகிற சில ஹதீஸ்க்களை அறிவுக்கண்கொண்டு நோக்கிப்பாருங்கள்.

**ஹதீஸ்**

மார்க்க விளக்கவான்கள், உத்தாரம்(பதில்) சொல்பவர்கள் மிகுதமாகவும் ஓதுபவர்கள் உபதேசிகள் குறைவாகவும் இருக்கிற இக்காலத்தில் (என் காலத்தில்) அறிவைவிட அமல் சிறந்ததாகிறது. ஆனால் மார்க்க விளக்கவான்கள் உத்தாரம் சொல்பவர்கள் குறைவாகவும் உபதேசிகளுள் கேட்பவர்கள் மிகுதமாகவும் நேரிடுகிற இனிமேல் வரும் காலத்தில் அமலைவிட அறிவே சிறந்ததாயிருக்கிறது.

ஆதாரம் : எஹ்யா உலூமுத்தீன்

இந்த ஹதீஸில் குறிப்பிடப்பட்ட அறிவு அல்லாஹ்வை அறிய வேண்டிய முறைப்படி அறியும்(ஞான) அறிவைக் குறிப்பிட்டதாகும்.

அதாவது அறிவு என்று ஹதீஸில் கூறப்பட்டது ஈமானுடைய அறிவை நோக்கிய தாகும். பல ஹதீஸுகளை இதற்கு ஆதாரம் தரலாம். கலிமாவை மனத்தால் பூரணமாய் ஒப்புக்கொள்வது ஹக்குல் எகீனைப் பெற்றாலேஅன்றி முடியாத ஒன்றாகும். ஹக்குல் எகீனைப் பெறுவதற்காகவே பலதரப்பட்ட அமல்கள் தரப்பட்டிருக்கின்றன. கலிமாவை கபீஸாவாக ஆக்கிக்கொண்டு ஆயிரம் வருடம் தொழுகை நடாத்தியும் மனிதன் ஜெயம் பெறமுடியாதென்பதை நாம் விளங்கித்தெளிவு பெறுவது கடமை யாகும்.

**ஹதீஸ்**

நடுநிலமையைக் கொண்டு இறை முன்னிலையை எய்திக் காலையிலும் மாலை யிலும் இரவின் பிற்பகுதியிலும் இபாதத்தில் பெரும்பாலும் ஈடுபடுங்கள். மார்க்கப்பிரச்சாரமும் செய்யுங்கள், மேலும் அறிந்துகொள்ளுங்கள் எவருடைய வணக்கமும் அவரைச் சுவனம் சேர்த்துவிடாது என்று கூறினார்கள். அப்போது நாயகமே! தாங்கள் ..? தங்களுடைய..? என்று மக்கள் வினவினார்கள். அதற்கு றசூல்(ஸல்) அவர்கள் ஆம் முடியாது. அல்லாஹ்வுடைய மன்னிப்பும் கிருபையும் என்னை அடைந்தால் ஒழிய என்னுடைய வணக்கமும் என்னைச் சுவர்க்கத்தில் சேர்த்துவிடாது என்று கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா (றலி)

ஆதாரம் : புஹாரி

இபாதத் என்ற சொல் குர்ஆனில் எங்கு இடம்பெற்றாலும் அது ஏகமாக்கல் (தௌஹீது செய்தல்) என்ற பொருளுடையது என்று அப்பாஸ் (றலி) அவர்கள் கூறியுள்ளதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். வணக்கங்களைக் கைக்கொள்வதன் நோக்க மென்ன? என்பதையும் இறைவன் நாடினாலொழிய வணக்கங்கள் மூலம் சுவனம் செல்ல முடியாதென்பதையும் ஊன்றி நோக்க வேண்டும்.

ஹதீஸில் காலை, மாலை, இரவின் பிற்பகுதியென்று கூறப்பட்டிருப்பதால் இபாதத் என்ற சொல் தொழுகையைப் பற்றிக் கூறப்பட்டதல்ல என்பதை நாம் புரிந்துகொண்டால் விஷயம் தெளிவுபட்டுவிடும்.

**ஹதீஸ்**

அமல்களில் சிறந்தது எது? என்று றசூல்(ஸல்) அவர்களிடம் கேட்டபோது அல்லாஹ் வைப்பற்றிய அறிவு என்றார்கள். எந்த அறிவு என்று திரும்பவும் கேட்க, அல்லாஹ் சுபஹானஹுவதஆலாவைப் பற்றிய அறிவு(ஈமான்) என்று கூறினார்கள். நாங்கள் தொழுகை, நோன்பு, ஸக்காத் போன்ற அமல்களைக் கேட்கும்போது தாங்கள்

அறிவைப்பற்றிக் கூறுவதென்ன? என்று மீண்டும் கேட்டபோது, அல்லாஹ்வைப் பற்றிய அறிவுடனே அற்பமான அமலும் பிரயோசனம் செய்கிறது; ஆனால் இறைவனைப்பற்றிய அறிவீனத்துடன் எந்த அமலும் பிரயோசனம் கொடாது என்று கூறினார்கள்.

ஆதாரம் : யஹ்யா உலுமுத்தீன்

ஈமானில்லாத அமல்கள் பிரயோசனம்தராதென்பதை இந்த ஹதீஸ் உணர்த்துகிறது.

**ஹதீஸ்**

இருதய அடக்கமும் அவயவ சாட்டாங்கமுமே தவிரயாதோர் வணக்கமும் இல்லை.

ஆதாரம் : யஹ்யா உலுமுத்தீன்

'இக்லாஸை' ஏகாக்கிரசித்தத்தை, மன ஒரு வழிப்பாட்டை உண்டாக்குவதே வணக்கங்கள் தரப்பட்ட நோக்கம் என்பதை இந்த ஹதீஸ் உணர்த்துகிறது.

**ஹதீஸ்**

இணை ஏற்படுத்துவதை விட்டும் நான் மிகவும் தேவையற்றவன். ஒருவன் எந்த அமலையாவது செய்துவிட்டு இன்னொன்றை என்னோடு இணையாக்கினால் அவனையும் அவன் இணை ஏற்படுத்தியதையும் விட்டுவிடுகிறேன் என்று அல்லாஹ் கூறியதாக றசூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஹுரைறா (றலி)

ஆதாரம்: முஸ்லிம்

கலிமாவினால் உணர்த்தப்படும் தௌஹீதை அறியாதவன் எந்த அமலைக் கொண்டும் பிரயோசனம் பெறமாட்டான் என்பதை இந்த ஹதீஸ் உணர்த்துகிறது.

**ஹதீஸ்**

ஈமான் என்பது முற்றாக(எகீன்) விசுவாசமாக இருக்கும். ஆகவே எகீன் உண்டாக வேண்டிய வாசலைக் கற்றுணர்ந்து பின்பு இதயத்தில் பதிக்கவேண்டிய வாசலைத் திறக்கவும்.

ஆதாரம் : யஹ்யா உலுமுத்தீன்

ஈமானை உள்ளத்தில் பதிப்பதே அமல்களின் நோக்கம் என்பதை இந்த ஹதீஸ் உறுதிப்படுத்துகிறது. ஸிர்க்கை உள்ளத்தில் இருத்திக் கொண்டவனுடைய அமல் என்ன பயனைத் தரமுடியும்?

இவைபோல் இன்னும் அனேக ஹதீஸ்கள் தென்படுகின்றன, இவ்வித ஹதீஸுகளின்படி ஈமானை உள்ளத்தில் பதிக்கவும் ஈமானை உறுதிப்படுத்வுமே தொழுகை

முதலாம் அமல்கள் தரப்பட்டிருக்கின்றன என்பதும் அமலுக்கு ஈமான் ஸர்த்து என்பதும் ஈமானல்லாத அமல் எவ்வித பிரயோசனமும் தராது என்பதும் தெளிவாக்கப்பட்டிருக்கிறது. எனவே கொள்கையை அறியாத ஒருவர் அல்லது கொள்கையை(ஈமானை) தவறாக விளங்கிக்கொண்ட ஒருவர் தொழுகை முதலாம் அமல்களில் ஈடுபடுகிறார் என்றால் இவரை சுவனம் செல்லும் சுன்னத்வல்ஜமாஅத்தைச் சேர்ந்தவரென்று நாம் கூற முடியாது. எகீன் என்பது (ஈமான்) அறிவேயன்றி மரணமல்ல. மரணம்தான் எகீன் என்று பொருள் கூறுவது புரட்டலாகும்.

**ஹதீஸ்**

றசூல் (ஸல்) அவர்கள் திருவுளமானார்கள். (ஓர் கூட்டம் வரும்) அவர்களுடைய தொழுகைக்குமுன்னால் உங்களுடைய தொழுகையையும், அவர்களுடைய நோன்பிற்கு முன்னால் உங்களுடைய நோன்பையும் அவர்களுடைய அமல்களுக்கு முன்னால் உங்களுடைய அமல்களையும் அற்பமாகக்காண்பீர்கள் (உங்களைவிட அவர்கள் அதிகமாக அமல் செயவார்கள்). அவர்கள் வில்லை விட்டும் அம்பு புறப்படுவது போல இஸ்லாத்தை விட்டும் வெளியேறி விடுவார்கள்.

அறிவிப்பவர் : அபூஸயீதுல் குத்ரி (றலி)

ஆதாரம் : புஹாரி

இந்த ஹதீஸின்படி தொழுகை நோன்பு முதலாம் அமல்களைக் கையாளுபவர்கள் எல்லோரும் சுவனம் செல்லும் சுன்னத்வல்ஜமாஅத்தினர்தான் என்று எப்படித் தீர்ப்புக்கட்டமுடியும்?

**ஹதீஸ்**

நபிகளார் நவின்றதை நான் செவியுற்றேன், இறுதிக்காலத்தில் சிறுவர்களும் அறிவில்லாதவர்களும் (மூடர்களும்) இணைந்த ஜமாஅத் ஒன்று வெளியாகும். வெளித்தோற்றத்தில் நல்லதையே கூறுவார்கள். ஆனால் ஈமான் அவர்களுடைய தொண்டைக் குழிக்குக்கீழே இறங்காது. (உள்ளத்தில் ஈமான் இராது) இலக்கை நோக்கிப்பாயும் அம்பைப்போல அவர்கள் தீனைவிட்டும் வெளியேறி விடுவார்கள்.

ஆதாரம் : எஹ்யா உலுமுத்தீன்

இந்த ஹதீஸில் கூறப்பட்ட கூட்டங்கள்தான் இன்றுள்ள வஹ்ஹாபிகளும் அதிலிருந்து முளைத்த தப்லீக்போன்ற கூட்டங்களும்.

**குர்ஆன்: 107:4,5,6**

தவிர, தங்கள் தொழுகையில் பராமுகமாய் இருக்கும் தொழுகையாளிகளுக்கும் கேடுதான், அவர்கள் (தொழுதபோதிலும் ஜனங்களுக்கு) காண்பிக்கவே தொழுவார்கள்.

(என்று குர்ஆன் கூறுகிறது.)

**குர்ஆன்: 4:142**

அவர்கள் தொழுகையில் நின்றாலோ சோம்பேறிகளாக நின்று மக்களுக்கு காண் பிக்கிறார்கள்.

**ஹதீஸ்**

துர்க்கிரிகை முதலான கெட்ட காரியங்களை விட்டும் நிவர்த்தியாக்காத எந்தத் தொழுகையினாலும் அல்லாஹ்வைவிட்டும் தூரப்படுவதே உண்டாகிறது.

ஆதாரம் : எஹ்யா உலுமுத்தீன்

**ஹதீஸ்**

சிந்தித்து ஆராயாமல் குர்ஆன் ஓதுவதில் நன்மைஇல்லை, விளங்கியறிந்து கொள்ளாத ஓர்வணக்கம் வணக்கமேயல்ல.

அறிவிப்பவர் : அலி (றலி)

ஆதாரம் : ரஜீன்

இந்த ஆயத்துக்களும் ஹதீஸுகளும் சுமார் 1410 வருடங்களின் முன்பு றசூல்(ஸல்) அவர்கள் உயிருடன் இருந்தபோதுதான் அருளப்பட்டவை என்பதில் சந்தேகமே கிடையாது. அப்படியானால் றசூலின் சமகால மக்களிலும் பலர் தொழுகையை பாழ்படுத்தியுள்ளார்கள் என்பதை எம்மால் மறுக்கமுடியாது. எனவே அக்கால மக்களின் தொழுகை நிலைமையே இப்படியென்றால் இக்காலமக்களின் தொழுகை முதலாம் அமல்களை அடிப்படையாய்க்கொண்டு இவர்கள் சுவனம் செல்லும் சுன்னத் வல்ஜமாஅத்தினர்தானென்று எம்மால் தீர்ப்புக்கட்ட முடியுமா? முடியவே முடியாது.

**குர்ஆன்: 49:14**

நாட்டுப்புறத்து அறபியரில் சிலர் தாங்களும் மூமீன்கள்தாம் என்று கூறுகிறார்கள், நீர்கூறும்: நீங்கள் உங்களை மூமீன்களென்று கூறாதீர்கள். ஏனென்றால் ஈமான் உங்களுடைய இருதயங்களில் நுழையவே இல்லை. ஆயினும் முஸ்லீம்கள்? (வழிப்பட்டவர்கள்) என நீங்கள் கூறிக்கொள்ளுங்கள்.

இந்த ஆயத்தின்படி, முஸ்லீம்களெல்லாம் மூமீன்களல்லவென்பதும், ஈமான் உள்ளத்திலுள்ளதென்பதும், சொல்லைக்கொண்டோ செயலைக்கொண்டோ (மூமீனை) சுவனம் செல்லும் சுன்னத்வல் ஜமா அத்தினரைக் கண்டறிய முடியா தென்பதும் தெளிவாகிறது.

**குர்ஆன்: 5:41**

தூதரே, சிலர் குபிரின் (நிராகரிப்பின்) பால்விரைந்து ஓடுவது உமக்குக் கவலையைத் தரவேண்டாம். ஏனென்றால் அவர்கள் தங்கள் வாயினால் மட்டும் ஈமான் கொண்டோ மென்று கூறினார்களே தவிர அவர்களுடைய இருதயங்கள் (அதனை) ஒப்புக் கொள்ளவில்லை.

இந்த ஆயத்தும் றசூல்(ஸல்) அவர்களுடைய சமகால மக்களின் நிலைமையை எமக்குப் படம்பிடித்துக்காட்டுகிறது. அப்படியானால் நானும் ஓர் மூமின் என்று ஒருவர் வாயால் கூறும் கூற்றையோ அவருடைய தொழுகை முதலாம் அமல் களையோ அடிப்படையாய்க்கொண்டு இவர் சுவனம் செல்லும் சுன்னத் வல்ஜமா அத்திலுள்ளவர்தானென்று நாம் தீர்ப்புக்கட்டலாமா? தீர்ப்புக் கட்டவே முடியாது. இவ்வாயத்திலுள்ள இன்னுமோர் நுட்பமென்னவென்றால், இவர்கள் தங்களை மூமீன்கள் முஸ்லீம்கள் என்று கூறிக்கொண்டும் நம்பிக் கொண்டும் இருந்தாலும் குபிரின் பக்கம் விரைந்தோடுகிறார்களென்ற வசனம் இவர்கள் மேலும் மேலும் குபிரில் நிலைப்பட்டுக்கொண்டிருக்கிற காபீர்கள் என்று அறிவிக்கிறது.

**குர்ஆன்: 48:13**

எவன் அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் (உண்மையாகவே) விசுவாசம் கொள்ளவில்லையோ அத்தகைய குப்பாருக்கு நாம் நிச்சயமாக நரகத்தையே சித்தப்படுத்தி வைத்திருக்கிறோம்.

காபீர்கள் நரகம்போவது உண்மைதான். ஆனால் ('உண்மையாகவே விசுவா சங்கொள்ளவில்லையோ') என்று கூறப்பட்டிருப்பதால் நரகம் செல்லும் பொய்யான விசுவாசங்கொண்டோரும் (காபீர்களும்) உண்டென்று பெறப்படுகிறது. இன்னும் ஓர் நுட்பம் என்னவென்றால் அல்லாஹ்வையும் றசூலையும் ஈமான்கொள்வது உள்ளத்திலுள்ள செயலாகும். நாவினால் கலிமாவைக்கூறிய ஒருவரை பொய்விசு வாசியா? அல்லது உண்மை விசுவாசியா? என்று நாம் எப்படித் தீர்ப்புக்கட்ட முடியும்? எனவே இவர் வாயினால் கலிமாவைக் கூறியதற்காக அல்லது தொழுகை முதலாம் அமல்களைக் கையாளுவதற்காக இவரை நாம் ஓர் முஸ்லீம் என்று கூறலாமே தவிர மூமீன் என்று கூறமுடியாது.

**ஹதீஸ்**

எவர்நம்முடைய தொழுகையைப்போல் தொழுபவரும் எமது கிப்லாவைத் தொழு கையில் நோக்குபவரும் எம்மால் அறுக்கப்பட்ட இறைச்சியை உண்பவருமாக உள்ளாரோ அவர் முஸ்லீம்தான்.

முஸ்லீம் என்றால் வழிப்பட்டவன் என்பது பொருள். இவன் இம்மை மறு மையின் அச்சத்தினால் அல்லது இம்மை மறுமையின் ஆதரவினால் முஸ்லீம்

ஆகியிருக்கலாம். எனவே இவ்வகையினரையும் சுவனம் செல்லும் சுன்னத்வல்ஜமா அத்திலுள்ளவர்கள்தான் என்று நாம் தீர்ப்புச் செய்யமுடியாது. சுவனம் செல்வோர் மூமீன்கள் மட்டும்தான்.

இவைபோல் இன்னும் அனேக குர்ஆன் வசனங்களையும் ஹதீஸுகளையும் கொண்டுவிளக்கமுடியும். அறிவுடைய மக்களுக்கு இவ்வளவு ஆதாரங்களே போதுமானவை. இவ்விதமான ஆயத்துக்களையும் ஹதீஸுகளையும் ஆழமாய்ச் சிந்தனைக்கெடுத்தால் அமல்களில் ஈடுபாடுகொள்ளும் வணக்கவாளிகளின் தொழுகை முதலாம் அமல்களை, தாடி, தலைப்பாகை, தஸ்பீஹ்மணி போன்றவற்றைக் கொண்டு சுன்னத்வல் ஜமாஅத்தினரைக் கணிக்க முடியாது. இதைப் போல நானும் ஓர் ஸேக், ஸெய்யித் என்ற பட்டங்களைச் சூட்டிக்கொண்டும் கலிமாவின் பொருளையே புரட்டிக்கொண்டும், கண்ணியம்வாய்ந்த சூபிகளின் ஜுப்பாவைப் போர்த்திக் கொண்டும் திக்றில் ஈடுபடுகிற பெரும்பாலான மக்களையும் இவர்கள் சுன்னத் வல்ஜமாஅத்தினர்தானென்று உறுதியாய்த் தீர்ப்பிட முடியாது. ஏனென்றால் 90% மக்கள் கலிமாவிற்கு வணக்கத்துக்குரியநாயன் யாருமில்லை அல்லாஹ்தவிர என்றே பொருள் கூறுகிறார்கள். கலிமாவின் பொருளையே உள்ளபடி விளங்கிக்கொள்ளா தவர்கள், தௌஹீதுக்கும் ஸிர்க்கிற்கும் பேதம் தெரியாதவர்கள், தங்களைச் ஸுபிகளாய்க் காட்டிக் கொள்கிறார்களென்றால், கொள்கையைத் தெரிந்துகொள்ளாத இம்மக்களை ஏமாற்றுப் பேர்வழிகளென்று கூறுவதில் தவறேகிடையாது. ஸுபி களையுமா? எதிர்க்கிறீர்கள்! என்று என்னைக்கேட்டால் நான்பதில் தருவேன். உண்மையான சுன்னத் வல்ஜமாஅத்தைச் சேர்ந்த ஸுபிகள் கண்ணியமிக்க பெரியார்கள், அவ்லி யாக்கள். இவர்களின் கொள்கைக்காக என்னுயிரைத்தியாகம் செய்யவும் ஆயத்தமாய் இருக்கிறேன். கனம்தங்கிய இப்பெருமக்களின் பெயரைக் கொண்டு வயிறு வளர்க்கும், கௌரவம் தேடும் போலிச்ஸுபிகளை எதிர்க்கிறேன். எதிர்காலக் குழந்தைகளாவது உண்மையை அறியவேண்டும் என்பதற்காகவும், நல்லடியார்களின் கொள்கையை உலகிற்கு எத்திவைக்கவேண்டுமென்பதற்காகவுமே நான் நூல் எழுதிக்கொண்டிருக்கிறேன், நான் புகழோ இகழோ தேடுவதற்காக வல்ல. அவை இரண்டும் என்னிடம் சமம்தான்.

அப்படியானல் சுன்னத்வல்ஜமாஅத்தினரைக் கண்டறிவது எப்படி? பொறுமை யடையுங்கள் சமீபத்தில் கூறுவேன். இன்ஸாஅல்லாஹ்.

(கொள்கை) ஈமான் அமல்களுக்கு ஸர்த்தாக இருக்கிறது. ஈமான் இல்லாத அமல்கள் அமலென்று பெயரைப்பெறா. அவ்வித அமல்கள் பிரயோசனமும் தராது.

வணக்கத்துக்குரிய நாயன் யாருமில்லை அல்லாஹ்வைத் தவிர என்று கலி மாவிற்குப் பொருள்கொண்டு விசுவாசித்தவர் எவரோ அவர் வெளிப்படையாகவே அல்லாஹ்வேறு, சிருட்டி அவனல்லாத வேறு என்று கூறுவது மட்டுமல்லாமல் அதையே உள்ளத்தில் இருத்திக்கொண்டவருமாகிறார். எனவே இவர் அல்லாஹ்வுக்கு,

இணை, நிகர், ஒப்பு உண்டென்ற கொள்கையுடைய அபூஜஹ்லின் கொள்கையை உறுதிப்படுத்துவராகிறார். இப்படிப்பட்ட ஒருவரின் அமல்களைக்கொண்டு இவரை ஓர் மூமினென்று நாம் கொள்ளமுடியுமா? இவர் செய்யும் அமல்கள்யாவும் ஸிர்க்கைத் தான் உறுதிப்படுத்தும்.

அல்லாஹ்வையன்றி அவனுடன் எதுவுமே கிடையாதென்று கலிமாவுக்குப் பொருள்கொண்டு விசுவாசித்தவர் எவரோ அவர் அல்லாஹ்வை மட்டும் தரிப்படுத்தி யிருப்பதால் இவர் றசூல்(ஸல்) அவர்களையும் அல்லாஹ்வையும் ஒப்புக்கொண்ட மூமீனாயிருக்கிறார். அதாவது இஸ்லாத்தின் உயிரான ஈமானை விளங்கிக் கொண்ட வராய் இருப்பதால் இவர் அமல்களில் குறைவுடையவராயினும்கூட அவர் என்றோ ஓர் நாள் சுவனம் செல்வார் என்று நாம் நிச்சயமாகக் கூறலாம்.

ஆயினும் கலிமாவுக்கு உண்மைப்பொருள் இதுதானென்று அவர் உண்மையான பொருளையே கூறிக்கொண்டிருந்தாலும் அவருடைய உள்ளத்திலுள்ளதை எம்மால் அறியமுடியாது. எனவே இவருடைய பேச்சைக்கொண்டு மட்டும் இவர் சுன்னத் வல்ஜமா அத்திலுள்ளவர் தானென்று உறுதியான முடிக்கு வரமுடியாது. ஏனென்றால் இவர் மூலம் எமக்குக்கிடைத்தது வாக்குமூலமென்ற ஒரேயோர் சாட்சியம்மட்டும் தான். வாக்குமூலம் என்ற ஒரு சாட்சியத்தைக்கொண்டுமட்டும் தீர்ப்பிடுவது முடிவான தீர்ப்பாகாது. சாட்சி கூறுபவர் சித்த சுவாதீனமற்றவராயும் இருக்கலாம். வயிறுவளர்க்கும் நோக்கோடும் (பணம், புகழ்தேடும் நோக்கோடும்) கூறியிருக் கலாம். ஆயினும் இந்த ஒரு சாட்சியம் உலக விவகாரங்களில் சில வேளைகளில் போதுமானதாயிருக்கிறது. நாவினால் கலிமாவை (உண்மைப் பொருளை)க் கூறியவர் ஓர் முஸ்லிம் என்பதற்கு இது ஆதாரமாய் இருக்கிறது. ஆனால் நாவினால் கூறியவர் ஓர் மூமீன்தான், சுன்னத்வல்ஜமாஅத்தைச் சேர்ந்தவர்தான் என்று இறுதி முடிவு கட்டமுடியாது. இதற்கு ஆதாரம் 49:14 இலக்கமுடைய குர்ஆன் ஆயத்தில் காண்க.

எனவே நாம் உறுதியான ஓர் முடிவுக்கு வருவதானால் எமக்கு வாக்கு மூலத்துடன் இன்னும் ஓர் சாட்சியம் அவசியமாகும். அதுதான் அவருடைய செயல் விளக்கம் என்பது. இம்மனிதர் கலிமாவைக்கொண்டு சாட்சியம் கூறியதால் அவருக் கேற்படும் சோதனைகளான உடல், பொருள், ஆவி, கௌரவம் போன்ற வற்றின் இழப்புக்கள் ஏற்படினும் (உயிராபத்து அல்லது மரணமே ஏற்படினும்) உடல் பொருள் ஆவியைக்காக்கும் நோக்குடன், முனாபீக்காய், காபீராய், முஸ்ரீக்காய் மாறாமல்(ஈமானில்) கலிமாவின் பொருளில் தரிப்பட்டிருப்பாரேயானால் நாம் அவரை உண்மையான மூமீன்தான் என்று தீர்ப்புக்கட்டச் சாட்சியம் கிடைத்துவிடும். இவ்விஷயத்துக்கு உதாரணமாக: சோதனைகளுக்குட்படுத்தப்பட்ட நபிமார்களில் இப்றாஹீம்(அலை) யூனுஸ் (அலை) போன்ற பல நபிமார்களையும், ஸஹாபாக்களில் பிலால்(றலி) கப்பாப்(றலி) அபூதர் கிபாரி(றலி) போன்றவர்களையும் கூறலாம். உண்மைக்காக உயிர்த்தியாகம் செய்த பல்லாயிரம் மக்களுண்டு. இன்னோரின்

உறுதியான நோக்கத்தின் காரணம் என்னவென்றால் இஸ்லாம் நிலைபெறுவதற்காக நாம் அழிவையடையினும் அது ஓர் பெரும் பாக்கியமென்பதை அறிந்திருந்தமையே. இன்றைய உலகிலும் சில மக்கள் இவ்வித மனோபக்குவத்தில் இருக்கத்தான் செய்கிறார்கள். இவ்வகையினர் வெளி அமல்களில் குறைபாடுடையவர்களாயிருப் பினும் இவர்களை நாம் சுன்னத்வல் ஜமாஅத்தினர்தான் என்று ஏற்றுக்கொள்வதில் எவ்வித தடையுமேகிடையாது. இதற்கதிகமான உண்மையை நாம் அறியோம். அல்லாஹ் அறிந்தவனாயிருப்பதால் கூலிவழங்கும் பொறுப்பு அவனிடமே யுள்ளது. நாமதில் தலையிடல்தவறு. நாம் இரண்டு சாட்சியங்கள் மட்டும் கொண்டு தீர்ப்புக் கட்டிய உண்மையான சுன்னத்வல் ஜமாஅத்தினரை விளக்க இன்னும்பல சாட்சி யங்கள் குர்ஆன் ஹதீஸுகளில் தென்படுகின்றன அவற்றைச் சுருக்கிக் கூறுகிறேன்.

குர்ஆனே இறுதிப்பிரமாணமென்று அந்த நல்லடியார்கள் உறுதி கொண்டவர்கள். ஹதீஸுகள் குர்ஆனின் விளக்கவுரைதான் என்பதை நம்பியவர்கள். ஆதலால் குர்ஆன் ஹதீஸுகளை மறுக்கும் அல்லது தவறாக விளக்கம்தரும் எந்த ஓர் இமாமையும் அவர்கள் கண்மூடித்தனமாய்ப் பின்பற்றவே மாட்டார்கள். அவர் களுடைய இமாம் குர்ஆன் மட்டும்தான். அதற்குரிய விளக்கத்தைத்தரும் சாட்சியம் தான் ஹதீஸ் என்பதும் நபியின் உலகவாழ்வில் நிகழ்ந்த சோதனைகளின்போது நபி(ஸல்) அவர்கள் நடந்துகாட்டிய நடைமுறையே செயல் விளக்கம்(கியாஸ்) என்பதுமாகும். இவ்வித நல்லடியார்கள் குர்ஆனிலுள்ள 4:59, 6:149, 16:64, 33:36, 24:51 போன்ற ஆயத்துக்களைப் பூரணமாய் ஈமான் கொண்டிருப்பதால் குர்ஆன் ஹதீஸுகளுக்கும் பகுத்தறிவுக்கும் மாறான யூகங்களுக்கும், (தக்லீத்) கண் மூடித்தனமாய் மூதாதைகளைப் பின்பற்றும் மூடப்புத்திளுக்கும் இடம் கொடுக்க மாட்டார்கள். கீழே சுட்டிக் காட்டப்படுகிற ஹதீஸை அந்த நல்லடியார்கள் முழு மனதாய் ஒப்புக் கொண்டவர்கள்.

**ஹதீஸ்**

உங்களிடையே இரண்டைவிட்டுச் செல்லுகிறேன். அவற்றைப் பின்பற்றிப் பிடிக்கும் காலமெல்லாம் நீங்கள் வழிதவறமாட்டீர்கள். ஒன்று அல்லாஹ்வின் வேதம், இரண்டாவது எனது ‘சுன்னா’ வழிமுறை என்று றசூல்(ஸல்) அவர்கள் கூறி னார்கள்.

அறிவிப்பவர்: மாலிக்இப்னு அனல் (றலி).
ஆதாரம் : முஅத்தா

ஹதீஸில் குறிப்பிட்ட சுன்னா என்பது றசூல்(ஸல்) அவர்களுடைய கொள்கையும், அக்கொள்கையை வாழ்வில் அமுல் செய்துகாட்டிய நடைமுறைகளையும் ஒன்று நோக்கியதாகும். இதில் எல்லா அமல்களும் அடங்கும். நாம் முன்பு கூறிய இரண்டு சாட்சியங்களும் இந்த ஹதீஸில் மிக நுட்பமாய் விளக்கப்பட்டுள்ளது. றசூல்(ஸல்)

அவர்கள் நாவினால் கலிமாவைக் கூறி அதன்பக்கமே மக்களை அழைத்திருப்பதால் சொல் மட்டுமன்றிச் சொல்லை அமுல்படுத்தவும் முனைந்தார்கள். இது வெளிப் படைச் சாட்சியம். கலிமாவைக்கூறி அதை அமுல்படுத்த முனைந்ததால் ஏற்பட்ட அத்தனை இன்னல்களையும் (அல்லாஹ்வின் கட்டளைப்படி) மனித அறிவுக்கு மாறில்லாவகையில்தான் ஏற்றுவாழ்ந்திருக்கிறார்கள். இதுதான் அவர்களுடைய நடைமுறை என்பதன் அர்த்தம். றசூல்(ஸல்) அவர்களுடைய நடைமுறை, வழமை, வாழ்வு என்றால் தொழுகை, நோன்பு, ஸக்காத், ஹஜ்ஜி மட்டும்தானென்று நம்புவது வெறும் அறியாமையும் மூடத்தனமான பின்பற்றலுமாகும். (நூற்கேள்வியறிவினால் ஏற்பட்டதிரையாகும்). எண்ணிலடக்க முடியாத இன்னல்கள் மத்தியிலும், கலிமாவில் நிலைப்பட்டு மக்கள் ஈமானைப் பூரணமாய்ப் பெறவேண்டும் என்பதே றசூல்(ஸல்) அவர்களுடைய சொல், செயல், கருத்துக்களின் நோக்கம் என்பதை எம்மில் மிகப்பலர் உணரவில்லை. றசூல்மார்கள் கொண்டுவந்த கொள்கை எது? என்பதைக் கண்டறிவதற்குக் கூடப் பெரும்பாலான மக்கள் முயற்சி செய்வதாயும் தெரிய வில்லை.

**குர்ஆன்: 7:85**

அவனைத்தவிர உங்களுக்கு வேறு இலாஹு இல்லை.

**குர்ஆன்: 4:171**

அல்லாஹ் என்பதெல்லாம் (ஏகமான ) ஒரே இலாஹுதான்.

**குர்ஆன்: 43:84**

அவனே வானத்திலும் இலாஹுவாய்ப் பூமியிலும் இலாஹுவாய் இருக்கிறான்.

**குர்ஆன்: 27:64**

அல்லாஹ்வுடன் வேறு இலாஹு இருக்கிறதா? (இல்லை) உண்டென்று நீங்கள் உண்மை சொல்பவர்களாயிருந்தால் உங்களுடைய ஆதாரங்களைக் கொண்டு வாருங்கள்.

**குர்ஆன்: 16:51**

அல்லாஹ் கூறுகிறான். இரு இலாஹுகளை நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டாம். இலாஹு (ஏகமான) ஒன்றே ஒன்றுதான். ஆகவே நீங்கள் எனக்கே பயப் படுங்கள்.

**குர்ஆன்: 16:22**

உங்களுடைய இலாஹு (ஏகமான) ஒன்றேயொன்றுதான்.

இந்த ஆயத்துக்கள் அருளப்பட்டபோது பல இலட்சாதி இலட்சம் இலாஹுகள் (வணங்கப்படும் சிருட்டிகள்) இருந்தன என்பதை நாம் மறுக்க முடியாது. எனவே கலிமாவில் பாவிக்கப்பட்ட இலாஹு என்ற சொல் (சிருட்டியையும் சிருட்டி கர்த்தாவையும் ஒன்றிணைத்துக் கூறும்) பொதுப் பெயர்ச் சொல் என்பதை எந்த அறிவாளியாலும் மறுக்கமுடியாது. இதை நிரூபித்து விளக்கிக்கொண்டிருக்கிற நூற்றுக்கணக்கான ஆயத்துக்களும் நூற்றுக்கணக்கான ஹதீஸுகளும் இருந்து கொண்டிருக்கின்றன. விஷயம் இவ்வளவு தெளிவாய் விபரம் தரப்பட்டிருக்கும் போதும் அல்லாஹ்வுடன் அவனல்லாதவையும் உண்டென்று வாய் கூசாமல் கூறுவோர் மூமீன்களாகவோ சுன்னத்வல் ஜமாஅத்தினராகவோ இருக்கமுடியாது. உலமாக்களென்ற பெயரே இன்னோருக்குப் பொருந்தாது. சிருட்டி அல்லாஹ் அல்லாதது என்னும்போது இணை எப்படி ஏற்படுகிறது என்பதை இன்னோர் உணர்ந்துகொள்வதில்லை. 'அதம்' இன்மை என்பது அல்லாஹ்விடமும் உண்டென்று இந்த மூடமக்கள் நம்புகிறார்கள். அப்துக்கு றப்பு நேர்முரண் என்ற அடிப்படையில் 'அதம்' இல்லாமை அல்லது சுத்த சூனியம் மனிதனிடத்திலுண்டேயன்றி இறைவ னிடத்தில் கிடைக்கவே கிடையாது. அவன் இல்லாமையென்னும் குறைவுடைய வனல்ல. அவனுடைய நாமங்களிலொன்று சமது (தேவையற்றவன்) என்பது. எனவே இல்லாமையில் இருந்து படைத்தான் என்றால் சூன்யத்திலிருந்தே படைத் தான் என்று மனிதர்கள் மருண்டுவிடுகிறார்கள். இது சுத்த ஸிர்க்கென்பதை அவர்கள் அறிவதில்லை.

'அதம்' இல்லாமை என்ற சொல் மனித அறிவுக்கு விளக்கம் தரப்பட்ட சொல் லாகும். மனித அறிவில் எட்டாமல் வுஜூதுடன் வுஜூதுவாய் இருந்த 'அஹது' என்ற மர்த்தபாவை மனிதனுக்குணர்த்துவதே அச்சொல்லின் நோக்கமன்றி அல்லாஹ்வுடன் இன்மையுண்டென்று வலியுறுத்துவது அச்சொல்லின் பொருளல்ல. அதாவது மனிதன் தன்னுணர்வு பெறுமுன் இன்னபொருள் என்றும் அறியாத ஓர் நிலையில் இருந்தானென்றும், காலத்தில் இடத்தில் கட்டுண்டிருப்பதால் என்னை விட்டும் அவனை அவன் வேறாய்க் காணுகின்றான் என்ற ஸிர்க்கையும், அவன் என்னை விட்டும் வேறானவனல்ல என்ற தௌஹீதையும் விளக்கவே 'அதம்' இன்மையென்றபதம் குர்ஆனில் பாவிக்கப்பட்டுள்ளதென்பதைப் போலிஞானிகள், ஸூபிகள், மவுலானாக்கள், உலமாக்கள் யாவரும் உணரவேண்டியது அவசியமாகும். இல்லாதது இருப்பதாகாது. இருப்பது இல்லாததாகாது. எனவே பொய் அழிதல் அல்லது இன்மையென்ற மனித அறிவுக்கெட்டாத நிலையை விளக்குவதற்காகப் பாவிக்கப்படும் சொல்லாகும். பாதில், அதம் என்ற சொற்களை உலமாக்கள் ஊன்றிநோக்குவது அவசியமாகும். அகராதியே எமது இமாம் என்று நம்புவது

அறியாமையாகும். புலனறிவில் கட்டுண்ட மனிதன் உண்மைப்பொருள் என்று நம்பும் சிருட்டிகளுக்கு அதம் (இன்மை) பாதில்(பொய்) உண்டேயன்றி வுஜூதுக் கில்லை.

**குர்ஆன்: 76:1,2**

ஒவ்வொர் மனிதனுக்கும் (வெளியாவதற்கு) முன்னர் ஓர் காலம் செல்லவில்லையா? அதில் அவன் இன்ன வஸ்த்து என்றும் கூறுவதற்கில்லாத நிலைமையில் இருந்தான். கலந்த ஓர் இந்திரியத் துளியைக்கொண்டு நிச்சயமாக நாம்தான் மனிதனைச் சிருட்டித்தோம். அவனைச் சோதிக்கும் பொருட்டு அவனைச் செவியுடையோனா கவும் பார்வையுடையோனாகவும் ஆக்கினோம்.

இது இன்னவஸ்த்துதான் என்று கூறுவதற்கு ஸூறத்தும் நாமமும் அவசிய மாகும். மோதிரம் என்ற பெயரும் அதற்குரிய ஸூறத்தும் இருந்தால்தான் நாம் அதைப் பொருள், மோதிரம் என்று கூறுவோம். ஸூறத்தையும் பெயரையும் பெறமுன்பு இன்னது என்று கூறமுடியாத நிலையில் இருந்தது என்றால் அது உண்மையான தங்கமாகவேதான் இருந்திருக்கிறது என்பது பொருள். அணிகலன்கள் யாவும், ஸூறத்தையும் பெயரையும் பெறமுன்பும், பெற்றபோதும் சுத்தமான தங்கமாகவே இருக்கின்றன. மருட்சியடைந்த மனிதன் மோதிரம் முதலாம் அணி கலன்கள் வேறு, தங்கம்வேறு என்று கூறினால் இது அறியாமையல்லவா? இம் மனிதன் மோதிரம் என்று ஓர் பொருளும் தங்கம் என்ற ஓர் பொருளும் இருப்பதாய் நம்பி இரண்டும் வெவ்வேறுதான் என்று கூறுகிறான். மோதிரம் என்பது தங்கத்தின் ஓர் ஸூறத்துகிடப்பட்ட வெறும் பெயர் மட்டுமே என்பதை அறிகிறானில்லை. இதைப்போல சிருஷ்டிகள், வெறும் ஸூறத்தும் வெறும் பெயருமேயன்றி அல் லாஹ்வை விட்டும் வெவ்வேறான தனித்தனி உண்மைப்பொருட்களேயல்ல என் பதை உணர்த்தி விளக்கவே கலிமாவின் தலீல்களில் ஒன்றாய் இவ்வாயத்து (76:1,2) தரப்பட்டிருக்கிறது. இவ்வுண்மையை விளக்கவே குர்ஆன் ஹதீஸுகள் தரப்பட்டன. இவ்வாயத்துக்கு மட்டும் விரிவுரை கூறுவதானால் மிக நீண்ட நேரம் தேவையாகும். அவசியாமானதை மட்டுமே இங்கு காண்போம்.

சிருட்டியான மனிதனுடைய ஆரம்பம் உண்மையான உஜூதுதான். இந்த வுஜூதின் ஓர் நிலையிலுள்ள நாமங்கள்தான் சர்வ சிருட்டிகளுமாகும். மோதிரம் தன்னை, நான் தங்கத்தின் ஓர் ஸூறத்துத்தானேயன்றி தங்கத்தைவிட்டும் வேறான ஒரு மூலப்பொருளல்ல என்பதை உணராததுபோல, மனிதன் தன்னை நான் நிலை யாய் உள்ள (உஜூதுவின்) அல்லாஹ்வின் ஸூறத்துக்களில் ஒன்றே என்பதை உணர்கிறானில்லை. உணர்ந்துகொண்டால், அம்மனிதன் தன் உண்மையான ஆரம்ப நிலையில் தரிபட்டுவிடுவான். லிகா, மோட்சம், முக்தியென்று கூறப்படும் சொற் களால் உணர்த்தப்படும் உண்மை இதுவே.

மனிதன் இவ்வுண்மையை உணர்ந்துகொண்டால் இம்மை மறுமை இரண்டிலும் வெற்றிபெற்றவனாகிறான். எனவே நாம் ஒவ்வொருவரும் இம்மை மறுமைப் பயன்களைக் குறைவறப் பெறவேண்டுமானால், பரம்பரையாய் நம்பிவந்த குருட்டு நம்பிக்கை (கண்மூடித்தனமான பின்பற்றல்)களைத் தூக்கி வீசி எறிந்துவிட்டு குர்ஆன் ஹதீஸுகளின் வழிகாட்டலுடன் கலிமாவைப்பல கோணங்களில் சிந்தித்து ஆராய்ந்து உண்மையான ஈமானைப் பெற்றுக் கொள்ள வேண்டியது ஒவ்வோர் மனிதனுக்கும் கட்டாயக்கடமையாகும். இறைவன் ஒருவனே என்பதை ஏற்றுக்கொண்டவன் மூமீன்தான் என்று நம்புவது அறியாமை யாகும். அபூஜஹ்ல் போன்ற முஸ்ரீக்கும் இவ்வித ஓரிறைக்கொள்கையில்தான் இருந்தான் என்பதை நாம் உணர வேண்டும்.

**குர்ஆன்: 47:19**

நிச்சயமாக அல்லாஹ்தவிர இலாஹு இல்லை என்பதை நீர் (உறுதியாய்) அறிந்து கொள்வீராக.

இவ்வித ஆயத்துக்கள் பல இலட்சாதி இலட்சம் ஆலிஹத்துக்கள் உலகில் இருந்துகொண்டிருந்தபோதே கூறப்பட்டவையாகும். இவ்வாயத்துடன் 27:64 போன்ற ஆயத்துக்களையும் ஒப்பிட்டுப்பாருங்கள்.

இவ்வாயத்துக்களின்படி அல்லாஹ்தவிர இலாஹு இல்லை என்பது றசூலின் கொள்கை(சுன்னா) ஆகவும், அல்லாஹ்தவிர(வேறு) இலாஹு உண்டு என்பது அபூஜஹ்ல் போன்ற முஸ்ரீக்குகளின் கொள்கையாகவும் இருந்திருக்கிறது. கொள்கையில்தான் பேதம் தென்படுகிறது. ஆனால் இன்று உலமாக்களென்று கூறப்படுகிற பெரும்பாலான மக்கள் அல்லாஹ்வேறு சிருட்டி அவனல்லாத வேறு என்று வெளிப்படையாய்க் கூறுகிறார்கள், எழுதுகிறார்கள். இவர்களை நாம் உலமாக்களென்று கூறலாமா? றசூல்(ஸல்) அவர்களுடைய மல ஜலம் நஜீஸல்ல என்று கூறுகிற ஆலீம்கள் சூஃபிகளும் நம்மிடையே இருக்கிறார்கள். அப்படி யானால் றசூல்(ஸல்) அவர்கள் மலஜல உபாதைக்குப் பின் ஏன் சுத்தம் செய்தார் களென்று கேட்டால், ஏன் ஒழு செய்தார்களென்று கேட்டால் கேள்வி கேட்பது ஹறாம் என்கிறார்கள். இன்னோரை வழிகாட்டும் உலமாக்களாக, சுன்னத் வல்ஜமா அத்தினராக நாம் ஏற்கலாமா? இவ்வித மருட்சிகளுக்கெல்லாம் முக்கிய காரணம், குர்ஆன் ஹதீஸுகளை ஆதாரமாய்க் கொள்ளாமல் எவரோவெல்லாம் எழுதிவைத்த புளுகுப்புராணங்களை வேத விளக்க நூற்களாய்க்கருதி ஒருவரையொருவர் கண்மூடித்தனமாய்ப் பின்பற்றுவதேயாகும். இவ்வகையினரின் மூடத்தனமான பின்பற்றலை விளக்குவதானால் மிக நீண்ட நேரம் அவசியமாகும். பின்பற்றத் தகுதியானது குர்ஆன், ஹதீஸ், கட்சிப்பற்றற்ற அனுமான அறிவு ஆகியவை மூன்றும்தான். ஒருசிலர் அறிவைக்கூட ஆதாரமாய்க் கொள்ள முடியாதென்று மழுப்புகிறார்கள். ஆதாரங்களில் முதலிடம் பகுத்தறிவுக்கே இறைவன்

கொடுத்துள்ளான் என்பதை நாம் உணரவேண்டும். அறிவு ஒப்புக் கொள்ளவில்லை யானால் எந்த வேதவசனமும் ஹதீஸும் பிரயோசனம் தராதென்பதை றசூல்(ஸல்) அவர்களே விளக்கியிருக்கிறார்கள். ஏதாவது ஓர் இமாமைப் பின்பற்றாதவன் காபீர் என்று கூட ஒருசிலர்வாதிடுகிறார்கள். றசூலும் தோழர்களும் எந்த இமாமைப் பின்பற்றினார்களென்பதை இவர்கள் சிந்திப்பதே இல்லை. யாரோ ஒருவர் எழுதிவைத் ததைப் படித்துக்கொண்டு அறிவையும் குர்ஆன் ஹதீஸுகளையும் புறக்கணிக்கிறோ மென்பதை பெரும்பாலார் உணர்வதேயில்லை. ஓசையைப் பின்பற்றிச் செல்லும் கால்நடைகளுக்கொப்பாக மனிதன் சென்றுகொண்டிருப்பது மனிதகுலத்துக்கே அவமானமாகும்.

இவ்வித மருண்ட புத்தியிலும் பின்பற்றலிலும் ஊறித் தங்களையும் பிறரையும் இருளில் தத்தளிக்க வைத்துக்கொண்டிருக்கும் இவ்வித மக்கள் தங்களைச் சுன்னத்வல் ஜமாஅத்தினர் என்று தம்பட்டமடிப்பது வெறும் பறைதான். இவ்வகையினர் வஹ்ஹாபிகளுக்கெதிராய்ப் போராடுவதாய் கூறுகிறார்கள். வஹ்ஹாபிகளோ இந்த உலமாக்கூட்டத்துடன் போராடுவதாய்க் கூறுகிறார்கள். ஆனால் குர்ஆன் ஹதீஸு களின்படி இவ்விரு கூட்டத்தாரும் சுன்னத்வல்ஜமாஅத் கூட்டத்தனரேயல்ல என்பது நிரூபணமாகிறது. இதற்குரிய மிகப்பிரதானமான முக்கியகாரணம் இவ்விரு கூட் டத்தினரும் கலிமத்துத்தையிபாவைக் கலிமத்துல் கபீஸாவாக மாற்றி, ஸிர்க்கைத் தௌஹீதாயும் தௌஹீதை ஸிர்காகவும் ஒப்புக் கொண்டிருப்பதே. அல்லாஹ்வேறு சிருட்டி அவனல்லாதவேறு என்று கூறுவதே இதற்கு ஆதாரமாகும்.



6

# ஓர் சந்தேகம்

குர்ஆன்: 47:19

நிச்சயமாக அல்லாஹ்தவிர இலாஹு இல்லை என்பதை நீர் (உறுதியாய் ) அறிந்து கொள்வீராக,

இவ்வித ஆயத்துக்கள் பல இலட்சாதி இலட்சம் ஆலிஹத்துக்கள் உலகில் இருந்துகொண்டிருந்தபோதே கூறப்பட்டவையாகும். இவ்வாயத்துடன் 27:64 போன்ற ஆயத்துக்களையும் ஒப்பிட்டுப்பாருங்கள். குர்ஆன்: 2:62 விசுவாசி களாயினும், யூதர்களாயினும், கிறிஸ்தவர்களாயினும், ஸாபியீன்களாயினும் எவர்கள் அல்லாஹ்வையும் இறுதிநாளையும் உண்மையாகவே விசுவாசித்து (ஸாலிஹான) நற்கருமத்தைச் செய்தார்களோ அவர்களுக்கு அவர்களுடைய கூலி அவர்களுடைய இறைவனிடத்திலுண்டு. மேலும் அவர்களுக்கு எவ்வித பயமுமில்லை. அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள். (இவ்வாயத்து முன்பும் தரப்பட்டுள்ளது.)

இந்த ஆயத்தை வைத்துக்கொண்டு ஒருசிலர் ஸாலிஹான அமல்கள் இல்லாத ஒருவரை சுவனம் செல்லும் சுன்னத்துவல் ஜமாஅத்திலுள்ளவர்தான் என்று தீர்ப்பிட முடியாதே என்று சந்தேகப்படுகிறார்கள். இதற்குரிய விபரத்தைக்கூறி அதன் பின் சந்தேகத்தை நீக்குவோம். இவ்வாயத்தில்; றசூல்(ஸல்) அவர்களைப் பின்பற்றிய மூமீன்களையும் அஹ்லுல்கிதாபிகளிலுள்ள மூமீன்களையும், ஸாபியீன்களையும் வேறு பிரித்தும் ஒன்றாக்கியும் கூறப்பட்டிருப்பதை முதலில் நாம் நோக்க வேண்டும். இவ்விபரம் இங்கு நமக்கவசியமில்லை. ஏனென்றால் நாம் இங்கு எடுத்துக் கொள்ள வேண்டியதும், விவாதமும் ஸாலிஹான அமலைப் பற்றியதாகும். அவ்வாயத்தை மீண்டும் கூர்ந்து நோக்கிப்பாருங்கள். அதில் ஸாலிஹான அமல்கள் என்று கூறாமல் ஸாலிஹான அமல் என்று ஒருமையில்தான் பாவிக்கப்பட்டிருக்கிறது. எனவே ஸாலிஹான அமல் எது என்பதை நாம் அறியவேண்டியதாகிறது. அஹ்லுல் கிதா பிகளின் வணக்கமுறைகளுக்கும்(எமது) மூமீன்களின் வணக்க முறைகளுக்கும் நிறைய வேறுபாடுகளுண்டு. இவ்வகை வணக்க முறைகளையெல்லாம் அல்லாஹ் பொருட்படுத்தாமல் ஸாலிஹான அமலைமட்டும் குறிப்பிடுவது ஏன்? ஸாலிஹான அமலென்றால் என்ன?

ஸாலிஹான அமல் என்றால் தொழுகை முதலாம் கடமைகளுடன் நற்செயல் நல்லொழுக்கம் யாவும் சேர்ந்ததே ஸாவிஹான அமல் என்று நம்மில் மிகப் பெரும்பாலார் நம்பிக் கொண்டிருக்கிறோம். தொழுகை முதலாம் கட்டாய கடமைகள் பர்லான கடமைகளாகவும், அன்றாடவாழ்வில் உள்ள பிற விஷயங்களிற் பல

இமாம்களில் பெரும்பாலாரின் கூற்றுப்படி பர்லல்லாதவையாகவும் தென்படுகின்றன. ஆனால் குர்ஆன் 2:62 ஆயத்தில் பாவிக்கப்பட்ட ஸாலிஹான அமல் இதுவல்ல. இதைவிளக்க நீண்டநேரம் அவசியமாகும். எனவே குறுகலாய்க் கூறுகிறேன்.

**ஹதீஸ்**

(நல்)அமல்களில் சிறந்தது எது? என நபி(ஸல்) அவர்களிடம் வினவப்பட்டது (அதற்கு) அல்லாஹ்வையும் றசூலையும் நம்பிக்கைகொள்வது என்று கூறினார்கள். பின்னர் எது? என வினவப்பட்டது. (அதற்கு) அல்லாஹ்வின் பாதையில் அறப்போர் புரிவது என்றார்கள். பின்னர் சிறந்தது எது? என்று கேட்கப்பட்டது. (அதற்கு) ஏற்றுக்கொள்ளப்பட்ட ஹஜ்ஜு என்று கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஹுரைறா (றலி)

ஆதாரம் : புஹாரி

ஈமான் கொள்வதற்கு நிகரான எந்த ஙீர் ஸாலிஹான அமலையும் நாம் காண முடியாது. ஹதீஸில் குறிப்பிடப்பட்ட ஜிஹாத்(அறப்போர்) என்பதன் உண்மை யான அர்த்தம் : தௌஹீதுக்கும் ஸிர்க்கிற்கும் இடையில் உள்ளத்தில் நடைபெறும் போராட்டம் என்பதாகும். இது கலிமாவை முறாகபா செய்வதனால்தான் கிடைக்கும். ஏற்றுக்கொள்ளப்பட்ட ஹஜ் என்பதும் அந்தரங்கக் கருத்துடையதுதான்.

நாம் காட்டிய 2:62 ஆயத்தில் ஈமானையும் ஸாலிஹான அமலையும் வேறு படுத்திக் காட்டியிருப்பதால், ஸாலிஹான அமலுக்கும் ஈமான் ஸர்த்தாய் இருக்கிறது என்பது தென்படுகின்றது. ஆனால் இந்த ஹதீஸில் ஈமானே சிறந்த அமல் என்றும், அதன்பின் ஜிஹாது என்றும் அதன் பின் அங்கீகரிக்கப்பட்ட ஹஜ்ஜு என்றும் கூறப்பட்டிருப்பதால் இந்த ஹதீஸ் அந்த ஆயத்தின் விரிவுரையென்பது தென் படுகின்றது. மேலும் இந்த ஹதீஸ் ஓர் ஞானவிளக்கத்தை விளக்கிக் கொண்டிருக்கிறது. ஸாலிஹான அமல் ஈமானைப் பூரணப்படுத்துவதற்காக கையாளப்படவேண்டிய உள்ளத்தின் செயலாகும். ஸாலிஹான அமல் என்றால் இருதயம் திருப்திப்படக்கூடிய (சாந்தியை நல்கக்கூடிய) அமல் (செயல்) என்பதுதான் அதன் உண்மையான அர்த்தமாகும்.

**குர்ஆன்: 13:28**

அல்லாஹ்வின் திருநாமத்தை (திக்ர்) நினைவு கூர்வதால் இருதயங்கள் நிச்சய மாகத் திருப்தி(சாந்தி) அடையும் என்பதை (நபியே!) நீர் அறிந்துகொள்ளும்.

இவ்வித ஆயத்தின்படி மனிதன் சாந்தியைப் பெறுவதானால் கடலில் மழைத் துளி சங்கமமாவதுபோல மனிதன் தன்னுடைய நான் என்ற வுஜூதை (அனாநிய் யத்தை) ஹக்கான வுஜூது என்ற கடலில் அழித்துச் சங்கமமாக வேண்டியவனா கின்றான். இதற்குக் கலிமாவினால் உனர்த்தப்படும் தௌஹீதில் நிலைபெற

வேண்டியிருக்கிறது. தௌஹீதைப்பெற முறாக்கபா (ஆராய்தல் அல்லது நோட்ட மிடல்)உம், முறாக்க பாவைப்பெற தொழுகை முதலாம் கடமைகளும் அவசியமாகின்றன. இவ்வித கடமைகள் மனித அறிவிற்கேற்றபடி பலபடித்தரங் களாய் அமைந்திருக்கின்றன. (இவ் விபரம் எமது முன் நூற்களில் தரப்பட்டுள்ளது.) இவற்றில் பர்லுகளும், பலவகை சுன்னத்துக்களும் இடம் பெறுகின்றன. எனவே இவையெல்லாவற்றையும் ஒன்று சேர்த்து ஸாலிஹான அமல் என்று கூறுவது எமது நாட்டு மரபாகும். ஆயத்தில் கூறப்பட்ட ஸாலிஹான அமல் என்பது (முறாகபாவை) கலிமாவின் உண்மையான அர்த்தத்தை ஊன்றி நோக்கித் தெளியும் மனோநிலையைப் பெறமுயற்சிப்பதாகும். இவ் விஷயத்தை இன்னோர் வகையாய்க் கூறுவதானால், தமக்கும் பிறருக்கும் இம்மையிலும் மறுமையிலும் தீவினையை ஏற்படுத்தாத பரிசுத்த உள்ளத்துடன் (ஸிர்க்கென்ற வேறுகாணும் மனோநிலையில் இருந்து விடுபட்டு) கையாளப்படும் உள்ளத்தின் செயல்தான் ஸாலிஹான அமல் என்று கூறலாம். எனவே நல்லடியார்கள் ஸாலிஹான அமல் இல்லாதவர்களாய் இருக்க முடியாது. ஆனால் நாம் அவர்களின் அமல்களை அறியாமலிருக்கலாம். ஸாலிஹான அமல் இல்லையானால் ஈமான் உறுதியடையாது.

**குர்ஆன்: 39:22**

இஸ்லாத்தைப் பெற்றுக்கொள்ள எவருடைய இருதயத்தை அல்லாஹ் விசாலப் படுத்தியிருக்கிறானோ அவர் தன் இறைவனின் பிரகாசத்தில் (நூரில்) இருக்கிறார். அல்லாஹ்வைத்(திக்ரு) ஞாபகம் செய்வதிலிருந்து விலகி எவருடைய இருதயம் கடினமாகிவிட்டனவோ அவர்களுக்குக் கேடுதான். இத்தகையோர் பகிரங்கமான வழிகேட்டில்தான் இருக்கின்றனர்.

ஸலாத் என்ற தொழுகையின் சரியான உண்மை என்னவென்றால் துன்யாவின் சகல பராக்குகளையும் விட்டொதுங்கி அல்லாஹ்வை அண்மி நிற்பதாய் நம்பி அவனுடன் உரையாடுதல் திக்ரு(ஞாபகப்படுத்தல்) என்பது தான். இந்த ஸலாத்தில் உடற்செயல் உள்ளத்தின் செயல்(திகிர்) எல்லாமே அடங்கும். அவாம்களிலுள்ள ஓர் மனிதன் தொழுகையின்போது திக்குறுதான் செய்கிறார். கவாஸ் அல்லது கவாஸுல் கவாஸுகளிலுள்ள ஒருவர் தொழாமல் இருந்து கொண்டே திக்ரு செய்கிறார் அல்லது பிரார்த்தனை செய்கிறார் என்றால் அவரும் தொழுதுகொண்டு தான் இருக்கிறார். ஆனால் மார்க்கத்தின் அந்தரங்கத்தைப் புரிந்துகொள்ளாத மனிதன் தொழாதவன் காபீர்தான் என்ற முடிவுக்கு வருகிறான். இது தவறு. மூமீன்கள் அமலில்லாமல் இருக்கமாட்டார்கள். அவர்களுடைய அமல்களை அவர்கள் பிறருக்குக் காட்டுவதற்காகச் செய்வதில்லை. ஆதலால் நாம் அமல் இல்லாதவ ரென்று எடைபோடுவது தவறாகும்.

**குர்ஆன் : 6:52**

(நபியே) தங்கள் இறைவனின் (வஜ்ஹு) திருப்பொருத்தத்தை விரும்பி காலை யிலும் மாலையிலும் (துஆ) பிராத்தித்துக் கொண்டிருப்போரை (க் கண்டால்) நீர் வெருட்டிவிடாதீர். அவர்களுடைய கணக்கிலிருந்து யாதொன்றும் உம்முடைய பொறுப்பாகாது. உம்முடைய கணக்கிலிருந்து யாதொன்றும் அவர்களுடைய பொறுப்பாகாது. ஆகவே நீர் அவர்களை வெருட்டினால் அக்கிரமக்காரர்களில் நீரும் ஒருவராகிவிடுவீர்.

ஒருவர் தொழாதவராய் இருந்துகொண்டு திக்கிரில் அல்லது பிரார்த்தனையில் இருந்துகொண்டிருக்கிறார் என்றால் அவர் ஸாலிஹான அமல்தான் செய்கிறார். தொழுதுகொண்டுதான் இருக்கிறார். இது மார்க்கவிரோதம் என்றிருந்தால் இறைவன் அன்னோரைத் தட்டிக் கலைக்கும்படியே றசூலுக்கு ஏவியிருப்பான். தட்டிக்கலைத்து விடாதீர் என்றும் தட்டிக் கலைத்தால் நீரும் அக்கிரமம் செய்தவராவீர் என்றும் தடைவிதித்திருக்கிறான். மேலும் மூமீன்கள் முஸ்லிம்களை மட்டுமல்லாமல் வேறு எம்மதத்தை எந்த இனத்தைச் சேர்ந்தவராய் இருப்பினும் அல்லாஹ்வுடைய திருப் பொருத்தத்தை நாடிப் பிரார்த்திக்கும், திக்ரு செய்யும் எந்த ஓர் மனிதரையும் தட்டிக் கலைக்க எவருக்கும் உரிமைகிடையாது. தட்டிக் கலைப்பது அக்கிரமம் ஆகும். நரகைப்பயந்து வணங்குவதும் சுவர்க்கத்தை ஆசைவைத்து வணங்குவதும் ஓர் விஷயம். அல்லாஹ்வுடைய (வஜ்ஹு) முகத்தைத் திருப்பொருத்தத்தை நோக்கி அமல் செய்வது வேறோர் விஷயம். ஸாலிஹான அமல் என்பது வஜ்ஹை நோக்கிய செயலாகும்.

**ஹதீஸ்**

(துஆ)பிராத்தனை செய்வது வணக்கம் நிகழ்த்துவதாகும் என்று றசூல்(ஸல்) அவர்கள் கூறி 40:60ம் ஆயத்தை ஓதிக்காட்டினார்கள்.

அறிவிப்பவர் : நுஹ்மான் இப்னு தாஹீர் (றலி)

ஆதாரம் : அபூதாவூத், திர்மிதி

பர்லான, நபிலான, சுன்னத்தான எந்த ஓர் அமலும் கலிமாவினால் உணர்த்தப்படும் உண்மையை முறாகபா செய்யும் ஸாலிஹான அமலுக்கு ஈடாகாது. அறியப் படுவதற்காகவே இன்ஸான் படைக்கப்பட்டவன். அறிதல்தான் இபாதத் என்பது. ஏகமாய் உணர்தல் என்பதே அதன்சாரம். இவ்வுணர்வைப்பெறக் கையாளப்படும் சகலசெயல்களும் ஸாலிஹான அமல்கள்தான்.

**ஹதீஸ்**

லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமாவை எந்த அமலும் முந்தாது.

அறிவிப்பவர் : உம்முஹானி (றலி)

ஆதாரம் : இப்னுமாஜா

இந்த ஹதீஸில் விளக்கும் கருத்துக்களில் ஒன்று, அமல்கள் யாவுக்கும் ஈமான் ஸர்த் என்று விளக்குகிறது.

நான் மிகச்சுருக்கமாய்க் காட்டிய இவ்விபரங்களின்படி வெளி அமல்களை (விஷேடமாய்ப் பர்லான கடமைகளை) அடிப்படையாய்க் கொண்டு மட்டும் சுன்னத்து வல்ஜாமாஅத்தினரைக் கணிக்கமுடியாதென்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

**ஹதீஸ்**

நடுநிலைமையைக் கொண்டு இறை முன்னிலையை எய்தி காலையிலும் மாலை யிலும் இரவின் பிற்பகுதியிலும் இபாதத்தில் பெரும்பாலும் ஈடுபடுங்கள். மார்க்கப்பிரச்சாரமும் செய்யுங்கள். மேலும் அறிந்துகொள்ளுங்கள் எவருடைய வணக்கமும் அவரைச் சுவனம் சேர்த்துவிடாது என்று கூறினார்கள். அப்போது நாயகமே! தாங்கள், தங்களுடைய..... என்று மக்கள் வினவினார்கள், அதற்கு றசூல்(ஸல்) அவர்கள் ஆம் முடியாது. அல்லாஹ்வுடைய மன்னிப்பும் கிருபையும் என்னை அடைந்தாலொழிய என்னுடைய வணக்கமும் என்னைச் சுவர்க்கத்தில் சேர்த்துவிடாது என்று கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஹுறைரா (றலி)

ஆதாரம் : புஹாரி(இந்த ஹதீஸ் முன்பு தரப்பட்டுள்ளது.)

இந்த ஹதீஸில் கூறப்பட்ட இபாதத் எது? வணக்கம் எது? என்பதை நாம் சிந்திக்க வேண்டும். தொழுகை முதலாம் அமல்கள் உள்ளத்திலுள்ள ஸிர்க்கை நீக்கி மன்னிப்பைப் பெறுவதற்காகத்தான் தரப்பட்டிருக்கின்றன. மன்னிப்பைப் பெற்றால் விஷேடகிருபையைப் பெற்றவர் எவரோ அவர் சுவனம் செல்வார் என்பது உறுதி. எனவே ஈமானை உறுதிபெறச் செய்யாத எந்த வணக்கமும் பிரயோசனம் தரா தென்பதும் சிலசமயம் அவ்வித தவறான வணக்கங்கள் தண்டனைக்குக் காரணமாய் அமையலாம் என்பதும் நிச்சயமான உண்மை. தொழுகை மானக்கேடான காரியங் களிலிருந்தும் காப்பாற்றும் என்று குர்ஆன் கூறுகிறது. சுமார் 40, 50 வருடங்களாகத் தொழுது கொண்டிருக்கின்ற மக்களில் மிகப்பலர் மேலும் மேலும் மானக்கேடான காரியங்களில் மூழ்கியிருப்பது ஏன்? அவர்களுடைய தொழுகை அவர்களுக்குத் தண்டனையாய் அமைந்திருப்பதனால்தான்.

**ஹதீஸ்**

முஸ்லீமையும் காபீரையும் பிரித்துக்காட்டுவது தொழுகைதான்,

**ஹதீஸ்**

ஜன்னத்தின் திறவுகோல் தொழுகைதான்.

இவைபோன்ற ஹதீஸுகளை ஒரு சாரார் மேலோட்டமாய் விளங்கிக் கொண்டு, தொழுகையில்லாவிட்டால் அவர் ஓர் மூமீன் என்றோ சுன்னத்துவல் ஜமாத்தவரென்றோ ஏற்கமுடியாதென்று வாதிடுகிறார்கள். இது ஹதீஸின் உண்மையான அர்த்தம் பிடிபடாமையால் ஏற்படுகின்ற மயக்கமாகும். அபூஜஹீலின் கொள்கையையே சரியென்று ஏற்றுக்கொண்ட ஒருவன் (விஷேடமாய் அறபு பாஷையையும் தொழுகையின் எல்லா அம்ஸங்களையும் தெளிவாய் அறிந்து கொண்ட ஒரு முஸ்ரீக்) மக்களை ஏமாற்றத் தொழுகையில் ஈடுபாடு கொள்கிறான் என்றால் நாம் அவனை ஓர் மூமீன் என்று கூறலாமா? அவன் ஓர் முஸ்ரீக்கல்ல என்று உறுதியளிக்கலாமா?

அல்லாஹ்வுக்காகத் தொழுபவர் (விஷேடமாய் இறை திருப்தியை நாடித் தொழுபவர்) உண்மையான மூமீனாய் றசூலைப் பின்பற்றிய சுன்னத் வல்ஜமாஅத்தைச் சேர்ந்தவராய் இருக்கிறார். 11:56 போன்ற ஆயத்துக்கள் இதற்கு ஆதாரங்களாகும். நரகம் என்ற சிருட்டியைப் பயந்து சுவர்க்கம் என்ற சிருட்டியை ஆதரவுவைத்து தொழுபவர் முஸ்லீமாய் (ஆரம்ப மூமீனாய்) இருக்கிறார். எனினும் இவர் ஸிர்க்கிலிருந்தும் முற்றாய் விடுபட்டவரல்ல. இவருடைய தொழுகை ஸிர்க்கை நீக்குவதற்காகவே அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் உலக மக்களை ஏமாற்ற சமூகத்தில் நல்லபெயர்வாங்க நினைத்துத் தொழுகிற தொழுகை மூமீன்களுடையதுமல்ல முஸ்லீம்களுடையதுமல்ல. இப்படியான தொழுகை முனாபீக்குடைய, ஸைத்தானுடைய, முஸ்ரீக்குடையதாகவே இருக்கும். எனவே தொழுகையின் வெளித்தோற்றம் (உடற்செயல்) தான் முஸ்லீமையும் காபீரையும் பிரிக்கிறதென்பது ஹதீஸின் வெளிக்கருத்தாகும். றசூலின் ஹதீஸில் குறிப்பிடப்பட்ட கருத்துத் தொழுகையின் குறிக்கோளையும் குறிப்பிட்டதென்பதை நாம் சிந்தித்து தெளிவுபெற வேண்டும். அதாவது காபீர் இறைவனைக் கண்டப்படுத்தி வணங்குவதினாலேயே காபீர் (மூடுபவன்) மறைப்பவன் என்று பெயர் பெறுகிறான். எனவே தொழாதவன் காபீரென்பது ஹதீஸின் கருத்தல்ல.

தௌஹீதென்ற சுத்த சத்தியமான ஏகத்துவத்தை ஏற்றுக்கொண்ட சுன்னத் வல்ஜமாஅத்தைச் சேர்ந்தவர்களில் ஒரு சிலர் வெளிப்படை அமல்களில் குறைவுடையவர்களாய் இருந்தாலும் அல்லாஹ்வில் பனாவாகிவிட ஓயாமல் மிகமிக அரும் பிரயாசை எடுத்துக்கொண்டிருப்பவர்கள். நான் என்ற அனா நிய்யத்தை அழித்து அல்லாஹ்வைத் தரிபடுத்த முயற்சிப்பவர்கள். இவர்களுடைய நடையுடை

பாவனைகளில் சிற்சில எமது பழக்கவழக்க நூற்கேள்வியறிவுகளுக்கு மாறாயும் தென்படலாம். இது ஸரீயத்துக்கு விரோதமாய் இராது. எமது அறிவுக்கு மாறாய்த் தென்படலாம். மூஸா(அலை) ஹிள்று (அலை) போன்றோருக்கிடையே நடைபெற்ற விவாதங்களை ஆராய்ந்தால் இவ்வுண்மை பிடிபடலாம். நல்லடியார்களில் இருந்து வெளியாகும் சில செயல்கள் எமதறிவிற்கு விரோதமாய்த் தென்படினும் அவை குர்ஆன் ஹதீஸுகளுக்கு மாறாக இருக்கவே இருக்காது. நாமறியாத அனேக உண்மைகளை இறைவன் அவர்களுக்கு அறிவிக்கிறான்

**ஹதீஸ்**

ஈமான்தாரிகளின் அறிவுக்கு அஞ்சிக்கொள்ளுங்கள். அவர்கள் மெய்யாகவே இறைவனின் பேரொளியைக்கொண்டு பார்க்கிறார்கள். என்று கூறி உண்மையைக் கண்டறிவோருக்கு நிச்சயமாகப் பல நல்லாதாரங்கள் (சான்றுகள்) உள்ளன என்ற 15:75ம் ஆயத்தையும் றசூல் (ஸல்) அவர்கள் ஓதிக் காட்டினார்கள்.

அறிவிப்பவர் - அபூஸஹீத் (றலி)
ஆதாரம் - திர்மிதி

எனவே வெளி அமல்களை வெளிப்படையாய்க் கொண்டு சுன்னத்வல் ஜமா அத்தினரைக் கண்டறிய முற்படுவது தவறாகும். இவ்விஷயம் உள்ளத்தில் பதிய வேண்டும் என்பதற்காக இன்னும் சில ஹதீஸ்களை இங்கே தருகிறேன்.

**ஹதீஸ்**

அபூதர்தா(றலி) அவர்கள் என்னிடம் சினமுற்றவர்களாய் வந்தனர். அப்போது நான் தங்களின் சினத்திற்கு காரணம் என்ன? என்று வினவினேன். அதற்கவர்கள் அல்லாஹ்வின் மீது ஆணையாக மக்கள் ஒன்றுகூடித் தொழுவதைவிட றசூல்(ஸல்) அவர்களின் செயல்களில் எதையும் நான் காணவில்லை என்று கூறினார்.

அறிவிப்பவர் : உம்முதர்தா (றலி)
ஆதாரம் : புஹாரி

இவ்வித ஹதீஸுகளின்படி றசூல்(ஸல்) வபாத்தானபின் றசூலின் பல செயல்கள் மறைக்கப்பட்டு மறைந்துவிட்டன என்பதை அறிகிறோம்.

**ஹதீஸ்**

நபி(ஸல்) அவர்களுடைய காலத்தில் இருந்த அமல்களில் நான் இப்போது ஒன் றையும் காணவில்லையே என்று அனஸ்(றலி) அவர்கள் கூறினார்கள். தொழுகை இருக்கிறதல்லவா? என்று அவர்களிடம் கேட்டபோது: அதிலும் நீங்கள் எவ்வளவோ மாற்றங்களைச் செய்யவில்லையா? என்று தாங்கள் மறு கேள்வி கேட்டார்கள். அறிவிப்பவர்களும் அவர்களே.

ஆதாரம் : திர்மிதி

அனஸ்(றலி) அவர்கள் தாபியீன்களிலுள்ளவர்கள். தாபியீன்களுடைய காலத்திலேயே தொழுகை முதலாம் அமல்களில் கூடச் சிற்சில இடைச் செருகல்களை ஒரு சிலர் புகுத்தியிருக்கிறார்கள். அல்லது சிற்சில வேறுபாடுகளுடன் கையாண்டு கொண்டிருந்திருக்கிறார்களென்பது உண்மையானால் இக்காலத்திலுள்ள மக்களின் வெளிஅமல்களை, விஷேடமாய்த் தொழுகையை அடிப்படையாய்க் கொண்டு சுன்னத்வல்ஜமா அத்தினரை எம்மால் கண்டறிய முடியுமா?

**ஹதீஸ்**

உறுதியான அமைச்சலையும் எகீனையும் உங்களுக்கு குறைந்த அளவாகவே தரப்பட்டுள்ளது. ஆனால் அவற்றில் பூரண அளவு கொடுக்கப்பட்டு தெய்வீக அனுக்கிரக முண்டாகிற ஒவ்வொருவரும் இரவெல்லாம் நின்று வணங்காததைப் பற்றியும் பகலெல்லாம் நோன்பு நோற்காததைப் பற்றியும் கை சேதப்பட வேண்டியவனல்லன்.

ஆதாரம் - எஹ்யா உலுமுத்தீன்

(அமலைவிட(எகீனை) ஈமானை வற்புறுத்திக் கூறப்பட்ட காரணமென்ன? என்பதைச் சிந்தித்து தெளிவுபெறுக).

**ஹதீஸ்**

(நபியே!) உம்முடைய சமூகத்தவரில் எவர் அல்லாஹ்வுக்கு இணையாக்காமல் இறந்துவிடுகிறாரோ அவர் சுவனம் செல்வார் என்று ஜிப்ரீல் (அலை) தம்மிடம் வந்து நன்மாராயம் கூறியதாக நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது நான்; அவன் விபச்சாரனாகவும், திருடனாகவும் இருந்தாலுமா? என்று வினவினேன். அதற்கு நபியவர்கள்; ஆம். அவன் விபச்சாரனாகவும், திருடனாகவும் இருந்தாலும் சரியே என்று கூறினர். நான் (மீண்டும்) அவன் விபச்சாரனாகவும், திருடனாகவும் இருந்தாலுமா? என்று வினவினேன். ஆம் அவன் விபச்சாரனாகவும், திருடனாகவும் இருந்தாலும் சரியே என்று நபி அவர்கள் கூறினர். பின்னர் நான்காவது தடவையில் அபூஸர்ருடைய மூக்கறுபடினும் சரியே (அவன் சுவனம் செல்வான்) என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பார் - அபூஸர்கிபாரி (றலி)
ஆதரம் - புஹாரி, முஸ்லீம், திர்மிதி

(இந்த ஹதீஸில் அமல்களைப்பற்றி எதுவும் கூறப்படாமல் ஸிர்க்கில்லாத ஈமானை மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளதை நோக்குக.)

விபச்சாரம், திருட்டு முதலாம் குற்றங்களில் ஈடுபடும்போது ஈமான் விலகி விடுவதாயும் மீண்டும் சேர்ந்து விடுவதாயும் பல ஹதீஸ்கள் விபரம் தருகின்றன. நாம் இதிலிருந்து பெற்றுக்கொள்ளும் உண்மை என்னவென்றால் ஸிர்க்கிற்கு

எப்பாபமும் இணையாகாது என்பதே. இன்றுள்ள பெரும்பாலான மக்கள் கொள்கை விளக்கத்தை விளங்கிக் கொள்ளாமல் கொள்கையை உறுதிப்படுத்தும் அமல்களையே முழுப்படியான தீன் என்று நம்பியிருக்கிறார்கள். குர்ஆனில் நான்கு பகுதிகளுண்டு. அவையாவன:

1வது தௌஹீது (கொள்கை) ஏகத்துவம், தீன் என்பது இதுதான்.

2வது றுபூபியத் (அப்து றப்புவைப்பற்றிய விபரம்).

3வது றஹ்மத் (அருட்கொடைகளைப்பற்றிய விபரம்).

4வது அதாலத் (நீதி நிர்வாகம்).

மக்களில் மிகப்பெரும்பாலார் இந்த 4வது படியிலேயே கண்மூடித்தனமாய் ஊறிக்கொண்டிருக்கிறார்கள். தௌஹீதை உறுதிப்படுத்தவே அதாலத் என்ற நீதி நிர்வாகம் தரப்பட்டுள்ளது. இத்தோடு தீன் முடிவு பெறுவதில்லை மற்றும் படி களையும் படிப்படியாய்க் கடக்காமல் நாம் ஈமானில் முழுமை பெறமுடியாது.

இணையேற்படுவது; உள்ளத்திலுள்ள தவறான விசுவாசத்தினால்தான். இந்த மூடத்தனமான விசுவாசமே வெளிச்செயல்களையும் ஸிர்க்காக மாற்றிக் கொண்டி ருக்கின்றது. அல்லாஹ்வுடன் வேறு எதுவும் இல்லையென்றால் உண்மையான விசுவாசம் எப்போது மனிதருக்கு ஏற்படுமோ அப்போதே எல்லாச் செயல்களி லிருந்தும் ஏற்பட்ட எல்லாச் ஸிர்க்குகளும் முற்றாய் ஒழிந்துவிடும். எனவே கண்மூடித்தனமான பின்பற்றலை விட்டுவிட்டு முதலில் கொள்கையையும், அதில் ஊறி உறுதி பெறுவதற்காக அமலையும் எடுத்துக்கொள்வதே சரியாகும். இதுதான் உண்மையான சுன்னத்வல்ஜமாஅத்தாரின் அபிப்பிராயமாகும். குர்ஆன் ஹதீ ஸுகளின் தீர்ப்பும் இதுவே.

கொள்கை விளக்கத்தைக் கொண்டுதான் சுன்னத்வல் ஜமாஅத்தினரை எம்மால் அறிய முடியுமேயன்றி அற்புதச் செயல்களைக்கொண்டு அக்கூட்டத்தினரை எம்மால் கண்டறிய முடியாது. ஏனென்றால், நல்லடியார்களில் இருந்து வெளியாகும் கறா மாத்தையும் சாதாரண மக்களில் இருந்து வெளியாகும் அற்புதத்தையும் பிரித்து அறிவதற்கு மிகமிக நுண்ணறிவு அவசியமாகும். வெளிப்படையில் வெளியாகும் அற்புதங்களைக் கொண்டு கணிப்பதானால் (ஹிப்னாடிஸ்ட்டுக்கள்) மெஸ்மரைஸம் கற்றோர், சிஹ்ருடையோர் யாவரும் நல்லடியார்களே என்று கூறநேரிடும். இது ஒத்துவராது. தௌஹீதை (ஈமானை)ப் பெற்றுக்கொள்ளாத மக்களிலும் பலர் அற்புதம் செய்யக் கூடியவர்கள் உண்டு. இவ்வகையினரையெல்லாம் நாம் சுன்னத்வ ல் ஜமாஅத்தினர் என்று கூற முடியுமா? சுன்னத் வல்ஜமாஅத்தைச் சேர்ந்த நல்லடி யார்களுக்கு (கறாமாத்து) அற்புதம் உண்டென்பது நிச்சயமான உண்மை. ஆயினும் அற்புதச்செயல்களை அடிப்படையாய்க்கொண்டு சுன்னத்வல்ஜமா அத்தினரைக் கண்டறிய முற்படுவது உறுதியான ஆதாரமாய் அமையாது, அற்புதங்களை

உறுதியாய் நிரூபணம் செய்ய முடியாது. நம்புபவர் நம்பலாம் நம்பாதவர் விடலாம். ஆனால் அற்புதத்தை ஆதாரமாய்க் கொண்டு சுன்னத்வல் ஜமாஅத்தினரைக் கண்டறிய முற்படுவது அறிவீனமாகும். இவ்வித அறிவீனத்தில் மாட்டிக்கொண்ட மக்கள் கலிமாவின் கருத்தையே தெரிந்து கொள்ளாத பல போலிகளை நல்லடியார் களாய் நம்பி இன்றும் ஏமாந்து கொண்டிருக்கிறார்கள். இவ்வித மூடப்புத்தியை நீக்கி விட்டு எமது இமாமான குர்ஆன், ஹதீஸ், இஜ்மாஉ, கியாஸ், அறிவு முதலாம் ஆதாரங்களை அடிப்படையாய்க் கொண்டே உண்மையைக் கண்டறிய வேண்டு மென்று வேண்டிக்கொள்கிறேன்.

**குர்ஆன்: 16:64**

அன்றி (நபியே!) இவர்கள் எவ்விடயத்தில் தர்க்கித்துக் கொண்டுள்ளார்களோ அதனை நீர் தெளிவாக்குவதற்காகவே குர்ஆனை உம்மீது நாம் இறக்கி வைத்தோம். அன்றி விசுவாசம் கொண்ட மக்களுக்கு நேர்வழியாகவும் ஓர் அருளாகவும் இருக்கிறது. எமக்கேற்படும் எல்லாப்பிரச்சனைகளுக்கும் குர்ஆன் ஹதீஸுகளைக் கொண்டே தீர்ப்புப்பெறலாம் என்பது நிச்சயமான உண்மை. மேலும் இஜ்மாஉ, கியாஸ் முதலாம் பிரமாணங்களும் குர்ஆனில் இடம் பெற்றிருப்பதைச் சிந்தனை யாளர்களால் கண்டறியமுடியும். எனவே எம்போன்ற சாதாரண மனிதர்களின் இஜ்மாஉ எமக்கு அவசியமல்ல. ஆயினும் அது குர்ஆன் ஹதீஸுகளை ஒத்திருந்தால் நாம் அதை ஏற்றுக்கொள்வதில் தவறில்லை.



7

# இன்னும் ஓர் சந்தேகம்

றசூல்(ஸல்) அவர்கள், நீங்கள் பெரும் கூட்டத்தைப் பற்றிப் பிடியுங்கள் என்று கூறியுள்ளார்கள். இங்கே நீங்கள் தந்த விபரப்படி, உலகின் 500கோடி மக்களில் மிகமிகக் குறைந்த தொகையினரே சுன்னத்வல்ஜமாஅத்தினர் என்பது தென்படுகிறது. எனவே பெரும் கூட்டத்தைப் பின்பற்றவேண்டிய நாம் தனிப்பட்ட ஒருவரை அல்லது மிகக்குறைந்த தொகையினரை பின்பற்றுவது றசூலின் ஹதீஸுக்கு மாறு போல் தென்படுகிறதேயென்பதுதான் சந்தேகம். விடை:

**குர்ஆன்: 6:116**

இப்புவியில் இருப்போரில் அனேகரை நீர் பின்பற்றுவீரானால், அவர்கள் உம்மை அல்லாஹ்வுடைய பாதையிலிருந்து திருப்பிவிடுவார்கள். (ஆதாரமற்ற) வெறும் யூகங்களைத்தவிர (உண்மையை) அவர்கள் பின்பற்றுவதில்லை. அன்றிப் (பொய் யான) கற்பனையில்தான் அவர்கள் மூழ்கியிருக்கிறார்கள்.

இவ்வாயத்தின்படி புவியிலுள்ள அனேகர் பின்பற்றத்தகாதவர்கள் என்பதை அறிகிறோம். அனேகர் என்பது எண்ணிக்கையினால் கூடியவர்கள் என்பதை அறிவிக்கிறது. இவ்வாயத்தில் ஓர் கூட்டம் சிறு சர்ச்சை செய்கிறது. இவ்வாயத்து அருளப்பட்டபோது இருந்த மக்களில் மிக அனேகர் தீயபாதையில், கற்பனையில் ஊறியவர்களாயும் பின்பற்ற தகாதவர்களாயும் இருந்திருக்கலாம். மேலும் இவ் வாயத்து நபியை நோக்கிக் கூறப்பட்டிருக்கிறது, எனவே இக்காலத்துக்கு இது பொருந்தாததேயென்று (ஓர் கூட்டம்) சிலர் வாதிடுவதை நாம் ஏற்கமுடியாது. இதற்கு இரு நியாயங்கள் கூறலாம்.

1வது 'நீர்' என்று சுட்டப்படுவது நபியை மட்டும்தான் என்றெடுத்துக் கொள்வது வஹ்முவாய் இருக்கிறது. குர்ஆன் உலக மக்கள் யாவருக்கும் பொதுவாய் இருப் பதால், இந்த ஆயத்தை எவரெவர் எடுத்துக்கொண்டாலும் அவர்கள் ஒவ்வொரு வரையும் தனித்தனியே நோக்கித்தான் 'நீர்' என்று கூறுகிறது குர்ஆன். எனவே அக்கட்டளை நபிக்குமட்டுமல்ல உலகமக்கள் அனைவருக்குமே பொதுவானதென்று தெளிவாகிறது.

2வது நபிக்கு மட்டும்தான் அந்தக்கட்டளையென்றெடுத்துக் கொண்டாலும் கூட அதில் மிகப்பாரதூரமான ஓர் உண்மை தெளிவாகிறது. நபிமார்கள் ஈமானில் உறுதிபெற்ற நல்லடியார்கள். இவர்கள் அல்லாஹ்வுடைய பாதையில் நிலையாய் இருந்துகொண்டு அதே பாதைக்கு மக்களை அழைத்தவர்கள். இவர்களுடைய ஈமான் தவறக்கூடியதல்ல. அப்படியிருந்தும்கூட கற்பனையில் யூகங்களில் மூழ்கிய

மக்களைப் பின்பற்றினால் அல்லாஹ்வுடைய பாதையில் நின்றும் திருப்பி விடுவார்களென்று கூறப்பட்டிருப்பதால், கற்பனையில் மூழ்கிய பெரும்பாலான மக்களைப் பின்பற்றுவது நபிமார்கள், வலிமார்களைக்கூட திணறச் செய்துவிடும் என்பது உணர்த்தப்படுகிறது. கற்பனையில் மூழ்கிய மக்களே எக்காலத்திலும் பெரும்பான்மையாய் (தொகை கூடியவர்களாய்) இருக்கிறார்களென்பது வெளிப்படை. எனவே இவ்வாயத்து நபியின் காலத்துக்கு மட்டுமல்ல, எக்காலத்துக்கும் பொருத்தமானதுதான் என்பது உறுதியாகிறது. இவ்விபரத்தை வேறு சில ஆயத்துக்கள் உறுதிப்படுத்துகின்றன.

**குர்ஆன்: 2:88**

ஈமான் (விசுவாசம்) கொள்வோர் சிறு பான்மையினரே.

**குர்ஆன்: 11:17**

பெரும்பாலான மனிதர்கள் ஈமான் (விசுவாசம்) கொள்ளமாட்டார்கள்.

**குர்ஆன்: 12:103**

நீர் எவ்வளவுதான் விரும்பியபோதிலும் மனிதரில் பெரும்பாலானோர் ஈமான் கொள்ளவே மாட்டார்கள்.

**குர்ஆன்: 12:106**

அவர்களில் பெரும்பாலானோர் அல்லாஹ்வை ஈமான் கொள்வதில்லை. (அவ்வாறு அவர்களில் எவரேனும் ஈமான் கொண்டபோதிலும்) அவர்கள் இணை ஏற்படுத்தாமலுமில்லை, (இவைபோன்ற பிற ஆயத்துக்கள் ஹதீஸுகளையும் எடுத்துக் கொள்க.)

இவ்வித ஆயத்துக்கள் ஈமான்கொண்டோர், ஈமான் கொள்வோர், இனிமேல் ஈமான்கொள்ள இருப்போர் தொகையினால் மிகச் சொற்பமானவர்கள் என்பதையும், வழிதவறிக் கற்பனையில் மூழ்கியுள்ள மக்கள் எக்காலத்திலும் தொகையினால் மிக அனேகர் என்பதையும் அறிவிக்கின்றன. தொகையினால், அல்லது எண்ணிக்கையினால் பெரும் கூட்டம் வழிதவறிய கூட்டம் என்பதை அறிந்து கொண்டோம்.

குர்ஆனுடைய கூற்றை உறுதிப்படுத்துவதுதான் ஹதீஸுகளின் கடமையாகும். எனவே குர்ஆனை ஹதீஸ் விரோதிக்கமுடியாது. ஆனால் றசூல்(ஸல்) அவர்களால் கூறப்பட்ட, பெரும் கூட்டத்தைப் பற்றிப்பிடியுங்கள் என்ற ஹதீஸ் ஓர் மயக்கத்தை உருவாக்குகிறது. பெரும் கூட்டம் என்றால் தொகையினால் பெரும் கூட்டம் என்று பாமர மனிதன் நம்பிவிடுவதால், தனிப்பட்ட ஒருவர் அல்லது ஒரு சிலர் (எண்ணிக்கையில் குறைந்தோர்) கூறும் உண்மையைக் கூட அம் மனிதன் ஏற்றுக்கொள்

கிறானில்லை. இவ்வித மூடப்பிடிவாதத்தில் பல பட்டதாரிகள்கூட மயக்குண்டிருக் கிறார்களென்பதை நான் அறிகிறேன். இவ்வித மருட்சியுடைய பட்டதாரிகள் பெரும் கூட்டத்தையே பின்பற்ற வேண்டுமென்று கூறுவது சரியென்றால், இன்று உலகில் தொகையால் கூடிய கிறிஸ்த்தவர்களான எண்ணிக்கையில் பெரும் கூட்டத்தையே நாம் பின்பற்ற வேண்டியேற்படும். எனவே றசூலின் ஹதீஸில் சுட்டப் பட்ட பெரும்கூட்டம் என்பது எண்ணிக்கையினால் பெரும்கூட்டம் என்ற கருத்துடையதல்ல. அறிவினால், இறைவனிடத்திலுள்ள(தரஜா) பதவியினால் பெரும்கூட்டம் என்பதே ஹதீஸின் பொருளாகும்.

ஓர் பெரியார் என்று நாம் கூறும்போது உடலால் பெரியார் என்பது பொருளல்ல. அல்லாஹ் பெரியவன் என்றால் மற்றும் பிறவற்றைவிடப் பெரியவன் என்பது பொருளல்ல. பெரியவன், பெரியது, பெரும்கூட்டம் என்பவற்றில் பாவிக்கப்படு கின்ற ‘பெரும்’, ‘பெரிய’ என்பவை இடத்துக்கும், அறிவுக்கும் அவசியத்துக்குமேற்ற பொருள் தருகின்றன. மனிதர்களின் அறிவிற்கேற்றபடி அன்பியாக்களாகிய நாங்கள் பேசும்படி கற்பிக்கப்பட்டிருக்கிறோம் என்பது றசூல்(ஸல்) அவர்களுடைய வாக் காகும். இதையொட்டிப் பாஷைவழக்கின்படிதான் றசூல்(ஸல்) அவர்கள் இறை யறிவுடைய உயர் மர்தபாக்களைப்பெற்ற அன்பியாக்கள் அவுலியாக்களான அஹ்லுல்ஹல்லிவல்அத்திகளென்ற பெரியார்களை நோக்கியே பெரும் கூட்டத்தைப் பின்பற்றுங்கள் என்று கூறியுள்ளார்கள். தொகையினால் பெரும்கூட்டமென்பது வழி தவறியகூட்டம் என்பதையும் அறிவினால் பெரும்கூட்டமென்று கூறப்படுவது அன்பியாக்கள் அவுலியாக்களை நோக்கியதென்பதையும் விளங்கிக்கொண்டால் எமது சந்தேகம் நீங்கிவிடும்.



8

# கவனத்தில் கொள்ளவேண்டிய முக்கியமான விஷயம்

இந்த நூலில் நான் காட்டியுள்ள விபரங்களையும் எனது குறிக்கோளையும் புரிந்து கொள்ளாமல் நான் தொழுகை முதலாம் அமல்களைக் குறைகாணுகிறேனென்றோ, தொழாமலே இருந்துவிடும்படி கூறுகிறேனென்றோ தவறாக விளங்கிக்கொள்ள வேண்டாம். இப்படித்தவறாக விளங்கிக்கொண்ட பலர் கடந்தகாலங்களில் என்னை குறைகூறியதுண்டு. அவ்வகையினரின் சந்தேகத்தை நீக்குவதற்காகவே இதை எழுதுகிறேன்.

இன்றைய உலகில் தொழுகையை ஒருசாரார் கேடயமாக அமைத்துக் கொண்டு இஸ்லாத்துக்கு நேர் முரணான கொள்கையில் மக்களை வழிநடத்திச் செல்லுகிறார்கள். இவ்வகையான பல கூட்டங்கள் இன்று செயல்படுகின்றன. இனிப்புப் பண்டத்தைக் கண்ட குழந்தைகள் ஏமாறுவது இயல்புதான். ஆனால் அந்த இனிப்புப்பண்டத்தில் நஞ்சுகலந்திருப்பதைக் குழந்தைகள் அறிவதில்லை. இதைப்போல தொழுகையென்ற இனிப்புப்பண்டத்தைக் கண்ட பாமரமக்கள் ஏமாந்து விடுகிறார்கள். தங்களுடைய அமீர்கள் தங்களுக்குத் தரும் உபதேசங்களே வேதம் என்று நம்பிவிடுகிறார்கள். மேலும் மேலும் ஸிர்க்கிலேயே ஊறிக்கொண்டிருக்கிறோம் என்பதை அம்மக்கள் அறிந்துகொள்வதில்லை. முடிவில் றசூல்(ஸல்) அவர்களை மிஸ்டர் முகமட் என்று கூறும் அளவுக்குத் தம்மை அந்த அமீர்கள் அழைத்துச் செல்கிறார்களென்பதைக்கூடப் பெரும்பாலான மக்கள் உணர்வதில்லை. இந்த அறியாமையை நீக்கி உண்மையை உணர்த்தவேண்டுமென்பதே எனது நோக்கமாகும். தொழுகை முதலாம் அமல் களைத் தரக்குறைவாய்க் கணிப்பதோ மக்களைத் தொழாமல் தடைப்படுத்துவதோ எனது நோக்கமல்ல. தொழுகை முதலாம் அமல்களைக் கண்டு மக்களும் ஏமா றாமல் உண்மையை உணரவேண்டும் என்பதே எனது நோக்கம். ஈமானில்லாத எந்த அமலும் பிரயோசனம் தராதென்பதையும் அமல்களின் நோக்கம் ஈமானை உறுதிப்படுத்துவதே என்பதையும் தொழுகை முதலாம் வெளிஅமல்களைக் கொண்டு சுன்னத்வல்ஜமாஅத்தினரைக் கண்டறிய முடியாதென்பதையும் தெளிவுபடுத்து

வதற்காகவே இந்த நூலை நான் எழுதியிருக்கிறேன். தௌஹீதைப்பெற்று இம்மை மறுமைப்பயன்களை மக்கள் பெறவேண்டும் என்பதே எமது நோக்கம்.

இஸ்லாம் என்பது வெறும் குருட்டு நம்பிக்கையும் குருட்டு அனுஷ்டானங் களும் கொண்ட ஓர் மதமல்ல. அது ஓர் பூரணமான இயற்கை வழியாகும். இதில் இம்மை மறுமைக்குரிய சகல அம்சங்களும் சட்டதிட்டங்களும் பூரணமாய் இடம் பெற்றிருக்கின்றன. ஆயினும் இஸ்லாம் இன்று அதன் சொந்த உயிருடன் இருப்ப தாய்த் தெரியவில்லை. எத்தனை எத்தனையோ இடைச் செருகல்கள் புகுத்தப்பட்டு விட்டதால் பிற மதங்களுக்கும் இஸ்லாத்துக்கும் கொள்கையளவிலுள்ள வேறு பாடென்ன? என்பதைக் கண்டறிவதுகூட மிகக்கடினமாகவே இருக்கிறது.

றசூல்(ஸல்) அவர்களுடைய மறைவுக்கு சுமார் 30 வருடங்களின் பின் இஸ்லாத்தில் பொய்பரவ ஆரம்பித்துச் சுமார் 180 வருடங்களுக்குள் நிரப்பம் பெற்றிருக்கிறது. இவ்விஷம் பட்டதாரிகளிலும் பலருக்குத் தெரியாதிருக்கலாம். புரட்டலை நிரூபிக்க எவ்வளவோ ஆதாரங்களைத் தரமுடியும். ஒரு சில ஹதிஸு களைமட்டும் இங்கே தருகிறேன்.

**ஹதீஸ்**

காலங்களில் சிறந்தது என் காலமும் பிறகு என் காலத்தை அடுத்தவர்களின் காலமும் ஆகும், பிறகு பொய்பரவி விடும் என்று றசூல்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : இப்னு உமர் (றலி)

ஆதாரம் : திர்மிதி

இதே ஹதீஸை லபீது(றலி) போன்ற இன்னும் பலர் கூறியுள்ளனர். ஹதீஸில் கூறப்பட்ட பொய் ஸிர்க் என்பதைக் குறிப்பிட்டதாகும். பாதில் என்ற பொய் ஸிர்க்குத்தான் என்பதை எமது முதல் நூற்களில் நிரூபித்துள்ளேன்.

**ஹதீஸ்**

மக்களில் மிகவும் மேன்மைவாய்ந்தவர்கள் எம் காலத்தவர்தாம். அதன்பின் அவர்களை அடுத்த காலத்தவர்தாம். அவர்களின் காலத்துக்குப்பின் இருதலை முறையினரைக்கூறினாரா? அல்லது மூன்று தலைமுறையினரைக் கூறினரா? என்பதை நான் அறியேன் (என்று அறிவிப்பாளர் கூறினார்). பின்னர் இவர்கள் அடுத்துவரும் கூட்டத்தினர் சாட்சிகூறக் கோரப்படாமலே சாட்சிகூறுவர், மோசம் செய்வர். அமானிதம் வைக்கப்படமாட்டார்கள். நேர்ச்சை செய்வர். ஆனால் (அதனை) நிறைவேற்ற மாட்டார்கள். அவர்கள் பெருத்திருப்பதும் கொழுத்திருப் பதும் வெளியே தெரியும் என்றும் றசூல்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : இம்ரான் இப்னு ஹுஸைன்(றலி)

ஆதாரம் : புஹாரி, முஸ்லீம், அபூதாவூத்

இந்த ஹதீஸில் கூறப்பட்ட சாட்சியம், துன்யாவிஷத்தின் சாட்சியம் மட்டுமல்ல அஷ்ஹது அன்லா இலாஹஇல்லால்லாஹ் என்ற கலிமாவைக்கூறும் சாட்சியமே ஹதீஸில் இடம்பெறும் சாட்சியமாகும். ஹதீஸில் இடம்பெறும் பிறவசனங்களையும் ஆராய்ந்து தெளிவுபெறுக.

**ஹதீஸ்**

கடைசி நாளையில் வருகிற தஜ்ஜாலைவிட வேறுசில தஜ்ஜால்களுக்கு நான் பயப்படுகிறேன் என்று றசூல்(ஸல்) அவர்கள்கூற, அவர்கள் யாரென்று தோழர்கள் வினவ, வழிகேட்டில் மக்களைத் தள்ளிவிடுகிற இமாம்கள் என்று பதில் கூறி னார்கள்.

அறிவிப்பவர் : தௌபான் (றலி)
ஆதாரம் : அபூதாவூத்

(இன்னும் ஓர் ஹதீஸ் இமாம்கள் என்பதை உலமாக்கள் என்று அறிவிக்கின்றது.) இதைப்போன்ற இன்னுமோர் ஹதீஸ் எஹ்யா உலுமுத்தீன் என்ற நூலில் விபரம் தரப்பட்டுள்ளது. இமாம்களென்றால் மக்களை வழி நடாத்தும் நல்ல, தீய தலைவர்கள் யாவரையும் குறிப்பிடும். ஹதீஸில் கூறப்பட்ட இமாம்கள் தீய வழியில்(ஸிர்க்கில்) மக்களைத் தள்ளிக் கொண்டிருக்கின்ற வழிகாட்டிகள் யாவரையும் குறிப்பிடும். அபூஜஹீல்கூட அவனுடைய கூட்டத்தினருக்கு இமாம்தான். அந்த முஸ்ரீக்கான அபூஜஹீல் கொண்டிருந்த ஸிர்க்கென்ற, தவறான, பொய்யான இணையேற்படுத் தலையே உறுதிப்படுத்தக் கூடியதாய் கலிமாவிலுள்ள இலாஹு என்ற சொல்லுக்கு வணக்கத்துக்குரிய நாயன் என்று வலிந்துரை கொண்டிருப்பவர்கள் எவர்களோ, அவர்களையே தஜ்ஜால்களுக்கு ஒப்பிடப்பட்ட இமாம்கள் என்பதை நாம் உணர வேண்டும். இஸ்லாத்தில் முதல் முதலில் புகுத்தப்பட்ட பித்அத் என்பது கலிமத் துத்தை யிபாவுக்கு வலிந்துரைகொண்டு ஸிர்க்கை உருவாக்கும் கலிமத்துல் கபீஸாவாக மாற்றியதேயாகும்.

**ஹதீஸ்**

இஸ்லாம் மார்க்கம் வெளியாகும்போது அற்பமாக, உதவியற்றதாக இருந்தது போல இனிமேலும் ஆகிவிடும். ஆகையால் உதவியற்றவர்களுக்குச் சுப சோபனம் உண்டாகக்கடவது என்று றசூல்(ஸல்) அவர்கள் கூறியபோது உதவியற்றவர்கள் யார்? என்று ஒருவர் வினவ, எனது மார்க்கத்தில் மற்றவர்கள் கட்டுக்குலைத்தவை களை (உண்மையின் அடிப்படையில்) விருத்தி செய்பவர்களேயாவார்கள் என்று றசூல்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : இப்னு உமர் (றலி)
ஆதாரம் : தாவீலாத்துன்னஜ்மியா

இதே ஹதீஸை அம்ருஇப்னு அஃவ்பு(றலி) அவர்களும் கூறியிருக்கிறார்கள். இது திர்மிதியில் இடம்பெறுகிறது. இந்த ஹதீஸின்படி மார்க்கத்தின் அடிப்படை புரட்டப்பட்டுள்ளது நிரூபணமாகின்றது. மார்க்கம், தீன் என்பவையெல்லாம் தௌஹீதென்ற ஏகத்துவத்தையே குறிப்பிடும் சொற்களாகும். இந்த ஏகத்துவம் என்ற தௌஹீது இன்றைய உலக மக்களில் 90%மக்களிடையே ஸிர்க்காகவும், ஸிர்க் என்ற இணைகற்பித்தல் தௌஹீதாயும் தென்படுவதற்குக் காரணம் என்ன வென்றால் இஸ்லாத்தின் கொள்கையைப் புரிந்துகொள்ளாத ஓர் கூட்டம் அவர் களுடைய அறிவுக்கேற்றபடி கலிமாவுக்கு வலிந்துரை கொண்டதும், மக்களைச் சிந்திக்கவிடாமல், கேள்விகளுக்கு விடையளிக்காமல் மழுப்பி மழுப்பி மக்களை மேய்த்துக் கட்டுப்படுத்தியதுமேயாகும். இந்த 20ம் நூற்றாண்டில் கூடப் பெரும் பாலான மக்கள் தீனின் ஆணிவேரான கலிமாவை இதுவரையிலும் பூரணமாய் ஏற்றுக்கொண்டிருப்பதாய் நான் அறியவில்லை.

**ஹதீஸ்**

மனிதர்களில் ஓர்காலம் வரும் அப்போது இஸ்லாத்தின் நாமமேயல்லாது அதன் உண்மை (தொளஹீது) இராது. குர் ஆனில் எழுத்துக்களேயன்றி அதன் உண் மையான அர்த்தம் இராது. அவர்களின் பள்ளிவாசல்கள் நேர்வழியின்றிக் கெட்டுப் போய் இருக்கும். அவர்களின் உலமாக்கள் வானத்தின் கீழ் (மிகக்)கெட்ட ஜந்துக்களாய் இருப்பார்கள்.

அறிவிப்பவர் : அலி(றலி)
ஆதாரம் : பைஹக்கி
(மிஸ்காத் பாபுல்இல்ம் 38ம் பக்கம் காணலாம்).

உண்மையான சுன்னத்வல் ஜமாஅத்தினரான உலமாக்களை இந்த ஹதீஸ் சுட்டா தென்பதற்கு இந்த ஹதீஸிலேயே ஆதாரமுண்டு. இஸ்லாத்தின் உண்மை எது? தௌஹீதுதான். மேற்காட்டிய ஹதீஸின்படி இன்று தௌஹீது ஸிர்க்காக மாற்றப் பட்டுத் தௌஹீதை உறுதிப்படுத்தும் பல ஆயத்துக்களுக்குத் தப்ஸீர்களில் தப்பர்த்தமும் செய்யப்பட்டிருப்பதை நாம் மறுக்கமுடியாது. அப்படியில்லாமல் இஸ்லாத்தின் உண்மையும் குர்ஆனில் 100வீதமும் சரியான அர்த்தம் உண்டென்று வாதிட்டால் நாம் றசூல்(ஸல்) அவர்களின் ஹதீஸை மறுத்தவர்களாவோம். இன்னும் பல ஆதாரங்களைத் தர முடியும். சிந்தனையாளர்களுக்கு இவ்வளவு போதும் என்பது என்கருத்து.

இவ்வகை ஹதீஸுகளிலிலுந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டியது என்ன வென்றால், மிக மிக நீண்ட காலத்துக்கு முன்பே இஸ்லாத்தின் கொள்கை (தௌஹீது) ஒரு சில அறியாத மக்களால் திரிபுபடுத்தப்பட்டு (மாசுபடுத்தப்பட்ட கலப்பட மாய் மாற்றப்பட்டு) இருந்துகொண்டிருக்கின்றதென்பதே. தௌஹீது என்பது

ஒன்றேயொன்றுதான். ஆயினும் ஒரு கூட்டத்தார் தௌஹீது நாலு பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். அப்படிச்செய்தும் அவர்களுடைய தெஹீதின் கருத்து அல்லாஹ் வேறு சிருட்டிவேறு என்பதே. நாம் நூற்கேள்வியறிவு, பழக்க வழக்கம், மூடப் பிடிவாதம் போன்ற திரைகளில் மாட்டிக்கொண்டு (இரவல் மூளையுடன்) வாழ்வதால் நாம் எதை கற்றுக்கொண்டோமோ அதுதான் சரியென்றும் மற்றெல்லாம் பிழை யென்றும் திடீர் முடிவுசெய்துவிடுகிறோம். இது மனித சமூகத்திலுள்ள மிகப்பெரும் தவறாகும். இவ்விதமான இருள், ஒளித் திரைகளில் சிக்கியுள்ள மக்களுக்கு இந்த நூலில் நான் கூறியுள்ள விஷயங்கள் வியப்பாகவோ, சரியாகவோ, பிழையாகவோ தென்படலாம். எனவே சடைவுகொள்ளமல் கட்சிப்பற்று, வெற்றி தோல்வியென்ற விலங்குகளில் மாட்டிக்கொள்ளாமல் பகுத்தறிவை முறைப்படி பயன்படுத்தி உண்மையைக் கண்டறிவதற்காக இயன்றவரையில் பல கோணங்களில் சிந்தித்துத் தெளிவு பெறும்படி சமூகமக்களை வேண்டிக்கொள்கிறேன்.

மேலும் உலமாக்கள் என்ற மேன்மைதங்கிய மக்களைப்பற்றிய பல ஹதீஸ்கள் தென்படுகின்றன. றசூல்(ஸல்) அவர்களைப் பின்பற்றிய சுன்னத் வல்ஜமா அத்தி னரான உலமாக்கள் அஹ்லுல்கிதாபிகளுடைய நபிமாருக்கு ஒப்பானவர்களென்பதை நாம் பூரணமாய் ஏற்றிருக்கிறோம். இவ்வித ஹதீஸ்கள் பிரபலமானவையாய் இருப்பதால் அவற்றை நான் இங்கு தரவில்லை. உலமாக்கள் றசூல்(ஸல்) அவர்களின் வாரிசுகளாய் இருப்பதால் றசூல்(ஸல்) அவர்களும் அவர்களுடைய தோழர்களும் எந்த சுன்னாவில் இருந்தார்களோ, மக்களை எதன்பக்கம் அழைத்தார்களோ, அதே சுன்னாவையும் அதே அழைப்பையும் உலமாக்கள் ஏற்றுக்கொண்டு அதை அமுலாக்க வேண்டியது கண்டிப்பான, மிகமிகப் பொறுப்புவாய்ந்த ஓர் கடமையென்பதை உலமாக்களால் மறுக்க முடியாது. மறுத்தால் அவர்கள் சுன்னத்வல்ஜமாஅத்தினரான, றசூலைப் பின் பற்றிய உலமாக்கள்தானென்று நாம் கூறமுடியாது.

ஏனென்றால் றசூல்(ஸல்) அவர்களும் அவர்களுடைய தோழர்களும் முன்சென்ற நபிமார்கள் றசூல்மார்களும் அவர்களுடைய தோழர்களும் அகில உலக மக்களையும், ‘லாஇலாஹ இல்லல்லாஹ்’ என்ற தௌஹீதுக் கலிமாவின் பக்கமே அழைத்தார்கள். அதுவே ஸிறாத் என்ற நேர்வழியென்று இவர்கள் விளக்கினார்கள். இவர்கள் தங்கள் கூற்றை உறுதிப்படுத்த அற்புதம் போன்ற ஏதோவெல்லாம் செய்தார்கள். முடிவில் றசூல்(ஸல்) அவர்கள் பல யுத்தங்களையே செய்து உண்மையை உறுதிப்படுத்தினார்கள். இதை எம்மால் மறுக்க முடியுமா?

ஆனால் றசூல்(ஸல்) அவர்களும் அவர்களுடைய ஸஹாபாக்களும் இருந்து கொண்டிருந்த சுன்னாவை எடுத்துக் கொண்ட சுன்னத்வல்ஜமாஅத்தைச் சேர்ந்தவர்களே நாங்கள் என்று மார்புதட்டுகிற, பெரும் நெடிய நீண்ட பட்டங்களோடு வாழும் உலக உலமாக்களில் எவராவது ஒருவர் அல்லது ஓர் கூட்டம் இக் காலத்தில் கலிமாவின்பக்கம் மக்களை அழைத்ததுண்டா? உலமாக்கள் என்ற போர்வையிலுள்ள

மிகப்பெரும்பாலார் தொழுகைக்காக மக்களை அழைக்கிறார்களேயன்றிக் கலிமாவின்பக்கம் அழைப்பதே இல்லை. ஈமானற்ற வணக்கம் சாபக்கேடாக அமைந்திருப்பதை இவர்கள் அறிவதேயில்லை. கலிமாவைப்பற்றி அதன் அர்த்தம்பற்றி எவரும் விளக்குவதுமில்லை. அவ்விஷயத்தில் எவராவது வினா எழுப்பினால் அவரைச் ஸைத்தானாகக் கணித்து விடுகிறார்கள், மேலும் அல்லாஹ் வேறு சிருட்டி வேறுதான் என்ற கருத்தையே (ஸிர்க்கையே) மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறார்கள். அப்படியானால் றசூலின் சுன்னாவை எடுத்துக் கொள்ளாதவர்கள், சுன்னா என்றால் என்ன? என்பதையே தெரிந்து கொள்ளாதவர்கள், தாங்களும் றசூலைப் பின்பற்றி சுன்னத்வல் ஜமாஅத்தைச் சேர்ந்த உலமாக்கள்தானென்று கூறுவது சுத்தமான பொய்க்கூற்று என்று நான் கூறினால் அது பிழையாகுமா? இவ்வகையினர் தங்கள் அறியாமையால் தங்களை றசூலுடைய உலமாக்களென்று கூறிக்கொண்டாலும் உண்மையை நோக்கினால் இவர்கள் முஸ்ரிக்கான அபூஜஹிலின் கூட்டத்தைச் சேர்ந்தவர்களென்று குர்ஆன் ஹதீஸ் முதலாம் பிரமாணங்கள் தீர்ப்புச் செய்கின்றன. நான் முன்கூறிய ஓர் ஹதீஸை மீண்டும் இங்கே தருகிறேன்.

**ஹதீஸ்**

ஒருமுறை மூன்று காபீர்கள் றசூல்(ஸல்) அவர்களுடைய சமுகத்திற்கு வந்து முகம்மது(ஸல்) அவர்களே! நீங்கள் அல்லாஹ்வுடன் வேறு எந்த இலாஹு வையும் அறியமாட்டீர்களா? (ஏற்றுக்கொள்ளமாட்டீர்களா?) என்று கேட்டார்கள். அப்போது நபி(ஸல்) அவர்கள் ‘லாஇலாஹ இல்லல்லாஹ்’ என்ற கலிமாவைக் கொண்டே நான் நபியாக்கப்பட்டேன், இந்தக்கலிமாவின் பக்கமே நான் மக்களை அழைக்கிறேன் என்று கூறினார்கள். இது சம்பந்தமாகவே ‘குல்அய்யுஷையின் அக்பருஷஹாததன்’ என்ற ஆயத்து அருளப்பட்டது.

அறிவிப்பவர் : அப்பாஸ் (றலி)
ஆதாரம் : துர்ருல்மன்தூர்

இந்த ஹதீஸில் காட்டப்பட்ட ஆயத்தை இப்போது நோக்குவோம்.

**குர்ஆன்: 6:19**

சாட்சிகளில் மிகப்பெரியது எது? என நீர்கேளும். அல்லாஹ்வே எனக்கும் உங்களுக்கும் சாட்சியாக இருக்கிறான். இந்தக் குர்ஆனைக்கொண்டு உங்களுக்கும்(இதை) அடைந்தவர்களுக்கும் நான் அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்காகவே இது எனக்கு வஹிமூலம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. நிச்சயமாக அல்லாஹ்வுடன் வேறு இலாஹுகள் இருப்பதாக நீங்கள் உறுதியாகக் கூறு வீர்களா? என்றும் நீர்கேளும். நான் (அவ்வாறு) சாட்சிகூறமாட்டேன் என்று நீர்கூறி நிச்சயமாக இலாஹு (ஒன்றே ஒன்றுதான்)

ஏகமேதான். நீங்கள் இணையேற்படுத்துவதிலிருந்தும் நான் நிச்சியமாக அப்பாற் பட்டவன் என்றும் கூறுவீராக. மேலும்:-

**குர்ஆன்: 27:64**

அல்லாஹ்வுடன் வேறு இலாஹு இருக்கிறதா? (இல்லை) உண்டென்று நீங்கள் உண்மை சொல்பவர்களாய் இருந்தால் உங்களுடைய ஆதாரங்களைக் கொண்டு வாருங்கள்.

முன்தந்த ஹதீஸையும் இப்போது தரப்பட்டவை போன்ற ஆயத்துக்களையும் பல கண்ணோட்டங்களோடு சிந்தனை செய்து பாருங்கள். பல இலட்சாதி இலட்சம் இலாஹுகள் இருந்து கொண்டிருந்தபோதுதான் இவ்வித ஆயத்துக்கள் அருளப் பட்டிருக்கின்றன என்பதை நாம் நினைவில் இருத்திக் கொண்டால் றசூல்(ஸல்) அவர்களுடையவும் ஸஹாபாக்களுடையவும் முன் சென்ற நபிமார்கள் றசூல் மார்களுடையவும் கொள்கை(சுன்னா) எது என்பதை எம்மால் இலகுவாய் உணர முடியும். நபிமார்களுக்கெதிரான அபூஜஹ்ல் போன்றோரின் கொள்கை சுத்த மான ஸிர்க்கென்பதையும் எம்மால் அறிய முடியும், மேலும் கலிமாவின் பக்கமே நபிமார்கள் மக்களை அழைத்தார்களென்பதையும் அறிய முடியும்.

அல்லாஹ்வுடன் எதுவும்(சூன்யம்கூட) இல்லையென்று அல்லாஹ்வை மட்டும் தரிபடுத்துவது தௌஹீதாகவும், அல்லாஹ்வுடன் அவனல்லா தவையும்(உஜூதுகளும்) உண்டென்று கொள்வது இணைகற்பித்தலென்ற ஸிர்க்காகவும் இருக்கிறது. இவ்வித தவறான விசுவாசம்தான் மனிதனுடைய சொல் செயல்களிலும் ஸிர்க்கை உருவாக்கி விடுகிறது. இவ்வுண்மையை விளங்கிக் கொள்ளாத மிகப்பலர் வணக்கத்துக்குரிய நாயன் யாருமில்லை அல்லாஹ்வைத் தவிர என்று கலிமத்துத்தையிபாவுக்குப் பொருள்கொண்டிருக்கிறார்கள், எழுதியிருக்கிறார்கள். இன்றும் கூறிக்கொண்டி ருக்கிறார்கள். இவ்விதம் பொருள் கொள்வது கலிமத்துத்தையிபாவைக் கலிமத்துல் கபீஸாவாக மாற்றிக் கொண்டிருக்கிறதென்பதை அவர்கள் உணரவில்லை. இப்படிப் பொருள்கொள்வது ஸிர்க்கை உறுதிப்படுத்துமென்பதை உணர்ந்துகொள்ளாத அவர்கள் சுமார் 1410 வருடங்களாக நாங்கள் றசூலின் அடிச்சுவட்டைப் பின்பற்றும், றசூல்(ஸல்) அவர்களின் கூட்டத்திலுள்ள சுன்னத்வல்ஜமாஅத்தைச் சேர்ந்த உல மாக்கள் தானென்று மார்புதட்டுவது மிகப்பெரும் தவறாகும். ஏனென்றால்,

அல்லாஹ்வுடன் அவனல்லாத எதுவும் எப்போதும் இல்லையென்பது றசூலின் கொள்கையென்றும், அல்லாஹ்வுடன் அவனல்லாதவையும் உண்டென்பது அபூஜஹ்ல் போன்ற முஸ்ரிக்கீன்களின் கொள்கையென்றும் குர்ஆன், ஹதீஸ், இஜ்மாஉ, கியாஸ், அறிவு முதலாம் பிரமாணங்கள் எவரும் மறுக்க முடியாதபடி நிரூபணம் செய்து கொண்டிருக்கின்றன. குர்ஆன் ஹதீஸ்கள்தான் இறுதிப்பிரமாணமென்று உறுதி கொண்டிருக்கிறோம் என்றும், குர்ஆனையே எங்கள் இமாம் ஆக ஏற்றுக் கொண்டிருக்கிறோம் என்றும், கூறுகிற கூட்டத்தினர் அல்லாஹ் வேறு சிருட்டியான

இலாஹுவேறு என்று கூறிக்கொண்டிருந்தால் இவர்களை நாம் றசூல்(ஸல்) அவர்களுடைய உலமாக்களென்று கூறலாமா? கன்னத்வல் ஜமாஅத்தினர் என்று நாம் கூறமுடியுமா?

இலாஹு அல்லாஹ் அல்ல என்பது அபூஜஹ்லின் வாதம் இலாஹு அல்லாஹ் அல்லாததல்ல என்பது றசூலின் வாதம். எனவே இலாஹுவானசிருட்டி அல்லாஹ் அல்லாததென்று எவர் ஒப்புக்கொண்டிருக்கிறாரோ அவர் அபூஜ ஹ்லின் (முஸ்ரீக்கின்) கூட்டத்திலுள்ள அமாவாசை ஆலிமாய், மூடராய் இருப்பவரேயன்றி றசூலின் கூட்டத்தைச்சேர்ந்த ஆலிமாய் இருக்கமுடியாது.

எனவேதான் றசூலின் உலமாக்களில் ஒருவனாயிருக்க வேண்டும்மென்று விரும்புகிற ஒருவர் முதலில் குர்ஆன் ஹதீஸுகளைத் தெளிவான அறிவுடைய மக்களிடம் கேட்டறிந்து தெளிவுபெறுவது அவசியமாகிறது. மூடத்தனமென்ற இருள் திரையிலிருந்தும் நூற்கேள்வியறிவென்ற ஒளித்திரையிலிருந்தும் விடுபட்டு 'ரியா' முகஸ்துதி, வரட்டுக்கௌரவம் போன்ற ஜூப்பாக்களை வீசிவிட்டு, வெண்திரைக்கொப்பான உள்ளத்தைப் பெற்றுக்கொண்டால் உயிருக்கு உயிராய் இருக்கும் இறைவனே அவரை ஆண்சிங்கமாக மாற்றிவிடுகிறான். அல்லாஹ் வையன்றி எந்த ஓர் சிருட்டிக்கும் அவர் அச்சப்படமாட்டார். அபூஜஹ்லின் கொள்கையான ஸிர்க்கைத் தன்னிடத்தேயும் பிறரிடத்தேயும் நெருங்கவிடாமல் போராடுவதே உலமாக்களாகிய எமது வேலையென்பதை அன்னோர் உணர்ந்து கொள்கிறார்கள். உண்மையான சுன்னத்வல் ஜமாஅத்தைச் சேர்ந்த றசூலும் தோழர்களும் கலிமாவின் பக்கமே மக்களை அழைத்ததுபோல உலக மக்களைக் கலிமாவின்பக்கமே அழைப்பார்கள். இவ்வகையினரை நாம் றசூல்(ஸல்) அவர் களைப் பின்பற்றிய நல்லடியார்களான கனம்தங்கிய உலமாப்பெருமக்கள்தான் என்று மனப்பூர்வமாய் ஒப்புக்கொள்ளமுடியும். இன்னோர் சுவனம் செல்லும் சுன்னத் வல்ஜமாஅத்தைச் சேர்ந்தவர்கள்தானென்றும் தீர்ப்புக்கட்ட முடியும். ஆதலால் உலமாக்களென்ற போர்வையை எடுத்துக்கொண்ட பெரும்பாலான மக்கள், இனி மேலாவது குர்ஆன் ஹதீஸ்களை உண்மையான தத்துவங்களுக்கமைவாய் விளங்கித் தெளிவுபெற்று இருளில் தத்தளித்துக் கொண்டிருக்கும் பெரும்பாலான மக்களிற்கு அறிவு வெளிச்சம் ஊட்டவேண்டும் என்று உலமாக்களைக் கேட்டுக் கொள்கிறேன். உலக முஸ்லீம்களை மட்டுமாவது நீங்கள் சிந்தனைக்கு எடுத்தால், தங்கள் கொள்கையில் தரிபாடற்று இருப்பதனாலேயே இன்னலுக்குள்ளாகிக் கொண்டிருக் கிறார்களென்பதை உங்களால் உணரமுடியும். உலகிலுள்ள தீமைகளுக்கெல்லாம் பிறப்பிடம் ஸிர்க்குத்தான். நன்மைக்கும் சாந்தி சமாதானத்திற்கும் பிறப்பிடம் தௌஹீதாகும். எனவே உலமாக்களென்ற போர்வையிலுள்ள மக்கள் ஸிர்க்கையும் தௌஹீதையும் மனித அறிவு ஏற்றுக்கொள்ளும் வகையில் மக்களுக்கு வழிகாட்டி, மக்கள் இறைவனின் நேரான பாதையில் செல்ல வழிகாட்டுவது மிகமிக கண்டிப்பான

ஒரு கடமையாகும். இக்கடமையை உதாசீனம் செய்வோர் இம்மை மறுமை இரண்டிலும் இறைதண்டனைக்காளாகலாம் என்று கூறிவைக்க விரும்புகிறேன்.

(ஆது, சமூது, க் கூட்டத்தினரை நினைவு கொள்க).

**குர்ஆன்: 54:17**

(மனிதர்கள்) சிந்தித்து ஆராய்ந்து நல்லுணர்ச்சி பெறும் பொருட்டு இந்தக் குர்ஆனை மிக்க எளிதாக்கியிருக்கிறோம். ஆகவே (இதனைக் கொண்டு) நல்லுணர்ச்சி பெறுவோர் உண்டா?

**குர்ஆன்: 38:29**

(நபியே!) நாம் உம்மீது அருளியிருக்கும் இவ்வேதம் மிக்க பாக்கியமுடையதாகும். அறிவுடையோர் இதன் வசனங்களைச் சிந்தித்து ஆராய்ந்து நல்லுணர்ச்சி பெறுவார்களாக.

**ஹதீஸ்**

ஞான அறிவு மூமீன்களின் தவறிப்போன பொருளாகும். எனவே அதனை எங்கு அடையப்பெறினும் அது அவருக்கே உரிமையுடையதாகும்.

அறிவிப்பவர் : அபூஹுறைறா (றலி)

ஆதாரம் : திர்மிதி



**ஷெய்குல் முப்லிஹீன் எம்.எஸ்.எம். அப்துல்லாஹ் (ரஹ்) அவர்களின் வெளியீடுகள்**

1. ஈமானின் உண்மையை நீ அறிவாயா?
2. ‘பித்அத்’துக்கு உண்மையின் சவுக்கடி (பாகம் 1)
3. ‘பித்அத்’ துக்கு உண்மையின் சவுக்கடி (பாகம் 2)
4. திருக்குர்ஆன் தீர்ப்பு (பாகம் 1)
5. திருக்குர்ஆன் தீர்ப்பு (பாகம் 2)
6. சுன்னத்வல் ஜமாஅத்தினரை தெரிந்துகொள்வது எப்படி? (தமிழ்)
7. சுன்னத்வல் ஜமா அத்தினரை தெரிந்துகொள்வது எப்படி? (ஆங்கிலம்)
8. ஏகத்துவம் பற்றி அல்குர்ஆன்
9. பகுத்தறிவின் நீதிமன்றம் (தமிழ்)
10. பகுத்தறிவின் நீதிமன்றம் (ஆங்கிலம்)
11. பகுத்தறிவின் நீதிமன்றம் (சிங்களம்)
12. ஏகத்துவப் பாடல்கள் (181 பாடல்கள் உள்ளடக்கிய CD இலவசம்) இணையத்தளத்திலும் Download செய்துகொள்ள முடியும்.
    Website: www.mufliheen.org